Goods may be *existing* or *future*. Existing goods are those which are existing at the time of contract of sale. If the goods are to be obtained or to be manufactured or produced, they are called future goods. Thus, I may contract to sell rice bags that are in my godown or I may agree to sell those that may arrive from Rangoon a month hence. I may also agree to sell the rare paintings belonging to my father even before his death since I hope to inherit them. Thus, a sale of future goods is in reality an agreement to sell goods.

Goods may also be classified as *specific* or *ascertained* and *unascertained* goods. Goods identified or described sufficiently without any doubt as to its identity in a contract of sale are specific or ascertained goods. If A agrees to sell B one of the radio sets in his shop, the contract is for sale of unascertained goods. But if B has pointed out a particular radio set in A's shop, then the sale is a sale for ascertained goods.

Sections 7 and 8 explain the position of the parties if the goods perish under different circumstances. If, at the time of contract of sale for specific goods or subsequently before the property passes to the buyer, the goods have perished or become so damaged that they cannot be identified and if the seller is not aware of this, the contract of sale is void.

Price *(Sections 9 and 10)* :

Price, according to sec. 4 (1), is the money consideration for a sale of goods, i.e., goods are purchased or sold in return for payment of money. Price may be paid at the time of contract or at a future date. Thus, a sale may be for cash or on credit. Price may be paid by means of a negotiable instrument such as a cheque, bill or pronote but the seller is not bound to accept them. Price may be stated in the contract or the contract may indicate the method of ascertaining the price. If the price cannot be determined by either of these methods, the buyer shall pay a reasonable price. What is a reasonable price depends upon the circumstances of each case. The contract may also provide for the fixation of price by a third party.

Conditions and Warranties *(Sections 11 to 17)* :

A contract of sale contains certain terms or stipulations to be fulfilled by the parties. These terms are of two kinds—conditions and warranties. A condition is a term which is essential to the main purpose of the contract. A warranty is a term which is subsidiary to the main purpose of the contract. The effect of the breach of a term decides the nature of the term. If a stipulation is breached and if such a breach entitles the injured party to avoid the contract, then the term is a condition. If the breach of a term enables the aggrieved party to claim damages but not to cancel the contract, then the stipulation is a warranty. Whether a term is a condition or a warranty depends entirely on the intention of the parties to the contract. The following example illustrates the point of distinction.

A sells his cow to B and casually says that it will give 2 measures of milk per day. A later finds out that the cow yields only one measure. Though A's statement that the cow yields 2 measures of milk per day is a term in the contract, yet it is not a condition because A and B did not intend that the sale should take place only when the daily milk-yield of the cow is 2 measures. Thus A's representation is only a warranty. If the yield is less than 2 measures, B cannot return the cow but can sue A for damages.

Let us suppose, in the above example, that B has said to A "I will buy your cow if it yields daily 2 measures of milk" and A has said "yes, it gives not less than 2 measures of milk per day." In this case, A's statement is a term of the contract of sale and the term is a condition and not a warranty because B's

purchase depends upon the cow yielding 2 measures daily. On the breach of this term, B can avoid the contract and also sue A for damages. If he has already paid the price, he can recover the price.

Quantity and time of delivery are usually regarded as conditions unless otherwise expressed in the contract. Conditions and warranties may be expressed or implied. The former are those which are stated in the contract. Implied conditions are not stated orally or in writing. But the law presumes them to be existing in every contract of sale unless a contray statement appears in the contract.

Implied conditions

Condition regarding title to goods:—(1) In every sale, the seller has a right to sell the goods. (2) In every agreement to sell, the seller will have the right to sell the goods at the time of transferring the property.

Condition regarding merchantability:—Goods purchased must be merchantable, i.e., they should be such as can be resold as of the same quality.

Condition as to identity:—Goods are sold either by sample or by description. (1) In a contract of sale by description, the goods shall correspond with such description. (2) If the contract of sale is by sample, the goods should be same as the sample in every respect, i.e., every part of the quantity or the whole bulk supplied should be of the same kind and of the same quality as the specimen. The buyer should be given a reasonable opportunity of comparing the bulk with sample. (3) When the contract of sale is by description as well as by sample, the goods shall correspond with both the sample and description.

Condition as to fitness for purpose or as to wholesomeness:—The general law governing sale of goods is 'Caveat Emptor' (let the buyer beware.) Ordinarily in a contract of sale, there is no implied condition as to the quality or fitness for any particular purpose. It is not the duty of the seller to point out the defects in the goods he sells or to find out the suitability of goods for the purpose. The purchaser is expected to take care of the quality or the suitability of the goods he buys. But there are exceptions to this rule. (1) If the buyer tells the seller the purpose for which the goods are required, it is the duty of the seller to supply such articles as will serve the purpose. When a hot-water bottle is asked for, the article sold must be suitable for keeping hot water. (2) If the buyer relies on the skill of the seller in purchasing a suitable article for a particular purpose, it is the duty of the seller to supply an article fit for the purpose mentioned But a seller is free from this obligation when he sells patented commodities. Patented articles are those which are sold under a brand name or trade mark. Ex. Pilot pen and Horlicks. (3) In the case of a contract of sale of provisions, the goods should be wholesome and fit for consumption.

Implied warranties

Warranty of quiet possession:—In a contract of sale, the buyer should have and enjoy quiet passession. This means that the purchaser should be in a position to use the goods undisturbed. If he is prevented from using and enjoying the goods by any person claiming ownership, he is entitled to sue the seller for damages.

Warranty against encumbrances:—In a contract of sale, the goods sold should be free from a pledge or hypothecation or any other charge. Otherwise, the buyer can sue the seller for damages. This does not apply if the fact of encumbrance has been declared or known to the purchaser at the time of contract of sale.

MENTAL HYGIENE

by

V. R. KANNAIAH, B.A. (HONS.),
Lecturer in Logic.

The aim of mental hygiene is to help people to achieve more satisfying and more productive lives through the prevention of anxieties and maladjustments. It is quite unlikely that the goal set by mental hygiene can ever be reached. However, like medical hygiene, it has helped in reducing the occurrence of mental diseases.

The early years of life are most significant for mental hygiene. The initial habits of adjustment to human relations are formed during childhood. A young child has limited resources for meeting with his difficulties and therefore has a great need for understanding and assistance. Strong and unsolved conflicts in childhood can predispose an individual to adjustive difficulties throughout his life. The relationships of the parents to a child are the basis of his principal early adjustments. Since parenthood is almost universal, progress in mental hygiene depends more on the understanding of children by parents than on any other factor.

Psychologists are of the opinion that the most important characteristics of the parent-child relationship are warmth and acceptance. The child is absolutely dependent on his parents and experiences serious conflicts if he feels that he is either unwanted or unloved. This condition of rejection leads to the subsequent adjustive difficulties in the child's later life. There may be two causes of parental rejection of children. Some parents reject their children because they are prevented from accepting and giving love by their own conflicts. Such parents can be helped by working out their own problems by proper advice. Some others may reject their children because they do not understand what a child needs or because they have misconceptions concerning the value of 'discipline' and 'obedience' in character formation or they overvalue the child's need for independence. This kind of rejection can easily be remedied by educating the parents.

The acceptance of a child by parents can be defined in terms of the parents' real attitudes and not in terms of the do's and the don'ts'. For instance there can be no rigid rule as to whether a child should be punished or not. It is quite true that continued and severe punishment always implies rejection and results in anxiety, aggressive antagonism or both. Occasional and appropriate punishment may not be rejecting. However, it may actually relieve a child's anxiety and guilt over his act or it may also show that the parents are interested in his behaviour. In fact a parent who never punishes may be rejecting since it shows that he does not care what happens to the child.

Warmth and acceptance must be distinguished from a parental submission. A mother who smothers a child with excessive affection is usually fulfilling some exaggerated need of her own. Acceptance not only implies the recognition of the child's need for dependence but also the recognition of his need for independence as he grows older.

Another important aspect of the parent-child relationship is its consistency. The child's security depends on the dependability of his environment. He must know what he can depend on. Sometimes the parents praise their children for a certain act and at some other times they punish them or rebuke them for the same act since they are bored. This should be avoided. Inconsistency prevents

a child from learning his role in the family and from developing a clear idea of his own individuality.

Another requirement for good mental hygiene is that a child must always be able to talk about his worries and problems with a parent without fear of being ridiculed or rebuffed. A confidential relationship with a parent has the value of psychotherapy in that the child is able to express his conflicts and get better insight into his own adjustments.

One important defect with educated parents is that they are oversensitive to the imperfections of their children. If the children recognise signs of anxiety in them, they may be unduly disturbed about their own guilt and may rush in to make amends, often doing more harm than good in their emotional fervour.

For adults who have anxieties, or who recognise evidences of poor adjustment in themselves must secure professional help from psychiatrists, consulting psychologists or other qualified persons. Lacking such facilities, some aid can often be secured from friends who can be warm but objective listeners. It is by ventilating one's feelings much relief can be got.

Men Mark when they hit
But never mark when they miss.

—*Bacon.*

MALTHUSIANISM

by

S. V. Srinivasan, IV B.A., IV (B)

Malthus' theory of population :

Some economists were oppressed by the fear that the production of food was limited by the Law of Diminishing Returns whereas the number of mouths to be fed seemed to increase indefinitely. These fears were expressed with singular force by Malthus in 1798 in his essay on the principles of population. In a formula which has since become famous, he asserted that population tended to increase in geometrical progression while food supply can only increase in arithmetical progression. The average period during which population doubles itself is 25 years. He concluded that sooner or later population must out grow the means of subsistence unless this growth is checked by the people themselves, or is the result of such positive checks as famines, wars, epidemics plagues and other abominable scourges, which appear truly providential. He hoped that in the future men would substitute preventive for positive checks and voluntary limit of population through late marriages, etc.

During the 19th century this doctrine wrought immense mischief. Later Malthusians were spoilt by the constant infection and apprehensible proposals. A wide literature best unnamed became current.

Criticism of the Theory of Malthus :

A century has elapsed since the publication of this doctrine and experience has not justified the pessimistic foreboding of its author. Everywhere we see that wealth is increasing at a greater speed than population, both in old and new countries. At present the markets of the world are so encumbered with industrial and agricultural products that governments are raising customs barriers to protect themselves against the inundation of foreign products. The problem of today is, "will production find sufficient markets ?"

The prophecy as to over population has been belied in a striking manner. A decline in birth rate is a problem of modern governments. The question is no more over population but of race suicides and empty cradles. In France population fell from 27 to 18 per thousand between 1850 and 1912. For the same period it fell in England from 33 to 25 and in Germany from 38 to 28 in America from 40 to 27.

The increase of population depends not only on birth rate but upon the death rate also. It makes a great difference in the social progress whether an increase is due to the one or the other. If methods are advocated to cut down the birth rate, presumably, the Malthusians may devise methods to accelerate the death rate also. We cannot justify the one or the other.

Statistics show that the birth rate is lower among the rich classes than among the poor. Therefore the birth rate is sure to fall in proportion, as all classes rise towards a higher standard of life, and the nation itself progresses in well being. Other things being equal, the birth rate seems to fall more rapidly if a democratic system, develops famines, weakens the family just in proportion as the political functions of a woman usurps the natural functions of a mother.

It must be remembered that vast portions of the earth have not yet been touched by the hand of man. These huge uncultivated areas have to be brought under cultivation. It was once estimated that Brazil alone is capable of supplying the entire wheat con-

sumption of the world. Increase of wealth may indefinitely keep ahead of population because a really intensive capitalistic system of agricultural production has never been attempted on a large scale. As Devas says. "If a child is born with a mouth to be fed, it has arms to produce."

Finally, the population depends upon marriage, which again depends on the differentiation of species, where the Divine Government of the world is concerned. It is absurd therefore to suppose that mankind would be reduced to misery. Hence any difficulty that imagination may conjure up should be left to the process of logic, to be solved by the providence of God.

Malthusianism is not reasonable for India for the following reasons. There are vast areas which could be utilised for production but which at present productive of nothing. The quality of production and the quantity can be increased with more scientific methods. Thirdly, the present distribution of wealth is inequitable. The capitalists and the organisers carry away for themselves the lion's share, leaving the wage-earners in the lurch. A certain amount of social reform can remedy this defect. Finally, India is pre-eminently a religious country. If birth-control is a immoral act, as it has been proved undoubtedly, India can never advocate it, as it will be against every decent form of religion and social order.

"...Taking the whole earth...and, supposing the present population equal to a thousand millions, the human species would increase as the numbers 1, 2, 4, 8, 16, 32, 64, 128, 256, and subsistence 1, 2, 3, 4, 5, 6, 8, 9. In two centuries the population would be to the means of subsistence as 256 to 9; in three centuries as 4,096 to 13, and in two thousand years the difference would be almost incalculable"

—*Malthus: Essay Book I, Chapter I.*

QUOTATIONS FROM THE GREAT

by

M. AMANULLAH KHAN, CLASS II, B.SC., BR. I.

Anger is a momentary madness ; so control it or it will control you.
Behind an able man, there are always other able men.
Carelessness does more harm than a want of knowledge.
Drink nothing without seeing it, sign nothing without reading it.
Every dew-drop has the whole of heaven in it.
Familiarity breeds contempt, while rarity wins admiration.
Give me the ready hand, rather than the ready tongue.
Happy the man who has been able to understand the cause of things.
If a blind man leads another blind man both shall fall into the ditch.
Judge not according to appearances.
Kindness gives birth to kindness.
Law is a bottomless pit.
Many receive advice, only the wise profit by it.
Nations like individuals live and die, but civilisation survives.
Open confession is good for the soul.
Performance of one's duty should be independent of public opinion.
Questioning is not the mode of conversation among gentlemen.
Repose is a good thing, but boredom is its brother.
Speech is silvern, silence is golden.
The ink of the scholar is more sacred than the blood of the martyr.
Ugly face is better than an ugly mind.
Virtue is health, vice is sickness.
Who goeth a-borrowing, goeth a-sorrowing.
Xenophon counted the wise man happy.
Young men think old men are fools, but old men know who are.
Zeal in a good cause deserves applause.

"வளர்த்திடுவோம் வாரீர்"

by

தி. பா. இராசன், புகுமுக வகுப்பு, பிரிவு உ.

"வளர்த்திடுவோம் வாரீர்!—கொச்சை என்று சொல்லி பேசுகின்ற தமிழை, பிறமொழியும் கலந்த தமிழை, சிறப்பும் குன்றி வரும் தமிழை, நாம், தழைத்திடச் செய்வோம் வாரீர்" என முழங்குகின்றோம்—முரசு கொட்டுகின்றோம். ஆனால் முழங்கும் ஒலியும் வீண்! முரசும் பாழ்! அஞ்சி ஓடுகின்றோம், அவலநிலை காண்கின்றோம்! ஏன்? மொழி வளமும், மொழி நெறியும் தெரிந்தும் அச்சம் நம்மை தடுக்கிறது. சூழ்நிலையும் சந்தர்ப்பமும் நம்மை விழி மிரள ஓடச் செய்கிறது. எதனால்? நாம் ஓடுவதினால் அல்ல, நம்மை ஓட்ட அவைகள் வலிவும், வளமும் பெற்றிருப்பதனால்? ஆனால் எதிர்த்தவரை எதிர்ப்பது போரில். நம்மை எதிர்த்தவரை, நம் மொழிக்கு ஊறு விளைவிக்கும் வல்லூறுகளை,—பிற மொழிகளை அறிந்தும், தமிழ் மொழியின் சிறப்பு புரிந்தும், தம்நிலை உணர்ந்தும் உணராதவர்போல் முகமூடி போட்டுக் கொள்பவரை—அயலாரை, நாம் வசை மொழிந்து வாயார ஏசுவதில் பயன் இல்லை. அதனால் நாம் வளர்க்கும் மொழியின் இசை குறைந்துவிடுவதாகும்.

இலக்கியத்தால் சிறப்புற்றோம், கவிதைகளால் புகழ்பெற்றோம். இலக்கியத்தின் கண் காணுகின்ற வாழ்வளமும், ஒழுக்க நெறியும் ஓம்பி வந்தோம். ஓம்புதலின் பலனே சீரும் சிறப்பும்; பேரும் புகழும் கிடைப்பன என்ற நல்ல ஓர் நம்பிக்கை கொண்டவர்களானோம். இத்தகைய இலக்கிய வளமும், இலக்கண வளமும் பெற்ற நாம், தமிழை—நாம் வளர்த்த மொழியை, நாவில் ஊர மறுக்கிறோம். ஏன்? அந்நியரால்!—என்பது கிடைக்கும் பதிலாகும். சாம்ராஜ்யக் கோட்டைகளும், அழகான நகரங்களும், அரச பீடங்களும், பெயர் அறியாமல் மறைந்தது அந்நியரால்! கலை கலாசாரம், அரசியல், இன்னும் பிறவற்றிலும் பின்னால் தள்ளப்படுவது அந்நியரால்! அவர்களின் கலாசாரமும் பழக்க வழக்கங்களும் நம்மிடையே பரவி இரண்டறக் கலந்து இது எந்த நாட்டுக் கலாசாரம் என தெரியாமல் மறைவது அந்நியரால்.

ஒரு மொழியின் வளம் குறைய பிற மொழியின் கலப்பால் ஏற்படுகின்ற தீங்கே காரணமாகும் என்பது வெள்ளிடைமலை. கூடுகின்ற மொழி இலக்கியத்தின் சிறப்பைப் பெற்றிருக்கவேண்டும் என்பது உயர்ந்ததோர் கருத்தாகும். இலக்கியத்தின் சிறப்பை,

"Literature is thus Fundamentally an expression of life through the medium of Language"

என்று அட்சன் (Hudson) என்ற ஆங்கில ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டுமன்று, இலக்கியத்தின் நோக்கம் அதன் பண்புகளை எடுத்துக்காட்டுவதாகும். பாடல்களை இயற்றின ஆசிரியர் தான் கண்ட பொருள்களையும் வரலாறுகளையும் உள்ளவாறே குறிப்பிடுவதை ஆங்கிலத்தில், "The principle of Sincerity" என்பார். இலக்கியத்தைப்பற்றி மற்றொரு ஆசிரியர்

"Literature is a record of best thoughts."

இலக்கியம் என்பது நல்ல பல சிறந்த உயரிய கருத்துக்களைக் கொண்டதேயாகும் என்பர். அஃதோடு நில்லாமல் இலக்கியம் என்பது மக்களுக்கு நல்லொழுக்கத்தை புகட்டும் சிறந்த ஓர் கருவியாக விளங்குகிறது என்பதை 'Viscount Morley' என்ற ஆசிரியர் "Literature is one of the most powerful

instruments for forming character" என்று குறிப்பிடுகின்றனர்.

இதுகாறும் கூறியவற்றால் போந்த தொகைப் பொருள் இலக்கியத்தின் சிறப்பும், இலக்கியம் என்றால் என்ன என்பதை பற்றியும், அது தரும் விளக்கம் பற்றியும், எப்படி நமக்கு அது உதவுகிறது என்பது பற்றியும் கண்ணுற்றோம்.

இவ்வாறு இலக்கியத்தின் முக்கியத்தைப்பற்றி தெரிந்தவர் எத்தனை பேர்? இந்நாட்டு மூன்று கோடி மக்களுள், தன் பெயரைமட்டும் எழுதத் தெரிந்துகொண்டவரும் அரைகுறை படிப்பாளரும் பட்டம் பெற்றவர்களும் உள்பட 15 அல்லது 16 சதவிகிதம் என்று தெரிந்தெடுத்திருக்கிறார்கள். இந்த நிலையிலே நாம் பிற மொழியினை—வளம் குறைந்த, இலக்கியம் என்ற வார்த்தை அறியாத, இலக்கணம் வரையறுக்கின்ற மொழியைக் கற்றல் நன்று என்று பறையறைந்தாலும், தாய்ப்பாலை குடித்து குன்று வளத்தோடு வளருகின்ற ஓர் குழந்தைக்கு வேறு கலப்பு பாலைகுடிப்பதினால் எந்த நிலை ஏற்படுமோ அதே நிலைதான் வளம்காணு மொழியை கற்பதில்லை! ஆங்கிலம் கற்றோம், அறிவிழந்தோமா? இல்லை. செறிந்த அறிவு பெற வசதி பெற்றோம். நம் மொழிக்கு ஊறு விளைவிக்கக் கூடியதாக அமையவில்லை. ஆங்கிலத்தின் அவசியத்தைப் பற்றி பேசவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அளவுக்கு, பல மொழியும் ஒன்று சேர்ந்து உலகத்திற்கோர் மொழியென உபயோகப்படுத்துகின்ற தரத்திற்கு நம்மிடையே வளர்ந்துவிட்ட காரணத்தால் பேசுகின்ற சொல்லுக்குச் சொல் அறுபது சதவிகிதம் ஆங்கில வார்த்தைகளை உபயோகிக்கின்றோம் என்பது கற்றோர் அறிந்த வாய்மொழியாக அமைந்திருக்கிறது. நிற்க.

மொழியின் உணர்ச்சியாலே இனம் பிரித்து வைத்திருக்கிறார்கள். கி. மு. 3000 வருடங்களுக்குமுன் இனம் என்றே தெரியாமல் இருந்தது. வஞ்சம், வஞ்சகம், களவு, கட்குடி முதலிய பஞ்சமா பாதகங்கள் இருந்ததில்லை. நாட்டின் வளர்ச்சியிலே இனமும் தன்னை வளர்த்துக் கொண்டது. வளர்ந்து ஆண்டு பல ஆகின்றன. இன்னும் நாம், சாதி (caste) என்ற இடத்திற்கு நேராக நாயுடு பிள்ளை, முதலி என்று குறிப்பிடவேண்டிய நிலையை ஏற்படுத்திக் கொண்டோம். இதைத்தான் இடைக்காலக் கவிஞர், உயர்ந்த சாதி என்று கருதப்படுகின்றவரானாலும் மனம் துணிந்து, உண்மை அறிந்து, உள்ளத்தின் எழுச்சியை உள்ளவாறு கூறினர். எட்டயபுரத்தார்—பாரதியார்!

தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தம்
திக்கை வணங்கிடும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே நின்று
கும்பிடும் ஏசு மதத்தார்.
யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

என்றும்,

" சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாபம்
ஏழையென்றும் அடிமையென்றும்
எவருமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே ".

என்று கடவுட் கொள்கையிலும், சாதியைப்பற்றிக் கூறியும் மக்கள் பின்பற்றுவராக இல்லை. தமிழன் ஆண்ட காலத்தில் (கி. மு. சுமார் 10,000—3000. முற்காலம், கழகக் காலம் கி. மு. சுமார் 3000—கி. பி. 200.) இந்த அறிவுரை தேவைப்பட்டதாகத் தெரியவில்லை. மெய்யுணர்வு நுட்பங்களும் உலகுயிர், இறை இயல்புகளும் ஐயந்திரிபின்றி அறிந்த மெய் வாழ்க்கையினர் நம் முன்னோர். இன்று இனத்துள் சமயமும் கலந்துவிட்டது. அன்றை மக்கள், நிறைந்த, சிறந்த வாழ்வுடையராதலின் சமயத்தை பேச்சுக் கலையாக, வழக்குக் கலையாக, ஆராய்ச்சிக் கலையாக வைத்துக்கொள்ளாமல் வாழ்வே சமயம் என்னும் செயல் நிலையில் நின்ற மோன ஞானியார். நல்வாழ்க்கையை மேற்கொண்டிருக்கின்ற மக்களாகிய நாம், அறஞ்செய்து பாவத்தைப் போக்க வேண்டும், புண்ணியம் சேர்க்கவேண்டும் என்று ஒரு சிலர் கருதிடினும் அது விளையாத பூமியில் வித்திட்டது போலாகும்.

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் கொடைப் பண்பில் சிறந்து விளங்கினான். அவன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியோடுபோர்ப்புறத்துப் பொருது வீழ்ந்து கிடக்கிறான். அவனைக் காண கழாத்தலையார் எனும் புலவர் அவண் வருகின்றார். அவனைப் போர்க்களத்தில் நோக்குதல் அவர் நோக்கமேயன்றி பரிசு பெறுவது அல்ல. எனினும் அவ்வரசன் பரிசில் சிறந்தவனாகையால் தன் கழுத்திற்கு அணியென விளங்கின முத்தாரத்தைக்கொடுத்தனன். உண்மை கொடைப்பண்பு விளங்குகிறது!

பாவ புண்ணியமென்பது, ‘பாச்சி, பாச்சி என்றழும் பாலர்க்கு பூச்சி, பூச்சி என்பது போலாம்’ என்ற உண்மைக் கருத்தை உணராதவர்கள் பாவ புண்ணியத்திற்காக அறத்தை வேண்டுவது மடமைக்கு வித்தாகும். அறிவியல் கலையைக் கற்கின்ற நேரத்தில் ஒவ்வொன்றும், ஏறக்குறைய எல்லா பரிசோதனைகளுக்கும் அடிப்படைத் தத்துவத்தை காண்கின்றோம். மேற்கூறியவற்றில் அடிப்படை தத்துவத்தைக் காணமுடிவதில்லை, காணவும் முடியாது.

இன்னும் கூற எஞ்சியிருப்பது ஒன்றே ஒன்று. அது, தமிழிலிருந்து பிறந்தது தான் மற்ற சுற்று மொழிகள் என்பது. அதற்கெல்லாம் தாயென விளங்குவது நம்மொழி தமிழே! உதாரணத்திற்குச் சொன்னால்,

தமிழ்	—	**மராட்டி**
தாய்	—	ஆயி
மாமன்	—	மாமா
அலை	—	ஹலாவ்
குண்டு	—	குண்ட
சிவண்	—	சிவண்
தமிழ்	—	**இந்தி**
ஆம்	—	ஹாம்
மாமன்	—	மாமா
இத்தனை	—	இத்னா
உம்பர்	—	உப்பர்
நரம்பு	—	நரம்
தமிழ்	—	**வடமொழி**
வடக்கு	—	ஊசி
கிழக்கு	—	பாசி
சோறு	—	சாதம்

இந்த விளக்கங்கள் தமிழுக்குள்ள மேம்பாடும், தொன்மையும் விளக்குகிறதன்றோ!

சிலர் மொழி பெயர்த்தல் நன்றன்று என்று சொல்லக்கூடும். அது முற்றிலும் தவறு. ஒரு நூலைத் தொகுக்கும்பொழுது நல்ல கருத்துக்களை மக்களுக்குத் தேவையானவற்றை செய்தலில் குற்றமொன்றுமில்லை. அதை நாம் நன்றென்று கொள்வோம்.

> “தொகுத்தல், விரித்தல், தொகை
> விரி, **மொழிபெயர்த்** ததர்ப்பட
> யாத்தலோ டனைமர பினவே”
> (தொல். மரபியல், 97)

என்ற நூற்பாவின்படி தொல்காப்பியர் நூல் செய்யும் வகையில் மொழி பெயர்ப்பினையும் ஒன்றாகக் கூறியுள்ளார்.

எனவே மாணவர்களாகிய நாம்உலகத்தோடு ஒழுக ஓர் மொழியையும் பிறந்த தாயிற்கு அளிக்கும் உறுதி வாக்காக நம் தமிழ் மொழியையும், புறத்தாலும் அகத்தாலும் உண்மை நாகரீகம் வளர்ச்சிபெற நல்லெண்ணங் கொண்டோராய் பகுத்தறிவிற் கொப்ப கருத்தினை “வளர்த்திடுவோம் வாரீர்”.

திருவள்ளுவரும் உழவுத் தொழிலும்

by

K. மீனாட்சிசுந்தரம், நான்காம் கலை வகுப்பு.

உழவு இல்லையேல் உலகம் இல்லை. மனிதன் தோன்றின நாள் முதற்கொண்டு தன்னுடம்பைக் காத்துக் கொள்ள ஏதோ ஒரு வகை ஆகாரம் அவசியம் என்று உணர்ந்திருந்தான். காலம் செய்த அறிவாற்றலினால் மனிதன் தனக்குத் தேவையான உணவைத் தானே பயிரிட்டு உண்ணத் தொடங்கினான். இன்றைய உலகில் அது மிகமிகப் பெருகி மக்களின் பல்வேறு வகை உணவுப் பொருள்களை, உழவின் மூலம் அடைகின்றோம்.

பண்டைத் தமிழ்நாடு உழவுத் தொழிலில் சிறப்புற்று விளங்கிற்று. பலவகை உணவுப் பொருள்கள் பயிரிடப்பட்டன. நம் நாட்டுப் புலவர்கள் உழவின் மேன்மையை நன்கு அறிந்திருந்து, நல்ல பாடல்களின் மூலம் அவ்வுண்மையை விளக்கியிருக்கின்றனர். கம்பர் ஏரெழுபது என்னும் நூலில் உழவின் மேன்மையை நன்கு விவரித்திருக்கின்றார். "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது," என்று ஒளவைப் பிராட்டியும் உழவின் இன்பத்தைப்பற்றி இயம்புகிறார். மற்றும் நல்வழி, புறநானூறு, சிலப்பதிகாரம், குறுந்தொகை போன்ற பல அரிய நூல்களிலும் உழவின் மேன்மை வெகுவாகப் புகழ்ந்தும், சிறப்பித்தும் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் தலைசிறந்த புலவர்களுள் ஒருவரான, திருவள்ளுவர், தனது நூலில் உழவைப்பற்றி ஒரு அதிகாரம் இயற்றியுள்ளார். இக்காலம், அக்காலம் அன்றி முக்காலத்தும் பயன்பெறும் என்று போற்றப்படும் திருக்குறளில், வள்ளுவர் உழவின் மேன்மை, உழுவோரின் மேன்மை, நிலத்தின் மேன்மை முதலியன பற்றி நன்கு விளக்கம் தந்துள்ளார்.

உழவுத் தொழில்தான் உலகிலேயே உன்னதமானது. உழவுத்தொழிலன்றி, மற்று ஏனைய தொழில் புரிவோரும், உழவை நம்பித்தான் வாழ்கின்றனர். உலகுக்கு உணவூட்டும் தொழில் உழவுத் தொழில். மக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்பத்தை பயப்பது உழவு. உணவு இன்றெனில் ஒருவன் இன்பமாகவோ, சுகமாகவோ வாழ இயலாது. உழவின் மேன்மையை விளக்கவந்த வள்ளுவர், அஃது மற்றத் தொழில்களைவிடக் கடினமாயிருந்தாலும், அதனை விட்டொழித்தல் கூடாது என்று கூறுகின்றார். மேலும் இந்தக் கருத்தினை உறுதிப்படுத்த, வள்ளுவர், உழவு அன்றி வேறு எவ்வகை நெறிகளில் உழன்று திரிந்தாலும், உலகத்தார் ஏருடையவர் வழியே தான் வருவார், ஆதலின் வருந்தியும் உழைத்தலே நல்லது என்கின்றார்.

உழவுத்தொழில் முக்கியமாயின், அதனைப் புரிவோர் யார்? அவர்கள் உழவர்கள்; உழவர்கள் இன்றேல் உழவு இல்லை, உழவு இன்றேல் உணவு இல்லை. ஆக உழவர்கள் உலகத்துக்கு உணவளிப்பவராகின்றார்கள். உழவர்கள் தங்கள் நிலங்களை உழாவிட்டால் நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி முதலியவை அதிகரிக்கும். பொருள் எவ்வளவு இருப்பினும் உணவு இல்லையேல் மனிதன் வாழமுடியாது. உழவர்களின் மேன்மையை விளக்கவந்த வள்ளுவர் அவர்களை தேருக்கு அச்சாணி போன்றவர்கள் என்று கூறுகின்றார். ஒரு தேர் எவ்வாறு அச்சாணி இன்றி நிற்க இயலாதோ, . எவ்வாறு அச்சாணி இன்றி நகர இயலாதோ, அவ்வாறே உழவர்கள் இல்லையெனில் உலகத்தார் வாழ முடியாது. உழுதுண்டு வாழ்பவர்கள் தான் இவ்வுலகில் மானமுடையவராக வாழ்கின்றவர்களாவார்கள். ஏனெனில் அவர்கள் உழைப்பின் உயர்வை உணர்ந்து உண்டு வாழ்கின்றனர். ஆனால் உழாது சோம்பி வாழ்பவர்கள் மாற்றாரி

டம் மண்டியிட்டு, வணங்கி அவர்கள் இடும் உணவை உண்டு வாழும் இழிதன்மை யுடையவராவர்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்(று) எல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்".

உழவும், அதனை ஆற்ற உழவர்களும் அவசியமாயிருக்க, அதனைவிட அவசியம் பயிர் செய்யும் முறையாகும். நிலத்திலே விதைகளை விதைத்துவிட்டால் அது நல்ல பயிராக ஆகமுடியாது. பயிர் செய்வதற்கு நிலத்தை நன்முறையில் உழுது பக்குவப் படுத்தவேண்டும். நிலத்தை சீரான முறையில் அகலமாகவும் ஆழமாகவும் உழுதல் மிகமிக அவசியம். மேலும் நிலத்திலே பயிரிட்ட நாள் முதற்கொண்டு அதனைக் காப்பாற்ற வேண்டுதல், எல்லாவற்றினும் அவசியமாகும். நிலத்தை உழுதலின் அவசியத்தை விளக்க வந்த வள்ளுவர், ஒரு பலம் மண்ணை காற்பலம் ஆகுமாறு நிலத்தை நன்கு உழுது காயவிடுவானேல், அந்த நிலம் எரு இல்லாமலே நல்ல விளைச்சலைத் தரும் என்கின்றார்.

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்து எருவும்
வேண்டாது சாலப் படும்".

நிலத்தை உழுது நன்கு பயிர் செய்தால்மட்டும் போதாது. அதனை தினந்தோறும் சென்று கண்டு ஆவன புரிதல் வேண்டும். அவாவது களை எடுத்தல், நீர் பாய்ச்சல், எரு இடுதல் முதலியன அத்தியாவசியமானவைகள். இங்ஙனம் ஒருவன் தன் நிலத்தைக் காக்கவில்லையெனில், ஒருவனால் காப்பாற்றப்படாமல், விடுபட்ட அவனுடைய இல்லக்கிழத்தி எங்ஙனம், அவனின்றும் மாறுபட்டும், வாழ்வில் வெறுப்பேற்பட்டும் ஒழுகுவாளோ, அவ்வாறே அந்த நிலமும் அவனுக்கு மாறுபட்டு நல்ல விளைச்சலைத் தராமல் ஒழிந்து போகும், என்று வள்ளுவர் நிலத்தைக் காக்க வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்துகின்றார்.

எந்த வகைத் தொழிலிலும் சோம்பல் இருக்கக்கூடாது. சோம்பி இருப்பவன் தன் வாழ்வைச் செம்மைப் படுத்திக் கொள்ள இயலாது. உழவுத்தொழிலில் சோம்பி இருத்தல் கூடாது. வேண்டுவோர் வேண்டியனவற்றை எல்லாம் தரும் இயல்பினை உடையது நிலம். அத்தகைய நிலத்தைக்கண்டு ஒருசிலர், நாங்கள் வறியராக இருக்கின்றோம் எங்களுக்குப் பொருள் இல்லை, இல்லாத காரணத்தால் பயிர் செய்ய இயலவில்லை என்று கூறிக் கொண்டு, சோம்பியிருப்பது இழிவுடையோர் செயலாகும். உழவு முதலிய தொழில் செய்வோர்க்கு நிலம் நல்ல பலனைத் தருவதைக் கண்ணுக்கெதிரே கண்டிருந்தும், அதனைத் தாமும் செய்யாது சோம்பியிருப்பவாது மடமையை எண்ணி நிலமகள் நகைப்பாள், என்று வள்ளுவர் சோம்பலுடையவர்களை இழித்துக்கூறி உழவின் பெருமையை இதன் மூலம் சொல்லாமல் விளக்குகின்றார்.

"இலம் என்றசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்".

மேற்கூறியவற்றால், வள்ளுவர், உழவுத் தொழில் தான் உலகத்தில் மிக மிகச் சிறந்தது என்பதை உள்ளங் கை நெல்லிக்கனிபோல் நன்கு விளங்குமாறு கூறியிருக்கின்றார் என்பது புலனாகும். அவர் உழவுத் தொழிலின் மேன்மையையும், உழவர்களின் உயர்வையும் நிலம் செயல் வகையையும், அஃதினைச் செய்யாதிருப்போரின் இழிமையையும் நன்கு உணர்ந்து கூறியிருத்தலால், வள்ளுவர் உழவுத் தொழிலை நன்முறையில் அறிந்திருந்தார் என்பது புலப்படும். நம் நாட்டிலும் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம், உழவின் மேன்மையை உணர்ந்த அரசாங்கத்தார், அத்தகைய உழவுத் தொழில் சிறப்புற்று நன்முறையில் பயன்தர, வேண்டிய வசதிகளைச் செய்திருக்கின்றனர்.

உண்ட விட்டிற்கு இரண்டகம் நினைப்பதா அல்லது அறத்தைப் பேணுவதா?

by

E. ரமணன், IV Class B.

ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய இன்றியமையாத பண்புகளில் அறமும், செய்நன்றி மறவாமையும் ஆகிய இவ்விரு பண்புகள் மிக இன்றியமையாதவை. இவ்விரு பண்புகளை ஒப்பிட்டு நோக்கும்போது எந்த பண்பு மனிதனுக்கு மிகவும் முக்கியமானது என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். அறம் என்பது கொலை, களவு, காமம், முதலிய கொடிய செயல்களைச் செய்யாமலிருத்தலாகும். செய் நன்றி மறவாமை என்பது நமக்கு மற்றொருவர் செய்த உதவியை மறவாதிருத்தலாகும்.

நாம் நம் தெள்ளு தமிழிலுள்ள பண்டைய இலக்கியங்களை நோக்குமிடத்து, அவைகளில் அறம், மற்றும் பலவகை நற்பண்புகளை மக்களுக்கு எடுத்துக்காட்டி இருப்பினும், அவைகளில் செய் நன்றி மறவாமையே மிகவும் இன்றியமையாத பண்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது. நாம் இங்கு எடுத்துக்காட்டாக எடுத்துக்கொண்ட நூல்கள் (1) உஹன்று. லகம் போற்றும் திருக்குறள் (2) தலை சிறந்த கம்ப இராமாயணம். (3) நீதிகளுக்கு உறைவிடமான மகாபாரதம்.

இந்திய மக்களேயன்றி, அன்னிய நாட்டவரும் மிக ஆவலுடன் விரும்பிப் படிக்கும் நூல் திருக்குறளாகும். தெய்வப் புலவர் வள்ளுவனார் தம் ஒப்புயர்வற்ற திருக்குறளில் பல நீதி நெறிகளை மக்களுக்கு மிகத் தெள்ளிய முறையில் ஆனால் சுருக்கமாக ஒன்றரை அடிகளில் எடுத்துக் கூறியுள்ளார். அவர் பல நீதிகளைக் கூறியிருப்பினும் அவர் செய் நன்றி மறவாமை என்ற அதிகாரத்தை வலியுறுத்தி இருப்பதைப்போல் மற்ற எந்த அதிகாரத்தையும் வலியுறுத்தவில்லை.

> எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்—
> உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

இந்த ஒரே குறளில் செய் நன்றி மறவாமையின் இன்றியமையாத தன்மையை மிகத் தெள்ளிய முறையில் கூறி முடிக்கிறார். எந்த தீய செயல்களை அதாவது அறமற்ற செயல்களைச் செய்தாலும் அவன் அக் குற்றங்களினின்றும் மன்னிக்கப்படுவான். ஆனால் அவன் செய் நன்றியை மறப்பானேயாகில் அவனுக்கு உய்வே இல்லை எனக் கூறுகிறார். ஆகவே அறத்தைவிட செய் நன்றி மறவாமையே மிக முக்கியமான பண்பு என்பது வலியுறுத்தப்படுகின்றது.

இனி கம்ப ராமாயணத்தை எடுத்துக்கொள்வோம். கல்வியில் பெரியவன், சொல்லின் செல்வன் என்று சான்றோர்களால் புகழப்படும் கம்பனும் தனது ஈடு இணையற்ற கம்ப இராமாயணத்தில் அறத்தைவிட செய் நன்றி மறவாமையே சிறந்த பண்பு என வலியுறுத்துகின்றார் கும்பகருணன் மூலம்.

கும்பகருணன் இராவணன் தம்பியாவான். இராவணனால் ஊணும், உடையும், மற்ற எல்லா வசதிகளையும் பெற்று வளர்ந்தவன். இராவணன் அறத்திற்கு மாறாக மற்றவன் தவத்தியும் கற்பின் செல்வியுமான சானகியை சிறை எடுத்துவந்து அதன் மூலம் இராமனுடைய பகையை மேற்கொள்ளுகின்றான். ஆகவே இராவணன் இராமனிடம் போர்க்களத்தில் தோற்று இலங்கை புகுந்து கும்பகருணனை அழைத்து இராமனுடன் போரிட்டு வரும்படிக் கூறுகின்றான். கும்பகருணன் பல அறிவுரைகளை கூறியும் இராவணன் கேளாது போகவே இறுதியில் கும்பகருணன் போர்க்களம் செல்கின்றான்.

போர்க்களத்தில் அவனுடைய தம்பியான விபீடணன் கும்பகருணனை இராமன் பக்கம் வந்து சேரும்படியும், அவ்வாறு அவன் சேருவானேயாகில் அவனுக்கு இலங்கை ஆட்சியும் கிடைக்கும் மற்றும் அவன் தேவர்கள், முனிவர்கள் யாவராலும் புகழப்படுவான் என்னும் பல அறவுரைகளைக் கூறுகின்றான். ஆனால் கும்பகருணன் செய்தது என்ன? அவன் தன்னை இது நாள்வரை ஊண், சட்டை

முதலியவற்றை கொடுத்து தன்னை வளர்த்த தமையனுக்காக உயிர் விடுவதா? அல்லது அறத்தைப் பேணற் பொருட்டு தன் தம்பியைப் போல் இராமன் பக்கம் சேர்ந்து இராவணனை எதிர்ப்பதா? என யோசிக்கின்ருன். இறுதியில் அறத்தைக் காட்டிலும் செய் நன்றி மறவாமையே இன்றியமையாதது என உணர்கின்ருன். ஆகவே விபீடணனை நோக்கி

"கருத்திலா இறைவன் தீமை கருதினுல் (அ)
தனைக் காத்துத்
திருத்தலாமாகிலன்றே திருத்துதல்?
தீராதாயின்,
பொருத்துறு பொருளுண்டாமோ? பொரு
தொழிற்குரியாரான
ஒருத்தரின் முன்னஞ்சாதல் உண்டவர்க்
குரியதம்மா".

எனக் கூறுகின்ருன். இறுதியில் போர் செய்து தனது உயிரை இழக்கிருன். ஆகவே அறத்தை காட்டிலும் செய் நன்றி மறவாமையே மிகவும் இன்றியமையாத பண்பு என கம்பரும் வற்புறுத்து கிருர்.

இனி நீதிகளுக்கு உறைவிடமான மகாபாரதத்தி லும் அறத்தைவிட செய் நன்றி மறவாமையே மிகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. கர்ணன், குந்தி யின் புதல்வனுகப் பிறந்தாலும், அவளால் பழிக்கு அஞ்சப்பட்டு இளமைப் பருவத்தில் ஆற்றில்விடப் பட்டான். அவன் துரியோதனனுல் வளர்க்கப்படு கின்ருன். பின் பாரதப் போர் மூண்டபோது, கர்ணனுல், பார்த்தனுக்குத் தீமை நேரும் என்பதை உணர்ந்த மாயாவியான கண்ணன் குந்தியை ஏவி, உண்மையை வெளிப்படுத்தி கர்ணனை தம் பக்கம் அதாவது பாண்டவர் பக்கம் சேர்க்க அனுப்பு கின்ருன். குந்தி கர்ணனை அடைந்து உண் மையை வெளிப்படுத்தி, தான்தான் அவனுடைய தாய் என்றும், பஞ்சபாண்டவர்கள் அவனுடைய உடன் பிறந்த சகோதரர் என்றும் கூறி அவனை துரியோதனனை விட்டு நீங்கி, பாண்டவர் பக்கம் சேர அழைக்கிருள்.

ஆனுல் கர்ணன் செய்தது என்ன. பஞ்சபாண் டவர்கள் துரியோதனனை எதிர்த்துப் போரிடுவது நியாயமான செயலே யானுலும், மேலும் அவர்கள் தன்னுடன் உடன் பிறந்தவர்களாக இருந்தாலும், அவ்வாறு அவர்கள் பக்கம் சேர்ந்து போரிடுவது அறச் செயலேயானுலும், அவன் அதற்கு இசைய வில்லை. தனக்கு இதுநாள் வரை ஊண், உடை முதலியவற்றை அளித்ததோடல்லாமல் அரசாட்சி யையும் நல்கிய துரியோதனனுக்கு எதிராக பாண்டவர் பக்கம் போய்ச்சேர்ந்து உண்ட வீட் டிற்கு இரண்டகம் நினைக்கும் செய் நன்றி கொன்ற வனுக மாற அவன் இசையவில்லை.

ஆகவே பாசம், அறம் ஆகிய எல்லாவற்றையு விட செய் நன்றி மறவாமையே சிறந்த பண்பு என்பதில் கடுகளவேனும் ஐயமில்லை.

தான் செய்யும் செயல்களுக்குத் தான் பொறுப்பாளியா?

by

வி. மாயகிருஷ்ணன், IV B.A. IV b.

ஒருவன் தான் செய்யும் செயல்களுக்குப் பொறுப்பாளி ஆவானா? ஒருவன் தவறு செய்தால் அவனைத் தண்டிப்பது சரியாகுமா? ஒருவன் உயர்ந்தவனாகப் பிறரால் போற்றப்படுவதற்கு அவன் தான் காரணமா? தவறு செய்பவனைத் தண்டிப்பது சரியாகுமா?

'கட்டுப்பாடுகள் இன்றிப் பிறந்தான் மனிதன். ஆனால் அவன் உலகக் கட்டுப்பாடுகளுள் ஆழ்த்தப்படுகிறான். ஏன்?' என்றார் பிரஞ்சு மேதை ரூஸோ; நன்மை தீமையறியாத தூய உள்ளத்தோடு இளமையில் குழந்தையாகத் திரிகிறான் மனிதன் என்றார் ஆங்கில மேதை லாக். அப்படித் தூய உள்ளத்துடன் உள்ள குழந்தை, மனிதனாக, மாண்புடையவனாக பெரியோனாக ஆகும்போது தான் செய்யும் செயல்களுக்குத் தான் தான் பொறுப்பாளி என்று கூறுவது முறையா? மனிதனுடைய பாரம்பரியமும், பாரம்பரியத்தாலும், சூழ்நிலையாலும் உருவாக்கப்பட்டதன் குணங்களும், மற்றும் பிற சந்தர்ப்ப சூழ்நிலைகளுமே அவன் செய்யும் செயல்களுக்குப் பொறுப்பேயன்றி, அந்த மனிதன் அல்ல. எனவே பாரம்பர்யம், சந்தர்ப்பம், சூழ்நிலை இவைகளால் உண்டாக்கப்பட்ட அவனைக் குற்றம் புரியும்போது, குற்றம் புரிவதற்குக் காரணமான பாரம்பர்யம், சந்தர்ப்பம், சூழ்நிலை முதலியவற்றைப் புறக்கணித்துவிட்டு, அவனை, அம்மனிதனைமட்டும் தண்டனைக்கு உட்படுத்துவது சரியாகுமா?

மனிதனுடைய செயல்கள் அவனுடைய உள்ளக்கருத்துக்களுக்கும், அவனுடைய குணத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் கட்டுப்பட்டு இருக்கிறது. மனிதனின் குணங்கள் பாரம்பர்யத்தைக் கொண்டு பெரும்பாலும் உருப்படுகின்றன. குழந்தைகள் பெற்றோர்களை ஒத்து இருக்கின்றன. அதற்கேற்ப 'நூலைப்போல சேலை, தாயைப்போல பிள்ளை' என்று நாம் சொல்லக்கேட்டு இருக்கின்றோம். பெற்றோர்களுக்கு உரிய குணங்கள் குழந்தைகளுக்கு அமைந்திருப்பதை நாம் காண்கிறோம். பக்தி உடையவரின் பிள்ளைகள் பக்திமான்களாகத் திகழ்வதும் உண்டு. அல்லது சந்தர்ப்பவசத்தால் நேர்மாறாகத் திகழ்வதும் உண்டு. உடல் அமைப்பு, உயரம், நிறம், உடல் உறுப்புக்கள் பாரம்பர்யத்தைப் பொறுத்தவை, அவற்றிற்குத் தக்கபடி குணங்களும் வேறுபாடு அடைகின்றன. பரம்பரையாக வரும் வியாதிகள் உண்டு. உடலைப் பொறுத்து உள்ளம் அமைவது உண்டு. உடலை நான்கு வகைகளாகப் பிரிப்பார்கள். ஒரு வகை உடல் அமைப்பை உடையவர்கள் உடல் எப்போதும் உஷ்ணமாகவே இருக்கும். அவர்கள் இனிப்பை விரும்புவது இயற்கையாக அமைந்து விடுகிறது. இவ்வாறு அவர்கள் மனம் தித்திப்பான பண்டங்களை மற்றவர்களைவிட அதிகமாக நாடுகிறது. இவ்வாறு சிலவகை உடம்பினர் உரைப்பை அதிகமாக நாடுகின்றனர். இவ்வாறு ஆண்மைக்கும் பெண்மைக்கும் உரிய சுரப்பிகளும், நாளமில்லாச் சுரப்பிகளும் உள்ள விகிதத்தைக் கொண்டு குணம் வேறுபாடு அடைகிறது. அலிகள் இதற்கு முக்கியமான எடுத்துக்காட்டு ஆவார்கள். பெண்மைக் குணம் படைத்த ஆண்களையும், ஆண்மைக்குணம் படைத்த பெண்களையும் நாம் அன்றாட வாழ்க்கையில் காண்கிறோம். இவ்வாறு பாரம்பர்யத்தைக் கொண்டு குணம் உருவடைகிறது. ஆனால் அவன் செயல்கள் குணங்களைக்கொண்டு உருப்பெறுகிறது.

சூழ்நிலையைப்பொறுத்தும் மனிதனின் குணம் வேறுபாடு அடைகிறது. குளிர் நாடுகளில் உள்ள மக்கள் வெப்ப நாடுகளில் உள்ள மக்களைவிடப் பலசாலிகளாக உள்ளனர். இவர்களுக்குள் குணம் உடலுரத்தைப் பொறுத்து வேறுபாடு

அடைவதும் உண்டு. இரட்டைக் குழந்தைகளில் ஒன்றை கிராமத்திலும், மற்றொன்றை நகரத்திலும் வளர்த்தால் இரண்டு குழந்தைகளும் குணத்தில் வேறுபாடு அடைகின்றன. படித்தவர் மத்தியில் வளரும் சிறுவன், படியாதவர் மத்தியில் வளரும் சிறுவனின் குணத்தினின்றும் வேறுபாடு அடைகின்றான். ஒவ்வொருவருடைய குணமும் அவரவர் நாட்டின் பழக்கவழக்கங்களைப் பொறுத்தும், அவரவர் நாட்டின் பண்பாடுகளைப் பொறுத்தும் வேறுபாடு அடைகிறது. குணமானது அவரவர் சமுதாயத்தைப் பொறுத்தும் அவனை வளர்ப்பவர்களைப் பொறுத்தும் மாறுபாடு அடைகிறது. ஓநாயால் வளர்க்கப்பட்ட ஒருவன் ஓநாயைப்போல நடக்கவும், பேசவும் கற்றுக் கொண்டான் என்பதை நாம் கேள்விப்பட்டு இருக்கிறோம். பெற்றோர்கள் கற்பிப்பதின்படி குழந்தைகளின் குணங்களும் மாறுபடுகிறது. அமெரிக்காவில் உள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம், நீக்ரோக்களை அவர்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிடவேண்டும் என்றும், மற்ற வெள்ளையர்களைக் குறிப்பிடும் போது மிஸ்டர், மிஸஸ் என்று அவர்கள் பெயருக்கு முன் சொல்லி அழைக்க வேண்டும் என்றும், நீக்ரோக்களுடன் ஒன்றாக அமர்ந்து உணவு உட்கொள்ளக் கூடாது என்றும் கூறுவதால் அக்குழந்தைகளுக்கு இயற்கையாகவே கறுப்பு மனிதர்களிடம் ஓர் வெறுப்பு உண்டாகிவிடுகிறது. இளமையில் குழந்தைகள் திருடுவதை உற்சாகப்படுத்தினால் அவர்கள் பிற்காலத்திலும் திருடர்களாகத் திகழ்கின்றனர். 'தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டில்' என்பது சரியாகி விடுகிறது. 'பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்னும்' என்று சொல்வார்கள். அதேபோல மனிதர்கள் தாங்கள் சேர்ந்து பழகும் நண்பர்களின் குணத்தைப் பொறுத்தும், தூண்டுதலைப் பொறுத்தும் குணம் வேறுபாடு அடைகிறார்கள். செயல்கள் செய்யவும் முற்படுகிறார்கள். கெட்டவர்களுடனோ, அல்லது நல்லவர்களுடனோ சேர்வது சந்தர்ப்பவசத்தால் ஆகும். ஆங்கிலத்தில் இதை விளக்க 'நீ உன் நண்பன் யாரென்று சொல். நான் உன்னை எப்படிப்பட்டவன் என்று சொல்லிவிடுகிறேன்' என்ற ஒரு வழக்கும் உள்ளது. மற்றவர்கள் செய்யும் செயல்களைக் கொண்டும் ஒருவன் தன் போக்கை மாற்றிக் கொள்வதும் உண்டு. உலகக் கட்டுப்பாடுகளுக்குப் பயப்படும்போதும் செயல்கள் மாறுகின்றன. சந்தர்ப்ப சூழ்நிலைகளைப்பொறுத்தும் குணங்கள் வேறுபாடு அடைகின்றன. எதையும் எளிதில் நம்பிவிடுபவர்களும் உண்டு. எளிதில் நம்பாதவர்களும் உண்டு' சூழ்நிலையின் காரணமாக யாருக்கும் அமையாத குணங்கள் சிலருக்கு அமைந்துவிடுகின்றன. அதையே மூல காரணமாகக்கொண்டு குற்றம்புரிவோரும் உண்டு. ஆனால் அவர்களைத் தண்டிப்பது முறையாகாது. சந்தர்ப்பவசத்தால் குற்றம் புரிவோரும் உண்டு. ஒருவனைச் சந்தர்ப்பமே குற்றவாளியாக ஆக்குகிறது. வடநாட்டில் மான்சிங் என்ற கொள்ளைக்காரன் நல்ல உள்ளம் படைத்தவன். குணவான். குற்றமறியாதவன். பக்திமான். நற்குணம் படைத்தவன். அவனது குடும்பத்திற்கும், மற்றொரு குடும்பத்திற்கும் ஏற்பட்ட பூசல் அவனைச் சந்தர்ப்பவசக் குற்றவாளியாக கொள்ளைக்காரனாக மாற்றிவிட்டது. இவ்வாறு சந்தர்ப்பவசத்தால் ஆகும் குற்றவாளிகள் பலபேர். பளபளப்பான கல் என ஏமாந்து அரண்மனையினுள் உள்ள தண்ணீர்த் தொட்டியில் துரியோதனன் இறங்கியதைக்கண்டு கேலியாக திரௌபதி சிரித்ததால்தான் பாண்டவர்களுக்கு அவ்வளவு இடையூறுகளும் ஏற்பட்டது. ஆனால் சிரித்தது அவளது குற்றமல்லவே. அது இயற்கை. அதை துரியோதனன் தன்னை இழிவு படுததுகின்றாள் என எண்ணியதுதான் இதற்குக் காரணம். அவனை அப்படி நினைக்கச் செய்தது சந்தர்ப்பமும் சூழ்நிலையும்தான். ஆகவே அது அவனது குற்றமும் இல்லை.

இவ்வாறு சந்தர்ப்பம், சூழ்நிலை, பாரம்பர்யம் இவற்றால் உருப்பெற்ற குணமும், கோட்பாடுகளும், சூழ்நிலையும், சந்தர்பமும் ஒருவன் செய்யும் செயல்களுக்கு முக்கியமான காரணங்களாக இருக்கும்போது, மனிதன் எப்படித் தான் செய்யும் செயல்களுக்குத் தான் பொறுப்பாளியாவான்? எனவே அவன்

தவறும்போது, அவன் தவறுவதற்குக் காரணமானவற்றை ஆராயாது அவனை, அம்மனித உடலைத் தண்டிப்பது சரியா குமா? தண்டிப்பதால் மேலும் மேலும் ஒருவன் அத்தவற்றையே செய்ய முற்படு வான். ஒன்று அவனை அவனது போக் கிலேயே, அவன் இச்சைப்படியே விட்டு விடவேண்டும். அல்லது உலகில் உள்ள எல்லோரையுமே பகுத்தறிவு உடையவர் களாகவும், மனிதனுக்கு மனிதன் வேறு பாடு இல்லை என்ற உணர்ச்சி உடையவ ராகவும் ஆக்கவேண்டும். இன்று இரண் டும் முடியாதவை. நடவாதவை. சாக்ர டீஸ் 'நீ உன் மனச் சாட்சியின்படி நட! என்றார். மனச்சாட்சிக்கு எல்லோரும் அடிமைகளே' சிலர் சில சமயங்களில் மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கிறார் கள். அது அவர்கள் தவறு அல்ல. மனிதன் தவறுவது இயற்கை; தவறுவது குற்றம் என்றால் பிறந்தது குற்றம். பிறந் தது குற்றம் என்றால் இவ்வுலகமும், இவ் வுலக உயிர்களும் தோன்றியதும் குற்றம். ஆனால் மனிதன் குற்றவாளியல்ல.

வாழ்க்கை வாழ்வதற்கே.

எனவே, தான் செய்யும் செய்கைகளுக் குத் தான் பொறுப்பாளி யல்ல.

—

குற்றவாளி யார்?

by

எஸ். கனகராசன், கலை வகுப்பு, இறுதியாண்டு

காட்சி 1

[மாலை நேரம், மேலைநாட்டின் அறங்கூற வையம் கூடியிருக்கிறது. சபை நடுவே தளபதி வீரசிம்மன் கைதிக் கூண்டிலே நின்றிருக்கிறான்.]

மன்னர்:-வீரசிம்மா! மௌனம் சாதிப்பதில் பயனில்லை, குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயல்லவா?

தளபதி:-வேந்தே! குற்றமறியா என்னை கொடுமைப் படுத்துவதில் பயனில்லை. நாட்டின் நலனுக்காக இவ்விடத்திலேயே உயிர்விடத் தயார். ஆனால், வீண்பலியேற்று சாக விரும்பவில்லை. முறை தவறா இவ்வவை நடுவே நின்று உறுதி கூறுகின்றேன்! மேலை நாட்டிற்குத் தீங்கிழைக்க முயன்றவர்களை அடக்கி ஒடுக்கும் பொருட்டு என் கரம் வாள் ஏந்துமேயன்றி மேலைநாட்டிற்கு எதிராக வாள் எடுக்காது என்பது திண்ணம். விருந்தினரை விசாரித்தால் விளங்கும்.

அமைச்சர்:-களவாடிய கள்வர் பலரானாலும் விடை ஒன்றுதான் என்பதை தளபதி அறியார் போலும். சற்று முன்பு அவனும் உம்மைப் போன்றுதான் பதிலிறுத்தான்.

மன்னர்:-அவன் தவிர வேறு யாராவது நீ குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க இயலுமா?

தளபதி:-நல்லது! நாவிலும் செந்நாவுடையோரே! பெருங்குடி மக்களே! என்னை கைது செய்த காலமும் சூழ்நிலையும் எவ்வித சாட்சியத்திற்கும் இடமளிக்கவில்லை. இருந்தது இருவர்—நானும் எனது விருந்தினரும்—இருவருமே கைது செய்யப்பட்டோம்! என் பெற்றோர் எனது கரத்தில் வாளெடுத்து கொடுத்த நாளிலிருந்து, பெற்ற திருநாட்டின் பெருமையையும் அதற்கு நான் ஆற்றவேண்டிய தொண்டினையும் வாள் பயிற்சியோடு அறிவுப் பயிற்சியாக கற்பித்தனரேயன்றி குளத்து நாட்டுடன் சேர்ந்து மேலை நாட்டிற்குத் துரோகம் இழைக்கச் செப்பிலர்.

அமைச்சர்:-எத்தகைய நாட்டுப் பற்றுடையவராயினும் பெண்ணாசையும் பொன்னாசையும் வெறுத்து விடலாம்! ஆனால் இம் மண்ணாசையை யாரும் வெறுக்கமுடியாது; இது சரித்திரம் காட்டும் உண்மையாகும்!

தளபதி:-அப்படியானால், அமைச்சரும் அதற்கு விதிவிலக்கல்லவே! நான் குற்றவாளியாக்கப்பட்டுக் கொலை செய்யப்போவது கண்டு அஞ்சவில்லை. ஆனால், மேலைநாட்டின் சரித்திரத்திலே "குற்றமற்றவன் குற்றவாளி கூண்டிலே நிறுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டான்" என்ற கொடுஞ் செயல் இடம் பெறுமே என்னும்போதுதான் என் உள்ளம் வேதனை யடைகின்றது.

அமைச்சர்:-தவறு காட்டி தப்பிக்கலாம் என்று மட்டும் எண்ணாதே!

மன்னர்:-வீண்வாதம் வேண்டாம். நீ குற்றமற்றவன் என்பதை நிரூபிக்கப் போதிய சாட்சியங்கள் இல்லாததால் நீ குற்றவாளி யென்றே இவ்வவை முடிவு கட்டுகின்றது.

தளபதி:-இச்சபை முடிவு கட்டவில்லை! குள்ளநரிப் புத்திகொண்ட கொடுமதியாளரின் தீர்ப்பு என்றே கூறுவேன்.

மன்னர்:-இது அறங்கூறவையம், அநாவசியப் பேச்சிற்கு இங்கு இடமில்லை.

தளபதி:-அறம்பிறழா அவையில் அங்கம் வகிக்கும் பொய்யிற் புலவர்களே! நிலம் பெயரா பெருங்குடி மக்களே! எனக்கு ஒருவாரம் தவணை கொடுங்கள், அதற்குள் நான் குற்றமற்றவன் என்பதை உங்கள் முன்னிலையிலே காட்டுகின்றேன்.

அமைச்சர் :-இந்த ஒருவாரமும் நீ சிறையில்தான் இருக்கவேண்டும்.

தளபதி :-உண்மையறிந்து, அவை நடுவே நின்று குற்றவாளி யார் என்பதை காட்டப்போவது நானேயன்றிவேறல்லர்! நீந்திச்செல் என்று கூறி தண்ணீரையும் காட்டிவிட்டு கால்களை கட்டிப்போட்டால் நீந்துவது எவ்வாறு?

மன்னர் :-எது எவ்வாறாயினும் உன்னை வெளியில் விட்டுவைக்க இயலாது.

அமைச்சர் :-மன்னரும் மற்றவர்களும் தளபதியின்பால் கொண்ட மதிப்பின் காரணமாக ஒருவாரத் தவணை கொடுத்தோம். ஆனால், இந்த ஒருவாரமும் தளபதி சிறையில்தான் இருக்கவேண்டும். இன்றிலிருந்து எட்டாவது நாள் இதே நேரத்தில் மறுபடி அவை கூடும்.

காட்சி 2

[மேலைநாட்டின் இளவரசி, தேன்மொழி தன் காதலன் தளபதி சிறையிலடைக்கப்பட்ட செய்திகேட்டு சிறைக்கு ஓடுகின்றாள்]

இளவரசி :-அத்தான்!

தளபதி :-தேன்மொழியா! இந்நேரத்தில் சிறைச்சாலையிலா! மன்னர் கண்டால் என்ன செய்வார் தெரியுமா?

இளவரசி :-(கண்ணீர் வடிய) என்ன கேள்வி அத்தான்? குளத்தில் விழுந்த குழந்தையைக் கண்டு பெற்றெடுத்த அன்னை செயலற்று நிற்பாளா? நந்தவனத்திலே உங்களை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்த நேரத்தில் தோழி அமுதா மூலம் செய்திகேட்டு ஓடோடியும் வந்தேன், காரணம் அறிய.

தளபதி :-காரணம் மட்டும்தானே வேண்டும்? எனது காரியத்தில் உனக்குக் கவலையில்லை?

இளவரசி :-அன்பே! வேண்டாததைப் பேசவேண்டாம்,வேண்டியதைக்கூறுங்கள்; உடனே கவனிக்கின்றேன்.

தளபதி :-உன் அத்தானை நீயும் சந்தேகிக்கின்றாயா?

இளவரசி :-காரணம் அறியாத என்னிடம் கண்டதையெல்லாம் கூறி என்னை கலங்க வைக்கின்றீர்களே அத்தான்! "சிறை" என்று தோழி கூறிமுடிக்கும் முன் "சிறை" வந்தடைந்த எனக்கு என்ன தெரியும்.

தளபதி :-குளத்துநாட்டு ஒற்றனுடன் தாய்நாட்டிற்கு எதிராக சூழ்ச்சி செய்தேன் என்று உன் தந்தை பழி சுமத்தினார்; அதை ஆமோதித்தார் அமைச்சர். முடிவு, நான் குற்றவாளியானேன்; கூண்டிலடைக்கப் பெற்றேன். ஆனால் இது அமைச்சரின் சூழ்ச்சியோவென்று ஐயுறுகின்றேன்.

இளவரசி :-அத்தான்! அதைத்தான் நானும் கூறுகின்றேன். மாற்றான் மனமறிந்து அவன் வலியறிந்து படை நடத்தும் தாங்களே இவ்வாறு பதறுவதில் பயனில்லை. நீங்கள் செய்தது...

தளபதி ,-(இடைமறித்து) நான் செய்தது குற்றம் என்கிறாயா? என்மேல் அக்கறையுள்ள உயிர் ஒன்று உண்டு, அது எவ்வாறும் என்னைக் காப்பாற்றும் என்றுதான் தவணை கேட்டேன். இல்லையானால்........

இளவரசி :-அக்கறையில்லையானால் அழுத கண்ணீர் அருவியாகக் கொட்டக் கொட்ட ஓடிவந்திருக்கமாட்டேனே.

தளபதி :-நான் சிறை நுழையக் காரணம் உன் தந்தைதான். அவரிடம் சென்று முறையிடு.

இளவரசி :-முறையிடுவதென்ன! முடிந்தால் விடுதலையே செய்வேன். ஆனால்......

தளபதி -:ஆனால் என்ன?

இளவரசி :-அவரிடம் நான் முறையிடுவது முறையல்லவென்று தோன்றுகிறது. அன்பே! நீங்கள் அறியாததல்ல! நம் நட்பு கண்டு தந்தை முன்பே என்னை எச்சரித்துள்ளார்.

தளபதி :-தேன்மொழி! கலங்க வேண்டாம் கண்ணே! உண்மை என்றாவது வெளிப்பட்டுத்தான் ஆகவேண்டும்.

இளவரசி :-என்றாவது என்ன, இன்றே அதை கவனிப்பேன், நீங்கள் இங்கே தனியாக எத்தகைய உணவு உண்ண நேருமோ! அங்கே நான்மட்டும் பட்டு விரித்த மெத்தைமேல் உட்கார்ந்து

பாங்கிகள் பலர் சூழ பழரச பானம் அருந்துவதா? நீங்கள் இங்கே வைக் கோல் புல்லிலே புரண்டுகொண்டிருக்க நான்மட்டும் மணமிக்க மல்லிகையும் சாந்தும் அழகு செய்யும் மஞ்சத்திலே புரண்டு மகிழ்வதா? முடியாது அத் தான் முடியாது?

தளபதி :-வேண்டாம் கண்ணே வேண் டாம்! நீ உறுதியுடனும் உள்ள மகிழ்ச்சியுடனும் சென்று வா....ம்........

இளவரசி :-(அழுதுகொண்டே) அத் தான்! வரு கிறே....ன்....

காட்சி 3

[மன்னரின் தனி அறையில் மன்னரும் அமைச்சரும்.]

மன்னர் :-அமைச்சரே! நாம் செய்த திட்டம் அடுத்தவர் செவியில் எட்டாது பார்த்துக்கொள்ளுங்கள்.

அமைச்சர் :-அதைப்பற்றி தங்களுக்கு கவலையே வேண்டாம். ஆனல், இள வரசியைமட்டும்........

மன்னர் :-இப்பொழுதே அதைப்பற்றி எச்சரித்துவிடுகிறேன். ஆனல், செய்தி அறிந்த மக்கள்தான் ஆத்திரமடை வார்கள்.

அமைச்சர் :-மக்களென்ன! இதை மறக் கும் பொருட்டு அங்கங்கே கூத்து நடக்க ஏற்பாடு செய்துள்ளேன். வேண்டுமானல், ஒரு சிலர் கூக்குரலிடு வார்கள். அதற்காகத் தங்கள் மதிப்பை யும் எதிர்கால நாட்டின் நலத்தையும் இழந்துவிடுவதா? எதற்கும் அஞ்ச வேண்டாம் வேந்தே!...

மன்னர் :-ம்.......யாராவது நம் சூழ்ச்சியை கண்டுபிடித்துவிட்டால்...

அமைச்சர் :-யார் கண்டுபிடிப்பது? நாம் தான் காரியத்தை கச்சிதமாக, விருந் தினருடன் இருக்கும்பொழுது பிடித்து விட்டோமே!

காவலாளி :-வேந்தே! குளத்து நாட்டிலி ருந்து தூதுவர் வந்திருக்கின்றார். உங் களைக் காண விழைகின்றார்.

மன்னர் :-வரச்சொல்

தூதுவன் :-(வந்து வணங்கிக்கொண்டே) மன்னர் பிரானுக்கு இவ்வோலையை (ஓலையொன்றை நீட்டுகின்றான்) கொடுக்கும்படி எம் மன்னர் பணித் தார்.

மன்னர் :-(காவலாளியைப்பார்த்து) தூது வர்க்கு வேண்டியதை கவனித்து அனுப்பும்.

மன்னர் :-(ஓலையைப் படித்துவிட்டு) அமைச்சரே! குளத்து நாட்டான் பெரும்படையுடன் புறப்பட்டு வருவ தாக நம் ஒற்றன் செய்தி அனுப்பி யிருக்கின்றான். அவனும் நல்ல ஆளைத் தான் அனுப்பியுள்ளான்.

அமைச்சர் :-என்ன துணிச்சல்! எல்லைத் தகராறும் முடிந்துவிட்டதே! வேந்தே! வீரசிம்மன் உருவாக்கிய படையிருக் கின்றது நாம் ஏன் அஞ்சவேண்டும்?

மன்னர் :-அவன் படையைக் கண்டு நான் அஞ்சவில்லை. அனைத்தும் அறிந்த தளபதியில்லா படையெடுப்பா என்று தான்....

அமைச்சர் :-தளபதி ஏன்? உதவி தள பதி போதுமே குளத்து நாட்டான் படையை முறியடிக்க! வேந்தே! நம் படையிலிருக்கும் ஒவ்வொருவரும் வீர சிம்மனே என்பதை மறக்கவேண்டாம்.

மன்னர் :-உதவி தளபதிக்கு உடனே செய்தி யனுப்புங்கள்...

காட்சி 4

[சிறையினுள் : தளபதி ஆழ்ந்து யோசித் துக் கொண்டிருக்கிறான். அப்பொ ழுது...]

இளவரசி :-எந்தக் கோட்டையை பிடிக்க இவ்வளவு யோசனை அத்தான்!......

தளபதி :-எந்தக் கோட்டையுமல்ல கண்ணே! கட்டியணைத்து மகிழ்ந்த இம்மலர்க் கோட்டையைக் காணுது தான்......ம்....வேலை முடிந்ததா?

இளவரசி :-அத்தான்! நான் இங்கு வரு வதே மிகவும் கடினமாகிவிட்டது. எனது அறையில் தோழி அமுதாவை நுழைத்துப் பூட்டிவிட்டு அப்பாவை ஏமாற்றிவிட்டுவந்தேன். நீங்கள் கைது

செய்யப்பட்ட காரணம் யாதும் புலப்படவில்லை. ஆனால், அப்பாவும் அமைச்சரும் அடிக்கடி சந்திக்கின்றனர்.

தளபதி :-எதற்காக?...

இளவரசி :-குளத்து நாட்டுப் படையும் நாட்டின் மீது போர் தொடுக்க வருகின்றதாம்.

தளபதி :-காரணம்?

இளவரசி :-என்றும்போல் எல்லைத் தகராறின் தொல்லை என்றனர்.

தளபதி :-சென்ற திங்கள் அது தீர்ந்துவிட்டதே! நிலைமை......

இளவரசி :-நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. அத்தான்! நீங்கள் இல்லாது வீரர்கள் கவலையுடனிருக்கின்றனர். காவலாளி கண்ணயர்ந்து விட்டான், உடனே வெளியேறுங்கள்........

தளபதி :-எனக்கும் ஆசைதான்! கள்ளூமுருக இசைபாடும் உனது இசையை என்று கேட்போம் என்று எனது செவிகள் துடிக்கின்றன. எதையோ பறிகொடுத்தது போன்று விளங்கும் எனது மார்பு எப்பொழுது இம் முல்லை மலரை (இவ்வரசியை காட்டி) அணிவோம் என்று ஏங்கித் தவிக்கின்றது. என்ன செய்வது! எம் மன்னரால் குற்றவாளியாக்கப்பட்டேனே அம்மன்னரின் இதழ்கள் விரிந்து நான் குற்றமற்றவன் என்று கூறினலன்றி இதை விட்டகலேன்.

இளவரசி :-அன்பே! பிடிவாதம் வேண்டாம்! விடியும் நேரம்! வெற்றியடைய வேண்டுமானல் நீங்களில்லாது முடியாது.

தளபதி :-கண்ணே! போரைப்பற்றிகவலை வேண்டாம்! நம்வீரர்களை அவ்வளவு எளிதாக எண்ணவேண்டாம்.

இளவரசி :-துடுப்பில்லா மரக்கலமும், சிறகில்லாப் பறவையும் எப்படியத்தான் சேரவேண்டிய இடம் சேரமுடியும்? நீங்கள் கூறுவது வேடிக்கைதான்!

தளபதி :-வேடிக்கையல்ல கண்ணே! விவேகமுடன் கூறுகிறேன். மாணக்கரின் அறிவு நுட்பம் கற்பித்த ஆசானுக்குத் தெரியாதா என்ன?

இளவரசி :-வீண்பிடிவாதம் வேண்டாம். விடியப்போகும் நேரம் நான் வருகின்றேன்...சிந்தியுங்கள்....(சென்று விடுகிருள்)

தளபதி :-(தனக்குள்ளே) ம்....ஆத்திரத்தில் அறியாது கூறுகிருள். இன்பம் ஒன்றே வாழ்க்கையில் அறிந்தவள்.....

காட்சி 5

[மன்னரும் அமைச்சரும் போர் முறை பற்றி விவாதிக்கின்றனர்.]

மன்னர் :-குளத்து நாட்டுப்படைகள் நம் நாட்டின் எல்லையைஅடுத்துவிட்டனவாம்.

அமைச்சர் :-நம் உதவி தளபதி அங்கங்கே படையை நிறுத்தியிருக்கும் முறையைக் கண்டால் அஞ்ச வேண்டிய அவசியமே ஏற்படாது.

மன்னர் :-அதுதான் இப்பொழுது எனக்கு அச்சமாக இருக்கின்றது! இவ்வாறு படையை பிரித்து நிறுத்துவதனல் களத்தில் உள்ள படைக்கு பலம் குறையுமல்லவா?

அமைச்சர் :-இல்லை வேந்தே! பகைவரை எந்த திக்கிலிருந்தும் தாக்கலாம்.......

ஒற்றன் :-வேந்தே! எதிரிகள் எல்லைக்குள் புகுந்துவிட்டனர். குளத்து நாட்டுப் படையுடன் குதிரைப் படை அதிகமாயுள்ளதாம்.

மன்னர் :-அமைச்சரே! நிலை மிகவும் மோசமாகிவிட்டது. குளத்துநாட்டுப் படையுடன் மொகலாயப் படையும் சேர்ந்திருக்க வேண்டும்.

இளவரசி :-(வந்துகொண்டே) அப்பா! பகைவர், நகரை நோக்கி விரைகின்றனராம்.

(மன்னர் அமைச்சரைப் பார்த்துவிட்டு)

மன்னர் :-குழந்தாய்! நீ ஏன் இங்கு வந்தாய்? சென்றுவிடு. எதற்கும் சுரங்கத்தின் பக்கமே இரு....ம்...ஓடு....

அமைச்சர் :-தளபதி செய்த வஞ்சகச் செயலை இப்பொழுதாவது மக்கள் உணர்வார்கள் (இதைக் கேட்டுக் கொண்டே இளவரசி செல்கிருள்)

மன்னர் :-(அமைச்சரைப் பார்த்துவிட்டு) என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லையே! ம்..........

காட்சி 6

[சிறையில்: தளபதி தனக்குள்ளே போரின் நிலை குறித்து வருந்திக் கொண்டிருக்கிறான்]

தளபதி :-மன்னர் உள்ளம் எவ்வாறு வேதனைப் படுகின்றதோ: மக்கள் நிலை எவ்வாறு உள்ளதோ!......

இளவரசி :-தாங்கள் பெற்ற தவப்பெருந் திரு தளபதியின் வஞ்சகச் செயலை எண்ணியெண்ணி ஏங்குகின்றனர்.

தளபதி :-தேன்மொழி!

இளவரசி :-தேன்மொழி! சீசீ...! நான் இப்பொழுது உங்கள் தேன் மொழி யல்ல. தான் பெற்ற குழந்தைகளின், வீரப்புதல்வர்களின் குருதியை தமிழ்த் தாய் அருந்தித்தான் ஆகவேண்டுமா? கன்னித் தமிழகத்தில் கயவர்களின் பாதச்சுவடுபட்டுத்தான்பதவிகொள்ள வேண்டுமா?

தளபதி :-அன்பே! அறியாது கூறுகின்றாய். உனது கோபத்தின் காரணத்தை அறிந்துகொண்டேன். நீயும் மற்றவர் கூறுவதை ஏமாற்று வித்தையை நம்புகின்றாயே என்னும்போது தான் என் உள்ளம் வேதனையடைகின்றது. பதவி யாருக்கு வேண்டும்? அந்தத் தரங்கெட்ட ஆசையிருந்திருந்தால் சென்ற எல்லைத் தகராறின் போதே குளத்து நாட்டான் ஆசைக்கு அடிமைப் பட்டிருப்பேன் என்பதை மறவாதே!

இளவரசி :-என்னை வைத்து நேசிக்கும் உள்ளம்தானா இந்த பயங்கர சதிக்கு உடந்தையானது? "ரோமிலே புரூதஸ் நண்பனைக் காட்டிலும் நாட்டை நேசித்தமைக்காக உயிரனைய நண்பனைக் கொன்றான்! பதவியின் பொருட்டுத் தாயகத்தின் சரித்திரத்தையே மாற்றியமைக்கத் துணிந்துவிட்டீர்கள் இங்கு!" என்று நான் கூறவில்லை, நாடு கூறுகிறது, நாட்டிலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் கூறுகின்றனர்! கற்களுக்கும் வாயிருந்தால் உங்களது வெளிச் செயலை வெளிப்படுத்தும் போலிருக்கிறது. கள்ளமில்லா உள்ளத்தவரென்றால் இப்பொழுது வெற்றிகண்டு தன் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தலாமே! நாட்டுப் பற்று உள்ளவரென்றால் கைகளை இணைத்திருக்கும் விலங்கும் கற்கோட்டையும் ஒரு தடையாமா?' என்று மக்கள் கேட்கின்றனர்.

தளபதி :-ம்......போதும் நிறுத்து! தன் மானமே உயிராகக்கருதும் வீரசிம்மன் என்றும் அதை அடுத்தவனிடத்தில் விலை பேசியதில்லை. விலைபேசப் போவதுமில்லை!

இளவரசி :-தன்மானமாம் தன்மானம்! பெரும் அவமானம்! தன்மானமிருந்தால் அடுத்தவனிடத்தில் மண்டியிட்டு தாய்நாட்டை வெறிபிடித்தாடும் களமாக்கியிருக்க மாட்டீர்களே! மேலை நாட்டின் சுத்த இரத்தம் உங்கள் உடலிலே ஓடினால் இதோ, மாற்றான் பிடியில் அவதியுறும் அன்னை மண்டியிட்டு மன்றாடுகின்றாள் உங்களிடம், "உயிர் போகும் நேரம்! ஒரு சொட்டுத் தண்ணீர் உன்கையால் ஊற்றி உயிர்கொடு உனது கடமையும் கட்டுப்பாடும் எங்கே போயிற்று? உனது தினவெடுக்கும் தோள்கள் உணவின்றி பிணமாகக் காட்சியளிக்கின்றதே! ஏன்! ஏன்! ஏன்! நம் மொழியையும் நாட்டையும் பழித்துப்பேசும் நயவஞ்சகர்கள் எங்கிருந்தாலும் விடாதேயென்று வீரர்களுக்கு உணர்ச்சி ஊட்டினையே? அந்த வீரம் இப்பொழுது எங்கேபோயிற்று?" என்று அன்னை கதறுவது உங்கள் செவியில் விழவில்லையா?

தளபதி :-வஞ்சகர்களின் சூழ்ச்சியால் வஞ்சிக்கப்பட்டக் காரணத்தை அறியாது கதை பாடுகின்றாயே!......

இளவரசி :-கதையா இது? உங்களுக்குக் கதைதான்! அன்னை அலறிப் புடைக்கின்ற நேரத்திலே நான் மன்றாடுவது கதையாக இருக்கின்றது உங்களுக்கு! நீங்கள் நினைப்பதுபோல் மேலை நாட்டான் எளிதில் நாட்டை இழந்துவிட மாட்டான். மழலை மொழிபயிலும் குழந்தையிடமும் வாளும் வேலும் கொடுத்து களம் அனுப்பும் மங்கையர் குலம் இங்கு உண்டு! உயிரைத் திறனகை மதியாக நாடுகாக்கும் நல்ல வீரர் குலம்

இங்கு உண்டு! நாட்டின் நலனும் பெருமையுமே தங்கள் நலனும் பெருமையுமாக மதிக்கும் நல்லறிஞர்கள் குலம் இங்கு உண்டு! "அன்பே! ஆருயிரே!" என்று போற்றிப் புகழ்ந்த நான் இன்று மன்னர் மகளுமல்ல, இந்த நாட்டின் இளவரசியுமல்ல! குளத்து நாட்டின் மங்கையர்களுள் ஒருத்தி, களம்காண விழையும் காரிகை நான்! (தன்மேல் ஆடையை எடுத்துவிட்டு தளபதி உடையுடனிருப்பதைக் காட்டுகின்றாள்)

தளபதி: (திகைத்து) ஆ! வேண்டாம் தேன்மொழி! வேண்டவே வேண்டாம்! நீ பிறந்து வளர்ந்த மண்ணிலேதான் நானும் பிறந்துவளர்ந்தேன்! உனக்கு உள்ள உள்ளமும் உறுதியும் எனக்கும் உண்டு. எனது செயலை நீ காண வேண்டுமானால், நீரிருள் போன்று சுற்றி வளைத்து கொட்டமடிக்கும் கோணல் புத்திக்காரர்களின் கொட்டத்தை அடக்கவேண்டுமானால், சூழ் கலி நீங்கி தாயகம் நேர்பெற நோக்கி நிலைய வேண்டுமானால், தேமதுரத் தமிழ் தரணியிலே விண்ணதிர தேரோட்டவேண்டுமானால், இதோ! என் கையிலுள்ள விலங்கு நொருங்க வேண்டும்! எனது உரிமை வழங்கப் படவேண்டும்! அந்த உரிமையை வழங்க உன் தந்தை ஒருவரால்தான் முடியும்! முடியுமா? உன் தந்தை இதை செய்வாரா? எனது வேலை முடிந்த பின்பு வேண்டுமானால் திரும்பவும் சிறையிலடைக்கட்டும். இம்...... இன்னும் என்ன வேண்டும்? அப்பொழுதாவது என்னை நம்புவாயல்லவா? இம்...ஓடு உன் தந்தையிடம்....உன் காந்தள் மலர்போன்ற மெல்லிய அடிகள் வெறிபிடித்தாடும் வீணர்களின் மத்தியில் உலவ வேண்டாம்......

இளவரசி:-இன்னும் தங்களின் தன்மானம் அகலவில்லையா? இல்லை....... என்னால் முடியாததை சொல்லி தப்பிக்க எண்ணமா?

தளபதி:-ஐயோ! (அழுகிறான்) கொல்லாமல் கொல்லுகிறாயே! நீ பேசுவதைக் காட்டிலும் நீ வைத்திருக்கும் உடைவாளாலேயேஎன்னைக் கொன்றுவிடு. உன்னால் முடியாவிட்டால் அல்லது நீ விரும்பாவிட்டால் என்னிடம் அதைக்கொடு......

இளவரசி:-தென் திசையிலே திங்களனைய எங்கள் வீரர்களின், தென்னவர் குல விளக்குகளின் அபயக் குரல் கேட்கின்றது. ஐயகோ!.......அவர்களுக்கு உறுதுணையாய் நின்று உதவுவார் யாருமில்லை! தொன்றுதொட்டு வாழ்ந்த இனம், தொன்மையான தென்னினம்! அவ்வினத்தின் அழுகுரலையும் அபயக் குரலையும் கேட்டு ஒன்றும் அறியா சிலையாய் நிற்பது தகுமா? அவர்கள் வாழ்விழந்து, வகையின்றி வெறிபிடித்தாடும் வீணர்களின் கால்களுக்கடியில் நசுங்கத்தான் வேண்டுமா? கொடியவர்களின் செயல்கண்டும் புயலாக மாறுதது ஏனோ?......தங்களைப்போல் பதவி மோகம் கொண்டலையும் பாதகியல்ல நான்! இவ்வளவும் கண்டும் கேட்டும் இனி ஒரு கணமும் உங்கள் முன்னல் நில்லேன்! சிந்தியுங்கள்! பெற்றெடுத்த அன்னை, பெயரும் புகழும்பெற்று வாழ்ந்த தமிழ்த்தாய் கூற்றுக்கு இணங்குங்கள்! சீர் தூக்கிப்பாருங்கள் நான்........களம் அழைக்கின்றது....வருகின்றேன்...

(எதிரே வந்த அமைச்சரை ஏமாற்றிவிட்டு இளவரசி கோட்டைக்கு வெளியே செல்லப் புறப்படுகின்றாள்)

தளபதி:-அந்தோ!...நான் என்ன செய்வேன்! ஒன்றும் அறியா என்னை குற்றவாளி என்றவர்கள், காணுது தப்பிச் சென்றால் என்னதான் செய்யமாட்டார்கள்! (கண்ணீர் உகுத்தல்)

அமைச்சர்:-(வந்துகொண்டே) தளபதியாரே! நீங்கள் விடுதலை அடைந்துவிட்டீர்கள்!

தளபதி:-என்ன! (ஆச்சரியமும் ஆனந்தமும் கலந்த முகத்துடன்) மன்னர் எனக்கு விடுதலையளித்துவிட்டாரா! தாய் நாட்டிற்கு நான் தக்க கடமை புரியலாமா!

அமைச்சர்:-ஓடுங்கள் தளபதியாரே ஓடுங்கள்!

தளபதி:-(கதவு திறந்தவுடன் விலங்கை அறுத்து எரிந்துவிட்டு) இதோ ஓடுகின்றேன்......(ஓடுகிறான்)

காட்சி 7

தளபதி:-இப்பொழுது என்னை தளபதியென்று அழைக்காதீர்கள். சாதாரண மனிதன்தான். விடுதலையடைந்த நான் வேகமாக கோட்டை மீதேறி போரின் நிலை கண்டேன். ஆனால் அப்பயங்கரக் காட்சியை காண என் கண்கள்கூசின. காரணம், எண்ணற்ற எங்கள் வீரர்கள் மாண்டுகிடந்தனர். மேலும், இதோ! (பக்கமிருந்த இளவரசியைக் காட்டி) இந்த மின்னும் ஜோதியும் மாற்றான் வாளுக்கு உணவாகிக் கொண்டிருந்தாள்! எவ்வளவோ முயன்றும் என்னால் முடியவில்லை! ஒன்றா! இரண்டா! பல நாட்டுப் படைகள் ஒருசேர என் னருமைத் தாய் நாட்டைத் தாக்கின. முடிவில், நாங்கள் எல்லோரும் மாண்டோம். நாடும், நகரமும் பகைவர் கையில் அகப்பட்டது. இப்பொழுது கூறுங்கள் (என்னைக்காட்டி) இளவரசியை காதல் செய்ததும், மேலும் இளவரசி என்னை ஆரம்பத்திலேயே வேண்டிக்கொண்டதை மறுத்ததும், தன்மானம் பேசியதும் என் குற்றம்தானே?

இளவரசி,-இல்லவே இல்லை! நான் பெண்ணாகப் பிறந்ததே முதல்குற்றம்!

மன்னர்:-முற்றிலும் பொய்! நான் நாட்டின் மன்னனாக இருந்ததே மன்னிக்க முடியாத குற்றம்!

அமைச்சர்:-அவர்கள் கூறுவது அனைத்தும் பொய்! நான் அமைச்சனாக இருந்து, தளபதி இளவரசி காதலை மன்னருக்குக் கூறியதே உண்மையான குற்றமாகும்.

எல்லோரும்:-(என்னைப் பார்த்து) இப்பொழுது நடுவு நிலைமை பிறழாது கூறுங்கள் யார் குற்றவாளியென்று?

நான் கூறுகிறேன்:-சரித்திரத் தேர்விற்குப்படித்தவன் என்னையுமறியாமல் தூங்கியது மறுக்கமுடியாத "குற்றமென்று" கூறுகிறேன்.

கர்வ பங்கம்

by

சிவ. ஜெயராமன், II B.A., Branch I.

தமிழ் மொழி தழைக்கவும், தமிழ்த் தாய் ஓங்கவும், தமிழ்நாடு முழுவதும் தமிழ் மணங் கமழவும், தமிழ் முரசறைய வும், தமிழ்க் கொடி உயரவும், தமிழ் மணி யிசைக்கவும், தமிழ் ஒளி வீசவும், "தமிழ், தமிழ்" என்று தமிழ் ஒலி முழங்கவும் அக்காலப் புலவர்கள் தொண்டுகள் பல செய்துள்ளனர். அவர்களுள் பொய்யா மொழிப் புலவர் ஒருவர். அவர் கல்விச் செல்வமும், அருட் செல்வமும் பெற்ற புலவர். மறைந்துபோன கடைச் சங் கத்தைத் திரும்பவும் உயிர் கொடுத்து தழைப்பிக்க முயற்சித்தவர். சிவனிடத்து இடையறாத அன்பு பூண்டவர். சிவனைத் தவிர வேறொருவரையும் புகழ்ந்துபாடார். சிலர் இவரை நோக்கி, "ஐயன்மீர்! நீர் சிவபெருமானைப்பற்றியே அடிக்கடி பாடு கிறீரே! குழந்தைச் சிவனாகிய முருக வேளைப்பற்றி பாடினாலென்ன? சிவன் வேறு, சிவகுமாரன் வேறெனவோ எண்ணுகின்றீர்!" என கேட்டபோழ்து, "கோழிக்கும் பாடி, கோழிக் குஞ்சிற்கும் பாடவோ?" என பொய்யாமொழி அலட் சியமாகப் பதில் கூறினர். இதைக் கேட்ட முருகன் இவர் செருக்கையடக்க எண்ணி னார்.

ஓர் சமயம் பொய்யா மொழிப் புலவர் தக்க சன்மானம் பெற்று நிதித் திர ளோடு ஓர் பாலைவனத்தின் வழியாக வரும்படி நேர்ந்தது. வெய்ய கானகத் தின் வழியாய் வருகின்ற புலவர், அச் சந்தரத்தக்க உருவத்துடன் வேலைத் தாங்கி நிற்கும் ஓர் வேடனைக் கண்டார்; பின் கவலை கொண்டார். "ஐயோ அருள் சிறிதுமற்ற வனவேடன் கையில் அகப் பட்டுக் கொண்டோமே! பொருள் போயி னும் போகுக, உயிருடன் விட்டுவிடு வானோ?" என்று எண்ணி மெதுவாக நடந்தார். புலவர் வேடனை சமீபித்தார். வேடன் உருக் கொண்டிருக்கும் குமர வேள் அவரை நோக்கி, 'நீ யார்?' என வும், அதற்கு கவிவாணர் "நான் ஓர் தமிழ்ப் புலவன், என்னை பொய்யாமொழி என அழைப்பர்" என பதிலிறுத்தார்.

முருகப் பெருமான் அவரை நோக்கி, "இனிய பெயர் படைத்தோய்! தமிழ்ச் சுவையையும் அறிவாய் போலும்" எனக் கூறவும், புலவருக்கு உடனே அச்சம் விலகிற்று. 'வேடனாயினும் தமிழ் மணங் கண்டவனாய் இருக்கிறான்; ஒரு வேளை பொருளை அபகரித்துக் கொள்ளினும், உயிருடன் விட்டுவிடுவது திண்ணம்' என மகிழ்ந்த புலவர், "வேடர் பெருமானே! தமிழ்ச் சுவையை சிறிது கண்டுள்ளேன்" என்றார்.

முருகவேள் அவரை நோக்கி, "புலவ! என் பெயரை முன்னிட்டு நற்றாயிரங்க லாக ஓர் வெண்பா வழுவின்றி பாட வல்லையோ?" என வினவினர். இவ் வார்த்தைகளைக் கேட்டவுடன், பொய்யா மொழிப் புலவருக்கு உண்டான உவ கையை எப்படி உரைப்பது? 'ஆ! கோர ரூபம் கொண்டவனாயினும், வனவேடன் தமிழ்ச் சுவையை நன்கறிந்துள்ளான்' என உள்ளம் பூரித்த புலவர், "ஐயா, தங்கள் ஆணைப்படியே வெண்பாவைப் பாடுகிறேன். அருள்புரிந்து தங்கள் நாமத்தைக் கூறுங்கள்" என்றார். உடனே குமரவேள் "என்னை முட்டை என கூறுவதுண்டு. நீரும் அவ்வாறே என் பெயரை அமைத்து நான் கேட்ட துறையைப் பாடுவீர்?" என திருவாய் மலர்ந்தருளினர். இந்நாமத்தைக் கேட்ட புலவர் 'பெயர் விபரீதமானதாகத் தோன்றுகிறதே' எனத் திகைத்தாரா யினும், குமரன் திருவிளையாட்டை அறி யாதவராய் பின்வரும் வெண்பாவைக் கடி திலிசைத்துக் கூறினர்:

> பொன்போலும் கள்ளிப்பொறி பறக்கும் கானலிலே
> என்பேதை செல்லற்கியைந்தனளே—மின் போலும்
> மானவேன் முட்டைக்கு மாறுயதெவ்வர் போங்
> கானவேன் முட்டைக்குங் காடு.

சொற்சுவை ததும்பிநின்ற இவ்வெண் பாவைச் செவியேந்திய குமரன், அதனில் பொருள் முரணிருப்பதை மனதுட் கொண்டு புலவரை நோக்கி, "நீர்தாமோ பொய்யாமொழிப் புலவர்? சொற் சுவையே குறியாய், வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ வென, பொருட் குற்றம் நோக்காது பாடுதல்தானே புல வர்க்கழகு? புலவா! தலைவி தலைவனோடு உடன் போக்காய் வந்த பாலைவனத்தின் கொடுமையை மிகச் சிறப்பாக வர்ணித் தாய்; தண்ணீர் கிடைக்கப்பெறாத வெஞ் சுரத்தின் கண்ணும் பால் சுரக்க வல்ல கள்ளிச் செடியும் அக்கானலின் கொடு மையால் எரிந்து கங்காகி, அனற்பொறி வீசாது நின்றது என்றயே; பின் எம்மதி கொண்டு அவ்வனத்தின் வழிச்செல்பவர் காலை வேலை முட்டைக்குமெனக் கூறினாய்? கள்ளி நெருப்பாய்ப்போன கானகத்தில் வேலமுள் சாம்பராகாது தளைத்திருந்து குத்தியதோ? உனக்கு என்ன செருக்கு? நீதானே பொய்யா மொழிப் புலவன்?" என வசை பாடினார்.

இம்மாற்றம் புலவரது செவித்தலத்துட் புகவே அவருக்குண்டான மன நிகழ்ச் சியை என் சொல்வது? ஓர் பக்கம் திகி லும், ஓர் பக்கம் ஆச்சரியமும் ஓர் பக்கம் ஆனந்தமும் விளைந்தன. புலவர் சிந்திக் கத் தொடங்கினார்: 'இவரை முதற்கண் தமிழ்ச்சுவை அறியா, அருளிலா மறவன் என எண்ணி அச்சத்திற்காளானேன்; பின்னர் ஏதோ சிறிது தமிழ் மணங் கண்ட வனவேடன் என மதித்து உயிரச் சம் நீங்கினேன்; துறைபாடச் சொன்ன சதுர் பாட்டை நோக்கித் தமிழ்ச் சுவையை நன்கு உணர்ந்த புலவரென எண்ணி அளப்பரிய ஆனந்தமடைந் தேன்; இப்போது என் கவியைக் குணக் குற்றம் ஆய்ந்து வழுவுற்ற பாட்டென என் மதியைப் புறங்கொண்ட இவர் பேர றிவை நோக்கின் இவரை யாரென மதிக்க வல்லேன். தமிழ் முனியையும் பணி கொள்ள வல்லார் போலும்!'

பின்னர் புலவர், "தமிழ்த் திலகமே! தங்களை நான் அறிய இயலேன். என் பாட்டில் உள்ள குற்றத்தை எடுத்துக் காட்டியதற்கு என் நன்றி. ஆனால் என் மேல் செருக்குளது எனக் கூறினீரே, அதை நான் அறியலாமா?" என்றார்.

'இவன் இன்னும் மாயை தெளிகிலன் போலும்' என்றெண்ணிய குழந்தைச் சிவனார், தனது திவ்வியஉருவோடு, ஆறு முகங்களையும் காட்டி, "ஏ புலவா! நீ தானே 'கோழிக்கும் பாடி கோழிக் குஞ் சிற்கும் பாடவோ' என சிறுமதிகொண்டு திரிந்தவன்? இப்போது எம்மதிகொண்டு குஞ்சுக்கும் கீழ்போய் முட்டையைப் பாடி னாய்?" என அதட்டினார்.

புலவர் நடுநடுங்கி, "தமிழ் அறியும் பெருமாளே! நான் முக்காலும் நின் அடிமை; என்மீது தயை கூர்ந்து அருள் கொள்க. உனதருள் வாக்கால் நற்றாயி ரங்கல் என்ற துறையை யான் உய்யு மாறு பாடித்தருக" என வேண்டவும் முருகப் பெருமான் மன மகிழ்ந்து, "புலவரே, அச்சம் கொள்ளற்க; நீ கேட் கும் துறையை உன் பேரோடு பாடு கிறேன், கேளும்" எனக்கூறி பின்வரும் வெண்பாவை இசைத்தார்:

விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடு மென்றேங்கிச்—செழுங்
கொண்டல்
பொய்யாத கானகத்திற் பேய்வளையுஞ்
சென்றனளே
பொய்யா மொழிப் பகைஞர் போல்.

[செழுமை தங்கிய மேகம் தன்னிடத்தி ருந்து திவலைகளை அக்கானகத்தில் நழுவ விடின் அவை தரையைக்கிட்டு முன் வெப் பத்தால் வெந்துபோம்; ஒரோவழி வேகாது தரையைக்கிட்டுமாயின் அவ் வெஞ்சுரத்திலிருந்து குபீரென வெழுஞ் சுடரால் சுட்டுப் பொசுக்கப்படும் என ஏக்கமுற்று எக்காலத்தும் மழை பொழி யாத அப்பாலைவனத்தின் வழி எனது பேதைப் பெண் பொய்யா மொழிப் புலவ ரது பகைஞர் அவ்வழி பயந்தோடுவது போல் தானும் தலைவனுடன் சென்ற னளே!]

இவ்வரிய வெண்பாவைக் கேட்டதும் புலவர் மேலும் பரவசமுற்று, "சிவனார் திருமகனே! உனதருளால் உனக்கே யடிமை ஆகி உய்ந்தேன்! உய்ந்தேன்! உன் அருள் எப்போதும் எனக்கு வேண் டும். நீ என் பொருட்டு முட்டையென பெயர் படைத்தாயாதலின் அப்பெயரும் இவ்வுலகில் நிலவும்படிச் செய்" என வேண்டுகோள் விடுக்கவும், புலவர் வேண் டியவாறே, கடவுள் அருள்புரிந்து கட்புல னுக்கெட்டாது மறைந்தார்.

வாழும் உழைப்பாளி

by

P. A. வெங்கடாசலம், I-B. Sc. Branch I

தோழா, நீண்ட நாட்களுக்குப் பின்னர் உமது மடல்கண்டு மகிழ்வெய்தினேன். ஆயின் உள்ளுரை எனது உள்ளத்தைக் கிளர்ச்சியூட்டியது, உரையிலிருந்து உனது உள்ளத்தெளிவை பளிங்கு போல் காட்டிவிட்டாய். பட்டம்பெற்ற பின்னையுமா கிராமத்தில் விருப்புக்கொண்டு வாழ்கிறாய், என்றாய். மனிதன் தன் வாழ்வில் அறிவிற்றிகழ வேண்டின் அறிவாளிகள் நிறைந்துள்ள சூழ்நிலை அமைத்துக்கொண்டு அன்றாடம் அவர்களிடம் பழகவேண்டும். நாட்டுப்புறத்தில் வள்ளுவர் இயம்புவதுபோல் முகத்திரண்டு புண்ணுடையவர் நிறைந்துள்ள காலை, என்னுடைய வாழ்க்கை எனது வாழ்வு பாழ்படுவதைத் தவிர வேறுவழியில்லை யென்றனை. கெட்டும் பட்டணம் சேர் என்ற முது மொழிக்கிணங்க என்னை நகரத்தில் வாழ்க்கையைத் துவக்கு என்றனை. பண்படா உனது உள்ளத்தின் ஊற்று என் மனதைப் புண்படுத்துகிறது. நமது நாட்டிற்கே புறம்பான கருத்துக்கோவை இவை.

கல்லூரியிலும், பள்ளியிலும் ஒன்றாக வாழ்ந்தோம் நாம். பள்ளியில் பயிலுங்கால் அறியாச் சிறுவர்கள். கல்லூரி வாழ்க்கை சென்னை நகரிலே. பணம் படைத்தவன் நீ. செல்வத்தின் செருக்கை உணர்ந்தவன் நான். நகரத்தை நன்கு உணர்ந்தாய். பணப்படைப்பின்மிகுதியால், சீமான் சீமாட்டிகளோடு பழகினாய் வாழ்ந்தாய். உன் கண்முன் தோன்றுவதெல்லாம், பட்டும் பீதாம்பரமும், சாளரங்கள் அமைந்த மாளிகையும் நான் வாழ்ந்ததெல்லாம் எழைப் பாமரனோடு, நான் கண்டதெல்லாம். மனிதனை மனிதன் சுமப்பானும் வண்டி இழுப்பானும், மூட்டை எடுப்பானும், வயிறு வற்றியவனும் கந்தையுடுத்தி மந்தை மந்தையாகத்திரிவோரும், தனக்கென குடில் இல்லாதவனும், நீண்ட சாலைகளில் கண்துயில்வோரும்தான் நீ படித்துப் பட்டம் பெற்றதெல்லாம் உனது புகழுக்காகவும், வருங்கால வாழ்க்கையை வளம்செய்யும் சுயநலத்துக்காகவும் தான் என்று கருதுகிறேன். ஆயின் நான் கற்றதெல்லாம் கிராம மக்களை நல்வழிக்குக் கொண்டுவரவே, படிக்காத பாமரனுக்கு பகுத்தறிவு காட்டவே, சிந்தையில் தெளிவில்லாதவனுக்கு ஒற்றுமையைப் புகட்டவே. மழலை மொழியும் குழந்தைகளை மகிழ்ச்சியில் மூழ்கவைப்பதும், இளஞ் சிறார்களை சோம்பியிராமல் சுறுசுறுப்புடன் திகழச்செய்யவும், இவர்களைப் பள்ளியில் தங்களுக்கு பிடித்தமான பாடங்களை படிக்கவைப்பதும், நம்போன்ற வாலிபர்களுக்கு அலுவலும், அதற்கு எற்ற கூலியும் கொடுத்து; தமிழன், காதல், மானம், வீரம், போன்ற மூன்றிலும் தலைசிறந்தோன் என்றும்; எடுத்துக்காட்டாக குறளையும், சிலப்பதிகாரத்தையும் புறநானூற்றையும், அக நானூற்றையும் எடுத்துக் கூறுவதும், முதியோர்களை ஓய்வெடுத்துக்கொள்ளச் செய்வதும் எனது வழக்கமாகிவிட்ட வளம்பெற்ற வாழ்வு.

நாட்டுப்புறத்தில், பயிர்கள் விளையவில்லையானால், மக்கள் உழைக்கவில்லையானால் நகரமாந்தர் அனைவரும் துன்புறுவர் என்பது உறுதி. கிராமமே நமது நாட்டின் அச்சாணி என்று காந்தீயம் கூறுகிறது. நேருவும், நம் நாட்டிற்கு முதுகெலும்பு, கிராம மக்களே என்று பலமுறை கூறியிருக்கிறார். பானையில் இருந்தால் அள்ளும்போது அகப்பையில் வராது என்றவாறு. இங்கு விளைவில்லையானால் ஆண்டு பட்டினிதான். மனிதனை மனிதன் இழுத்து நாதியற்றுக்கிடந்து சாவதை வீட மண்ணைக்கிளறி பொன் விளையும் பூமியாக ஆக்கலாம் என்பது என் திண்ணமான எண்ணம். பங்களாவில் தூங்குவோனுக்குப்பங்கா இழுப்பதைவிட எங்கள் கிராமத்தில் நீர் இறைத்து செடிகொடிகளை வளர்க்கலாம். பட்டினியால் வயிறு காய்ந்து வற்றுவதைவிட, இங்கு உழைத்து மெலிந்தான் என்று கூறுவது சாலவும் சிறந்தது. படித்துப் பட்டங்கள் பலபெற்றும் பொய்கூற அஞ்சாதவனைக் காட்டிலும், சத்தியமே தனது லட்சியம் எனக் கொண்ட பாமரன் பன்மடங்கு மேல். குற்றமே கண்டறியாதானை கொலைக் குற்றம் சாற்றி மரண தண்டனை அளிப்பதும், கொலைக்குற்றம்புரிந்தோனை அக்குற்றத்தினின்றும் விலக்குவதும் உங்கள் நீதிமன்றங்களில் காணுதல் வெள்ளிடைமலை. அதைக் காட்டிலும் எங்கள் சிறு சபைகள் முற்றிலும் மேல், அழகான அங்கிகள் அணிந்தால் நஞ்சு ஊறும் உள்ளத்தையும் மறைக்கலாம் என்ற எண்ணம்போலும் உங்களுக்கு பணம் இருக்கலாம். ஆயின் குணம் காண்பது அரிது. எங்களிடம் பணம் இல்லை குணம் காணலாம்.

கிராமங்களிலும் அறிவாளிகள் இல்லை என்று கூற இயலாது. பெரும் விஞ்ஞானிகளும் அறிவாளிகளும் இங்கு நிறைய உள்ளார் என்று நேருவே ஒருமுறை கூறியிருக்கிறார். கலையுலகம் கண்ட கவிஞர்களும், விஞ்ஞானிகளும் நகரத்தில் தோன்றி ஆங்கு கற்று, அறிவாளி ஆனார்கள் என்பதற்கு என்ன உறுதி கூற இயலும்? கிராமங்களில் பாமரனுக்கு மகனாகத் தோன்றியவன் இயற்கையை நுணுகி செயற்கையை அணுக வில்லையா, கலையென்னும் கடலில் தவழவில்லையா, இவையெல்லாம் ஓரளவு கல்வியுடன் அறிவின் ஆற்றலும், கவியுலக மோகத்தாலும் முகிழ்த் தெழுந்தனவே.

கிராமங்களில் கிழக்கு வெளுத்ததும் உழவன் காளையிரண்டையும் கையில் பிடித்துக் கழனி

நோக்கி விரைவான். கழனியில் காளைகள் இரண்டையும் கண்ணிகயிறு கொண்டு பிணைத்து கலப்பையையும் கட்டி கதிரோன் செங்கதிர்களைப் பரப்பு முன்னரே உழத் தொடங்குவான். சேறும் சகதியுமாக நிரம்பும் அவனது அங்கங்களில், உழுத பின்னர் நீர் நிரப்பப்படும் அக்கழனிகளில், மாதர் குழாம் நாற்று நடுவார்கள் அவ்வயல்களில். சில நாள் சென்ற பின் களை நீக்கினால் நெற்பயிர் முதிரும், முற்றிய பயிர்களிலிருந்து கதிர்கள் வெளிவர, இவைகளிலிருந்து மணிகள் முற்றும், மணிகள் நிறைந்த கதிர்கள் அறிவுடைச் சான்றோர் போன்று தலைசாய்ந்து நிற்கும் காட்சி பார்க்கப் பார்க்கத் தெவிட்டாதது. அறுவடைக்காலம்; மாந்தர் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கும் காலம். அக்காலங்களிலே கல்லாதவனுக்கும் காதல் கீதம் தன்னையறியாமல் துள்ளிவரும். காதலியும், காதலனும், ஒருவரை ஒருவர் மிஞ்சுவர் குறும்புக் காதலிலே. தை மாதம் பிறந்தவுடன் உழவன், திருநாள் கொண்டாடுவான், மூன்று நாட்களும் முறையே தொடர்ந்து முதல்வரும், அறுவடை முடிந்ததும் தானியங்களை தன்னுடன் ஒத்துழைத்தோர்க்கு தானமாக வழங்குவான். ஏழை எளியவர்க்கும், உழைக்க இயலா பிச்சைக்காரர்களுக்கும் வாரி வழங்குவான். எஞ்சியதை வீடு கொண்டுவந்து சேர்த்த பின்னர் பொங்கல் விழாவில் மூழ்குவான். அன்று சிறார்களெல்லாம் சிறு சிறு விளையாட்டுகளிலும், தலைவனும் தலைவியும் புத்தாடை அணிந்து அகமகிழ்வதும், வயது வந்தோர் விளைவின் பயனை எண்ணி எண்ணி மகிழ்தலும் காளைகளை அவிழ்த்துவிட்டு, அதனைப்பிடிப்பதும் அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் செயல்கள்.

இயற்கை யழகை அனுபவிக்க நாட்டுப்புறம் தான் ஏற்றது. சிந்தனைக்கு பெருந்துணை செய்வது இயற்கையின் விளைவே. உயிரற்ற உடம்பின் கூறுகளை உயிருள்ள, பயனுள்ளவைகளாக செய்வது இயற்கையின் அழகே. தென்றல் தவழுவதையும் அன்றலர்ந்த செந்தாமரைகள், நீர் சுனைகளில் மலர்ந்து கிடப்பதையும் ஆங்குக்காணலாம். எங்கள் காடுகளில் உள்ள அடர்ந்து பசுமை நிறமுள்ள மரங்கள், வெய்யோன் தன் இளங்கதிர்களை பரப்பும்போது அழகு தெற்றென விளங்குகிறது. பால் நிலவு தன் கதிர்களை, அகன்று நீண்ட மணற்பரப்புகளின்போது பரப்பும் அழகு மிளிர்கிறது. முத்திழைத்த பந்தலில் மாணிக்கம் ஒன்றை தொங்க விட்டது போன்ற காட்சியைக் கிராமங்களில் காணுதல் எளிது. மற்றும் கொவ்வைய் பழமும், காந்தள் மலர்களும், மல்லிகையும். அல்லியும், அங்கு ஏராளம். நீரோடைகளும், ஊற்றுகளும், சுனைகளும், ஆண்டுகாண்பது எளிது. கதிரோனின் மாலைக்கதிர்களையும், அப்பொழுது வானிலுள்ள மேகப்பிழம்புகளையும், பலபெருஞ் செந்தீவுகள் போன்ற காட்சிகளைக் காணலாம். பல்வகையாகப் பயன்படும் தேனும், இனிமையான கரும்பின் சாறும், முக்கனிகளான, மா, பலா, வாழை போன்ற கனிகளும், எலுமிச்சம் பழம்போன்ற அறிவுக்குத் தெளிவூட்டும் கனிகளும், ஈராண்டு நிறைந்துள்ளன. சஞ்சீவிகளுக்கு பஞ்சமில்லை ஈண்டு.

வாழும் உழைப்பாளி உழவன் ஒருவன்தான். அவனது வாழ்க்கையே நல்ல பாறையின் மேலும் வளரும் பெறற்கரும் மருந்துச் செடிபோன்றது. உழைப்பதற்கு நகரத்தில் அலுவலுக்கு செல்வது போல் வரையறை இல்லை. ஓயாமல் உழைத்தால் அல்லது தகுந்த பலன் காண்பது அரிது. இரவும் பகலும் நகரத்தினிர்க்கே அன்றி, உழவர்களுக்கு அல்ல. எர் உழவும், எரு இடவும், நீர் பாய்ச்சவும், நாற்று நடவும், அதனை பாதுகாக்கவும், பாதுகாத்ததை அறுவடை செய்து வீட்டிற்கு கொண்டு வரவும் உழைக்கின்றான். இதற்கிடையில் இடையூறுகள் பல நேரிடலாம். பேரிடி மின்னலிலும், கொட்டும் மழையிலும், தீண்டும் அரவங்களின் இடையேயும், மூண்ட இருளிலும் அவன் தொழில் புரிவது மிகவும் அபாயகரமானது.

நெல் மணிகளை குவியல் குவியல்களாகக் குவித்து மகிழ்வான். ஆனால் தான் உண்பது, கேழ்வரகுக் கூழும், கம்பு, சோளம் போன்றவற்றின் சோறும் தான். அரிசிச் சோற்றைச் சாப்பிடத்தகுந்தவர்கள்தான் சாப்பிட வேண்டுமோம். அவனது பரோபகாரத்தை சொல்லி இயலாத செயல். அவனால் விலங்கினங்களும் பறவைகளும், ஊர்வனவும் பிழைக்கின்றன என்பதில் ஐயமில்லை அவனது வாழ்க்கையை எளிமையாகவே நடத்தி வருகிறான் என்பதில் ஐயமேதுல இல்லை. இடுப்பில் ஒரு துணி, தலையில் ஒரு துண்டும், இவற்றைத்தவிர அவனுக்கு அவசியமானது ஒன்றுமில்லை. தவிரவும் அருகாமையில் இருக்கும் ஊர்களுக்குச் செல்லுங்கால் நடந்தே சென்று; பணத்தைச் செலவு செய்யான் அவனது வாழ்க்கையில் கோட்டும், சூட்டும் தேவையில்லை பாலும், பழமும் அவசியமில்லை. மிகவும் எளிய வாழ்க்கை நடாத்தி, நன்றாக உழைப்பானை நாம் வாழ்த்தாமல் இருக்க இயலாதல்லவா?

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் என்று வள்ளுவனாரும்; உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதியும் உழவுத் தொழிலின் மேன்மையை சிறப்பித்துக் கூறியுள்ளார். அவன் வாழ்க்கையில் முன்னேறினால்தான் மற்றவர்கள் நன்றாக வாழலாம். நம் போன்றவர்கள் மேடைகளில் பேசிவிட்டால் போதாது. நாமும் உழவனின் நிலையறிந்து அவனுக்கு ஊக்கங்கொடுக்க வேண்டும். படித்துவிட்டு எல்லோரும் நகரத்தில் வாழ்க்கை நடாத்தினால உழவுத் தொழிலை யார்தான் நடத்துவது. இவ்வாறு ஒவ்வொருவரும் நகரம் சென்று வாழ்ந்தால் நமக்கு நாமே சோம்பிரிகளாக வாழ்கிறோம் என்றுதானே பொருள் நம் நாட்டிற்கே துரோகம் நினைத்தவர்களாவோம். நாம் எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும். படித்துவிட்டு முடிந்தவரையில் கிராமங்களில் சென்று உழவனுக்கு ஊக்கமளித்து கிராமத்தை வளமாக்கினால் நமக்குமட்டுமல்லாமல் நம் நாட்டிற்கு பெருஞ் சேவை புரிந்தவர்களாவோம். பண்டைக்காலத்திலும் உழவன் பெருமையுற்றிருந்தான் இப்பொழுதும் எல்லாத் தொழிலினும் தலை ஓங்கிவிளங்கினான். எதிர்காலத்திலும் தொழிலுக்கு பங்கம் விளையாது என்பதில் ஐயமில்லை யல்லவா.

படித்துப் பட்டம் பெற்று பகுத்தறிவு படைத்த நீ, எனது நீண்ட மடல் கண்டு மலைக்காமல், மறுமடல் வரைவாய் என்று நம்புகின்றேன்.

மன சாட்சி

by

சிவ. ஜெயராமன், II B.A., Branch I.

'மனம்' என்ற வார்த்தையைப் பற்றி அடிக்கடி பேசுகிறோம். ஆயினும் அதன் சொரூபத்தைக் கண்டவர் எவரும் இல்லை. நினைப்பதும், மறப்பதும் மனதின் தொழில். இவ்விரண்டு தொழில்களிலும் மனத்தின் சொரூபம் முழுமையும் அடங்கி யிருக்கிறது.

மனம் செய்யும் காரியங்கள் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிற சாட்சி ஒன்றுண்டு; அதுவே மனசாட்சி (ஆகவே மனசாட்சி என்றால் மனமாகிய சாட்சி என்று அல்வழிச் சந்திப் பண்புத் தொகையில் பொருள் கொள்ளாமல் மனத்தான் சாட்சி அல்லது மனத்திற்குச் சாட்சி என்று வேற்றுமைச் சந்தி ஆறும் அல்லது நான்காம் வேற்றுமைத் தொகையில் பொருள் கொள்க.)

ஒருவன் கெட்ட காரியம் ஒன்றைச் செய்ய முற்படும்போது அல்லது செய்யும் போது 'இது பாபம்' என்ற ஓர் சிந்தனை மனதில் தோன்றும். இதுவே மனசாட்சி. ஆகவே, மனசாட்சிக்கு 'இது நல்லது, இது கெட்டது' என்று பகுத்தறியும் தன்மை உண்டு. எனினும் இது மனதின் தொழிலைக் கண்காணித்துக் கொண்டிருக்குமே ஒழிய தொழில் ஒன்றும் செய்யாது.

மனசாட்சியே அறிவு. அச்சாட்சியை அறியாமல் மனம் எதையும் செய்யமுடியாது. பொறாமை, வஞ்சனை, சூது, துரோகம் ஆகியவை மனதில் தோன்றும் கெட்ட குணங்களாம். மனம் மனசாட்சியிடமிருந்து இக் குணங்களை மறைக்க முடியாது. நாமே ஒரு கெட்ட காரியத்தைச் செய்துவிட்டால், மனசாட்சி என்ன பாடுபடுத்துகிறது நம்மை!

மனசாட்சியே மனதிற்கு உயிர். அதன் பிரகாசம் மனதில் பட்டாலே யொழிய மனம் தொழில் செய்யாது. மனம் சத்துவம், இரஜசு, தமசு ஆகிய குணங்களைக் கொண்டது. சத்துவம் மனதின் இயற்கைக் குணமாதலின் மனம் சத்துவ சொரூபம். சத்துவ பாகமே சாட்சியாகும். ஏனென்றால், சாட்சியைக்கொண்டு மனத்தைத் தேடினால் மனம் இராது. சாட்சி மறைந்தால்தான் மனம் முளைக்கும். மனசாட்சியின் சம்மதம் கொண்டு ஒருவன் ஒரு காரியத்தைச் செய்வானேயாயின், அக் காரியம் பழுதுறாது. சாட்சியாகிய இந்த நிலை ஒரு சமயத்தில் மின்னல் போல் தோன்றி மறைகிறது. சமயம் வரும் போது, 'இது என் மன சாட்சிக்கு விரோதம்', 'மனசாட்சியாய்க் கூறுகிறேன்' என்று மொழிவார்கள் சிலர். ஆனால், அவர்கள் பேச்சில் நயம் இருக்காது; அவர்கள் பேச்சு நிலைத்திருக்காது. அநேகர் மன சாட்சியை லட்சியப்படுத்தாது, மனம் போனபடிக் காரியத்தைச் செய்துவிட்டு, பிறகு மனசாட்சியால் அவதியுறுகிறார்கள்.

புறநானூறும், ஒற்றுமையும்

by

M. அம்மன்னுல்லாகான், Class II B. Sc., Branch I.

புறநானூறு பழந்தமிழ் நாட்டின் தன்மையையும், பெருமையையும் ஒருங்கே எடுத்துக்காட்டும் ஒரு அருந்தமிழ் நூல். அந்நூலில் பெரு மன்னர்களின் படைத் திறச் சிறப்பு விளக்கப்பட்டிருக்கிறது; மன்னர்களின் கொடைத்திறம் சீரிய முறையில் விளக்கப்பட்டிருக்கிறது. கல்வி, கேள்விகளில் சிறந்த பெருமக்களின் பெருமையும் விளக்கப்பட்டிருக்கிறது. சுருங்கக் கூறின் தமிழறியும் ஒவ்வொருவரும் படித்து, இன்புற்றுப் பயன்பெறத்தக்க நூல் அது.

இன்றைய உலகின் நிலையைச் சிறிது கவனிப்போம். ஒவ்வொரு நாட்டிலும் உள்ளும், புறமும் ஏதாவதொரு பிரச்சனை இருந்துகொண்டே இருக்கின்றது. அத்தகைய பிரச்சனைகள் இடையருமல் நாட்டு மக்களை அநேக இன்னல்களுக்குள்ளாக்குகின்றன. மக்கள் அமைதியை யிழக்கின்றனர். இத்தகைய பிரச்சனைகளால் உண்டாகும் முக்கிய தீமையைப் பிற நாடுகளுக்கிடையே ஒற்றுமையின்மை. ஒற்றுமையின்மையைப் போக்கி மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்கவும், மக்கள் வாழ்க்கை மேம்படவும் இன்றைய உலகில் பல அறிஞர்கள் முயற்சி செய்து வருகின்றனர். இத்தகைய ஒழுங்கீனங்கள் இக்காலத்திலன்றி, பழங்காலத்திலும் இருந்துவந்தன. இக்காலத்தில் அமைதிக்காக உழைத்து, ஒற்றுமையை நிலவச்செய்யப் பெருமுயற்சி செய்யும் நல்லறிஞர்களைப்போல் பழந்தமிழ்நாட்டில் புலவர்கள் நல் தொண்டாற்றி வந்தனர். திருவள்ளுவர் ஒற்றுமையின் சிறப்பை இரண்டேயடிகளில் குறிப்பிடுகிருர்,

> 'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
> சால மிகுத்துப் பெயின்'

என்ற குறளால் உவமையால் விளங்குகின்ருர் ஒற்றுமையின் தன்மையினை. ஒற்றுமை நிலைநாட்ட முயன்ற சிறந்த புலவர்களில் குறிப்பிடத்தக்கவர் கோவூர்க் கிழார், காரிக் கண்ணனர், புல்லாற்றூர் எயிற்றியனர் முதலியவர். இவர்களில் கோவூர்க்கிழாரின் தொண்டு நிகரற்றது. அவருடைய செயலின் பெருமையை இங்குச் சிறிது நோக்குவோம்.

உலகத்தில் எந்நாளும், நாட்டின்கண் பூசல்கள் உள்ளும், புறமும் இருந்து கொண்டேயிருக்கும். அதைப்போல்குடும்பங்களிடையேயும் பூசல்கள் இருந்துக் கொண்டேயிருக்கும். அரச குடும்பத்திலிருந்த ஒரு பூசலைக் கோவூர்க்கிழார் எளிதில் தீர்த்ததாக புறநானூற்றில் கூறப்படுகிறது. நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்பவர் இரு சோழ மன்னர்கள்; இருவரும் ஒருகுடியில் பிறந்தவர்கள் அவர்களில் நலங்கிள்ளி மிக்க வீரமுடையவன்; சேர, பாண்டிய மன்னர்களை வென்ற புகழையுடையவன். நலங்கிள்ளி ஓர்நாள், நெடுங்கிள்ளியின் தலைநகராகிய உறையூரை முற்றுகையிட்டான். இதைக்கண்ட கோவூர்கிழார் வியந்தார். ஒரு குடியில் பிறந்தவன், அதே குடியில்பிறந்தவனைப் பொருவதா? ஒற்றுமை நீடித்தால்தான் அமைதியாக வாழமுடியும். நாம் அவர்களிடை ஒற்றுமையை நிலைநாட்டுவோம் என்ற கருத்தினை மனதிற்கொண்டு நலங்கிள்ளிடம் சென்ருர்.

நலங்கிள்ளியிடஞ் சென்ற கோவூர்க் கிழார், "அரசே! உன் பகைவன் பனம்பூச்சூடிய சேரனல்லன்; வேப்பமாலை

யணிந்த பாண்டியனுமல்லன்; உன்னைப் போலவே ஆத்தி மாலையை யணிந்த சோழன். நீங்களணிந்திருக்கும் மாலைகளே நீங்கள் ஒரு குடிப்பிறந்தீர் என்பதனை அறிவுறுத்துகின்றன. போர்புரிந்தால், அதில் இருவரும் வெற்றிபெறுவது இயன்கையன்று. உங்களில் ஒருவன் தோற்றாலும், தோற்பது உங்கள் குடியேயன்றி வேறு குடியன்றே! ஆகையால் உங்களுடைம செயல் குடிப்பெருமைக்குக் களங்கம் கற்பிக்கவல்லது. ஆகையால் நீங்கள் பொராமலிருப்பீராக! நீங்கள் இருவரும் போரிட்டால் உம்மால் தோற்கப்பட்ட பகைவர்கள் உடல் பூரித்து வகையெய்துவர். ஆகையால் உங்கள் குடிக்கு அவப் பெயர் வராமலிருக்க உடனே போர்க் கோலத்தை விட்டு விடுக" என்று சொல்நயம் தெரிய, மனதில் படும்படிக் கூறுகிறார். அவர் தம் பாட்டினை நோக்குவோம்.

"இரும்பனை வெண்டோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன
நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே,
நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே
ஒருவீர் தோற்பினும் தோற்பதுஉம் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே, அதனால்
குடிபொருள் அன்று நும் செய்தி கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும் இவ் விகலே"
—45: புறநானூறு

கோவூர்க்கிழார் நல்லெண்ணத்தைக் கொண்டு, தம் சொல்வன்மையால் இரு வேந்தர்கிடையே ஏற்பட்டிருக்கவேண்டிய பெரும்போரைத் தடுத்தார். எவ்வகையில் எடுத்தியம்பினால் அவர்களுடைய மனதில் படும் என்று நன்றாய்ந்து ஒரு நல்ல அறிவுரை பகர்கின்றார். ஒரு செயல் அவர்களுடைய குடிக்கு இழுக்குண்டாகும் என்றறிந்ததால் அச்செயலை மக்கள், சிறப்பாகமன்னர் செய்யத் தயங்குவார்; விட்டு நீக்குவர். நலங்கிள்ளியும், புலவர் பெருமானுடைய கருத்தினை ஆராய்ந்து போர்க் கோலம் நீக்கி ஒற்றுமை பூண்டொழுகினான்.

மற்றொரு சிறந்த புலவராகிய காரிக் கண்ணனார் சிறப்பினைச் சிறிதறிவோம். குராப்பள்ளித்துஞ்சிய திருமாவளவன் என்பவன் ஒரு சோழ அரசன்; வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்பவன் ஒரு பாண்டிய மன்னன். இருவரும் நட்புப்பூண்டு, ஒற்றுமையுடன் சிறந்து விளங்கினர். அவர்களிருவரும் ஒன்று சேர்ந்தமர்ந்து அளவளாவும் காட்சியைக் கண்டார் காரிக்கண்ணனார்; மிகவும் வியந்து பெரு மகிழ்ச்சியடைந்தார். அந்நிலையில் அவர்களை வாழ்த்தும் வகையில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: நீங்கள் இருவரும் வீற்றிருப்பது பால் நிறக் கடவுளும், நீல நிறக் கடவுளும் இயைந்திருப்பதைப்போல் இனியதாய்க் காட்சியளிக்கிறது. நீங்கள் இவ்வாறு ஒன்று சேர்ந்திருக்கும் காட்சியைவிட வேறு இனிய காட்சியுளதா? நீங்கள் இவ்வாறே ஒற்றுமையுடன் ஒழுகினால் கடல் சூழ்ந்த உலகம் உங்கள் கைப்படும் என்பது உண்மை. ஆகையால் உங்கள் புகழ்வளர, நீங்கள் ஒற்றுமையுடன் வாழ்வீர்களாக! நல்லவைகள் போலவும், நியாயமுடையனபோலும் சிலர் சொல்லி உம்மைப் பிரிக்கப்பார்ப்பர். அத்தகைய சொற்களால் கெட்டுவிடாதீர்கள்; என்றும் இணைபிரியாமல் ஒற்றுமையுடன் வாழுங்கள். பகைவர் நாடுகளில் உங்களுடைய புலிக்கொடியும், கயல் கொடியும் சிறந்து விளங்கும்படி வாழுங்கள்", என்று கூறுகிறார். இவருடைய கூற்றைப் புறநானூற்றுப் பாடலால் அறியலாம்.

"பால்நிற உருவின் பனைக்கொடி யோனும்
நீல்நிற உருவின் நேமியோனும் என்று
இருபெருந் தெய்வமும் உடன்நின் றாஅங்கு
உருகெழு தோற்றமொடு உட்குவர விளங்கி
இன்னீர் ஆதலின் இனியவும் உளவோ
இன்னும் கேண்மினும் இசைவா ழியவே

ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர் இருவீரும்
உடனிலை திரியீர் ஆயின இமிழ்திரைப்
பௌவம் உடுத்தஇப் பயங்கெழு மாநிலம்
கையகப் படுவது பொய்யா காதே
அதனால் நல்ல போலவும் நயவபோலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காதல் நெஞ்சின் நும் இடைபுகற்கு அலமரும்
ஏதில மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்க நும் புணர்ச்சி வென்று வென்று
அடுகளத்து உயர்க நும் வேலே கொடுவரிக்
கோள்மாக் குயின்ற சேண்விளங்கு தொடு பொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய ஆகபிறர் குறைகெழு நாடே ".

—புறநானூறு.

ஆகையால் புலவர், ஒற்றுமையின் சிறப்பினை யறிந்து, ஒற்றுமையுடன் வாழத்தூண்டினர்கள். இதற்குச் சான்றாகப் புறநானூறு திகழ்கின்றது. புலவர் இருவர்க்கிடையில் போர் மூளுமுன்னும் தங்கள் முயற்சியால் தடுக்க முயன்றனர்; ஒற்றுமையுடன் வாழ்ந்தவர்கள் மேலும் ஒற்றுமையுடன் வாழ்ந்து, பிறருடைய நற் சொல்களைப்போல் தோன்றும், தீய சொற்களால் கருத்தழியாமல் வாழத் தூண்டினர்.

இத்தகைய நற்கருத்துக்கள்பலவற்றை விளக்கும் புறநானூற்றை எல்லோரும் கற்றுப் பயன்பெறவேண்டும். மக்கள் உலகில் கற்கவேண்டிய பல உள்ளன. இன்றைய நாட்களில் பலர் காலத்தை வீணாக்கி, வாழ்க்கையைப் பயனற்ற தாக்குகின்றனர். அறியவேண்டிய பல கருத்துக்கள் புறநானூற்றில் அமைந்துள்ளன.மக்கள் இனிமேலும் காலத்தை வீணே கழிக்காமல், புறநானூறு, திருக்குறள் போன்ற நன்னூல்களை யறிந்து பயன்பெற வேண்டும். படிக்கத்தெரியாதவர் பிறர்சொல் கேட்டாயினும், இலக்கியக் கூட்டங்கள், விழாக்கள் நடக்குமிடங்களுக்குச் சென்றும் கேள்வியாலும் பயனடையலாம். அங்கிலையில் சிறந்த நூல்களிடம் மக்கள் சிறிதளவாவது ஊக்கங்காட்டுவார். அவர்களுடைய ஊக்கம் வளர்ந்து நல்முடிவை அடைவதாகுக!

செம்புலம் பெய் நீரானான்!

by

ந. பூராசாமி, கணக்கியல், நான்காம் வகுப்பு.

பச்சை மாமலை பார்ப்பவர்தம் உள்ளத்தினை ஈர்த்துவிடும், எழில் மிகுமலை. சின்னஞ்சிறு நீரோடைகள்; அதன் மருங்கில் சிரிக்கும் மலர்களைத் தாங்கித் தவளும் மலர்க்கொடிகள். தேன் உண்ணும் வண்டுகளின் இனிக்கும் இயற்கைப் பண். மழை பொழிந்தக்கால் உருண்டோடும் வெள்ளம் மலர்கள் விரும்பிப் பறித்து தன்மேல் அணிந்து கொண்டு வரும் அழகுமிகு காட்சி கண்ணிற்கு விருந்து. பாட்டாளியின் உடல்மிசை வடியும் வியர்வையை யொத்து அந்த சிற்றாற்றின் நெடும்பயணக் களைப்பில் தோன்றிய வியர்வைகள் அனைத்தும் வெண்ணுரைகளாய் விரையும் காட்சி; மணம் பரப்பியோடும் மலர்க்கொத்தை யடைய ஓடும் நிலையன்னவாகும். மலர்க்கொத்தை நுரைசூழ அது பைய நகரும் ஐயோ! விடுங்கள் கன்னியரின் கருங்குழலில் போய் அமர்ந்தால் அல்லவோ கருப்போடு சிவப்பிணைந்துசிறப்புத்தரும் என்று செவ்வலரி அல்லல்படும் காட்சி அழகுடை மாட்சியாம். கருமுகிலைக் கண்டுவிட்டால் களித்தாடும் மயில் அன்று மழைபட்டு நனைந்துவிட்டதால் தன் தோகையினை விரித்து ஈரத்தைப் போக்கிக் கொண்டிருந்தது. அதன் தோகையை தன் அலகால் கொத்திப் பார்த்து மகிழ்ந்த பேடை பெண்ணினத்துக்கு அழகு சொந்தமாயிருந்தும் தன் மயிலினத்திற்கும் அத்தகு வாய்ப்பில்லையே என்று எண்ணி வருந்தியது. நமக்கல்லவா அத்தோகை இருந்திருக்க வேண்டும்; ‘ஆண்’ இனம் பெற்றது எங்ஙனம்? எனச் சிந்தித்துக் கொண்டிருந்தது. ஓடிவரும் நீரெழுப்பும் ஒலி, கேட்டு நிற்கும் மான் கூட்டத்தை அச்சுறுத்தும். நனைந்து நடுங்கும் மான்களின் நடுக்கத்தை அஞ்சி நடுங்கும் உள்ளத்தின் வெம்மை மாற்றியமைக்கும். ஊடல் கொள்ளும் கிளியிரண்டு ஓடி விளையாடும் காட்சி, ஊடல் கொள்ளும் பெண்களை நாட்டங்கொள்ளச் செய்வதற்கு ஆண்கள் படும்பாட்டை நினைவுறுத்தும்.

ஓடிவரும் காட்டாறு, ஒடிந்துவரும்மரக் கொம்பு, பொங்கிவரும் நுரைக்கூட்டம், சூழ்ந்து நிற்கும் விலங்கினங்கள் இதனைப் போய் வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறாயே—ஆடிவரும் பெண்ணினமா, பண்ணமைக்கும் பாவையரா, கொஞ்சுமொழி பேசும் மங்கையரா, விழியாலே மொழிபேசும் காரிகையா, புன்சிரிப்பை ஏந்திவரும் புகழணங்கா—எதுவுமில்லையே எழு! போகலாம் இப்படியொருவரின் இடிகுரல்; வீட்டிலே என்னப்பா பகல்முழுவதும், இரவு முழுவதும் பார்த்துப்பார்த்து சலிப்படைந்த காட்சிகள்—இப்படியொரு குரல். “மாலை வேளை, வீடுசெல்லாவிடில் மனைவியின் வெஞ்சினத்திற்கு ஆளாக வேண்டியவன் நான்; நீயோ........” என்றுமட்டும் மற்றோர் குரல் கேட்டது. ஆனால் இயற்கையழகில் உள்ளம் ஊன்றியவர் திரும்பவில்லை. சற்றுபின், “நண்பா! இதோ இந்த அழகிய காட்சியைப் பார்” என்று பின்பக்கம் திரும்பினான்....!” நண்பனைக் காணவில்லை. இயற்கையும் தானும் என்று உணர்ந்தான். இன்பக் காட்சியைக் கண்டு களித்துக்கொண்டேயிருந்தான். பகலவன் மறைந்தான்; அவனும் வீடு திரும்ப எண்ணினான்.

இயற்கை எழிலைக்கண்டு களிப்பெய்தி மீண்டவன், வழியில் அவனையே விரும்பி, அவனுக்காகவே வளரும் ‘முகிலழகி’ வழிமேல் விழியளாய் இவன் வருகையை நோக்கி நின்றதைக் கண்டான். ‘அத்தான்...’! பல நாட்களாக என்னை ஏமாற்றி வருகின்றீர்கள். என் வளர்ச்சி வாழ்க்கைக்கா அல்லது அழிந்து மண்ணோடு மண்ணாக வேண்டியதுதானா? இதோ என் ஆட்டத்தைப் பாருங்கள். உங்களுக்காகவே நான் இதனைப் பயின்றேன் என நவின்று ஆடுகின்றாள் அவள்.

ஆட்டத்தைப் பார்த்தவன் நகைச்சுவைக்காகப் பாடுகின்றான் :

"காக்கை கருப்பிலே கருங்குயில் நிறத்திலே
யாக்கை அழகி வந்தாடினும் அவளாடினும்!
பார்க்கக் கண்கூசுதே அவள் பரப்பிடும் கருமையே!
உடலும் மறையுதே அங்கு ஒளிரும் கருமையால்"!

'நிறுத்துங்கள்' முடிவு என்பது தேவை!' என்றனள். இவ்வளவு சொல்லியும் புரியவில்லையா? தெளிவாக சொல்லட்டுமா? என்றான். 'உங்கள் தெளிவுரை எனக்கு வேண்டுவதில்லை; எந்தப் பேரழகியை நீங்கள் மனைவியாக்குகின்றீர்கள் என பார்க்கின்றேன் எனப் பகன்று பிரிகின்ருள்.

நெடுஞ்சாலையில் தன்னை மறந்து நின்று கொண்டிருந்தான். 'பச்சமணி, பவழமணி.......என்று பண்ணமைத்துக் கொண்டு தெருவழியே சென்றவளிடமிருந்து தன் கண்ணைப் பெற்ருனில்லை. அவளமைத்த பண் அங்குநின்ற காளையின் சினத்தைக் கிளப்பிற்றுபோலும்! காளை கன்னியினை நோக்கியோடியது. அவ்ளோ அச்சத்தால் பின்புறமாக ஓடி வந்தாள்; செங்கனன்மேல் தெரியாத நிலையில் மோதினுள். அப்பப்பா! என்ன நாற்றம்! வருத்தும் வாடை! விழுந்தவள் மன்னிக்கவும் என்ற ஒரு வார்த்தையைக் கூட சொல்லவில்லையே. இவள் என்ன பெண்தானு? என்றவளிடம் உள்ள குறைகளனைத்தையும் ஒரு நொடியில் தன் மனத்திரையில் படமாக்கினன். விழுந்தவள் வெருட்சிப் பார்வையைமட்டும் சிந்தியவாறு சென்ருள். அவ் வெருட்சிமிக்க பார்வை அவளைப் பண்புள்ளவள் என்று முரசறைந்தது. இவனும் செம்புலம் பெய் நீரானன்.

அந்த பார்வை அவனைப் பன்முறை சிந்திக்கச் செய்தது. அவள் மன்னிக்க என வேண்டாததன் காரணம்—அவள் அகந்தையுடையவள் என்பதல்ல. மன்னிப்பு என்ற சொல்லையே அவளறிய வாய்ப்பில்லாமையே. ஒருசில பண்புடையாரும் அச்சொல்லை உணர்ந்து சொல்வதில்லையே! அவளந்த சொல்லினைச் சொல்லவில்லை. ஆனல் அவள் செய்தது தவறு என்றுணர்ந்தாள் என்பதை அவள் முகம் தெரிவித்தது.

உலகின் சுவையனைத்தும் ஒருங்கே உருவாக்கப்பட்டு தன்முன்னிலையில் நின்ருலும் அவனுள்ளம் இவளைத்தான் பெருஞ்சுவையாகக் கருதியது. அவை யனைத்தினையும் உண்டால் ஒழிய சுவைக்க முடியாது: அவையுணரமுடியாது ஆனல் இவளோ கண்ட அளவிலே அவனுக்குச் சுவையானள் நெருங்கவில்லை. ஆனல் சுவைத்தான் உள்ளத்திலே இனிப்பு அங்கு ஊறிவரும் கருத்திலே சிறப்பு, உடலெங்கும் உணர்வு. நரம்பெங்கும் சுவையுணர்வு, அவள் நடந்தாள்—அவன் சுவைப்பான்! அவள் நிற்பாள் அங்கேயும் சுவைப்பான். அவளை எங்கிலையில் பார்த்தாலும் அவனுக்கு இன்பந்தான். தன் கண்களை மூடினன். உள்ளத்தின் திரைகளிலே அவளுருவை வரைந்து மகிழ்ந்தான். நெஞ்சகத்தில் இருப்பதாக நெஞ்சையணைத்தான். கண்திறந்தான் காரிகை மறைந்தாள். எப்படியும் அவளையடைவதென உறுதி பூண்டான்.

சமுதாயம் அவன் முன் தோன்றி அவளைத் தூற்றிற்று. அவள் ஓர் நாடோடி; அவள் ஓர் பண்பாடற்றவள். கொஞ்சும் தமிழை நன்முறையில் பேச அறியாள் அவளது உடையைப் பார்! சுற்றத்தைப் பார்!—காட்டில் கிடக்கும் மைனவும், நரியும் அவர்கள் உணவு. குப்பையில் கிடக்கும் மணிகள் அவள் கழுத்து நிறைய. நீராடி உடலைப்பேணு முறையறியாள். இவளைப்போய் விரும்புகின்ருய், ஊரில் உனக்குத் தனியிடம் ஒதுக்கப்படும்! ஒட்டுறவு ஏதும் இராது! என்று எக்காளமிட்டது.

நாடோடி என்பது மாற்றமுடியாத ஒன்ரு? பண்பு அற்றவள் அல்ல! பண்பை அறியாதவள் அவள். தமிழைக் கெடுக்கவேண்டுமென்ற கேடுகெட்ட பண்பற்ற இனமல்ல அவள்.—பழகுமொழி அறியாள். நற்றமிழ் கேட்டறியாள் இதனுல் உள்ள குறையேயன்றி—உள்ளத்திலே தவறில்லை. உடையை உடுக்கத் தெரியாது என்பதல்ல. உடைகிடைக்

காத காரணம் சுற்றத்தை பழிப்பதில் பயனில்லே. அதைப் பண்புடையதாய் ஆக்குவோர் அல்ல என்று வருந்தாததே தவருகும். உணவுமுறை சீர்கேடானது. நாகரீகமற்றதுதான் ஆனுல்அவர்களுக்கு கிடைப்பது அதுதானே. காற்றக்கூடியது அனைத்தும் மாற்றியமைக்கும் பண்புகள் தானே! என்று அவனது உள்ளம் எண்ணியது.

மறுநாள் மாலே நெடுஞ்சாலேயில் அவளே சந்தித்த இடத்தினையடைந்தான். வருவாள் என எண்ணியே சென்ருன். அவன் எண்ணமும் தவருகவில்லே. அவளும் அவனேக் காணுவோம் என்று அங்கு வந்தாள். விலேயற்ற கரும்பவழம் அவள் கழுத்தினே சுற்றி நின்றது. ஆனுல் அது அவளுக்குத் தந்த அழகிற்கு விலேமதிப்பில்லே. முகத்தையும் பொன்னேயும் அணிவார்கள். அணிந்தும் அணிசெய்யப்பட்ட மரப்பாவை எனத் திகழ்வரேயன்றி உயிரோவியமாகக் காணமுடியாது. ஆனுல்......இவளோ! என்று எளிமையிலும் எழில் கண்டான். அவள் நிறம் கோவைக்கனியை தோற்ருேட்டும் சிவப்பு. இதழோ கோவைக்கனியே தான். ஆனுல், உள்ளிருந்த பற்கள்மட்டும் ஏனே காவிபடிந்திருந்தன. அவள் அருகே சென்று கொண்டிருந்தாள்....... குறத்தி, பவழசரம் என்ன விலே? என்ருன். 'ஒரு அணு' என்ருள். அதிருக்கட்டும் 'உன் பெயர்?'; 'மலேத் தேனு'. என்று வினவும் விடையும் பிறந்தன. நாளேக்கு மலேக்கு வா, பவழம் வாங்க வேண்டும்....! என்று கூறினன். அவள் 'சரி' என்ற வார்த்தையைமட்டும் உதிர்த்தவாறே நடந்தாள்.

மறுநாள் காலே கதிரவன் தோன்றி சின் நேரத்திற்குள் 'மலேத்தேன்' குடிசையைவிட்டு வெளியேறி மலே முகட்டினே யடைந்தாள். மலேயின் உச்சியில் ஓர் வீடு தெரிந்தது. அங்கு சென்ருள். மரமடர்ந்த மலே முகட்டில் அழகுமிகு இல்லம் கண்டாள். சுற்றிவரலாம் என்று சென்றவள் ஓர் மரத்தடியில் நின்று கவனித்தாள்.

சிற்பியால் கல்லேயும் எழுந்து பேசச் செய்யமுடியும் என்பதைச் செயல்படுத்திக் கொண்டிருந்தான். அவனது கையுடை சிற்றுளிபட்ட கற்களனைத்தும் கவினெழுகும் உயிரோவியமாக மாறிக் கொண்டிருந்தன. இவன் ஒரு அங்கத்தை செதுக்குவான். என்ன அழகு என்று அவனே புகழ்வான். மறு அங்கம் முடிப்பான். அதைப் புகழ்வதிலே பல நொடி கழியும். ஆம் அவனது உள்ளத் திரையில் உள்ள அந்த அழகின் திருவுருவைத் தான் எழில் மல்கும் சிலேயாக வடித்திருந்தான். கையிலே பவழ சரங்கள் கூழ்குடிக்க உதவும் குவளே. இடுப்பிலே பாவாடை, உடலங்கி; கருப்பிலே ஓர் மேலாக்கு. இத்தனேயும் அவன் செதுக்கிய சிலேயில் கண்ட அணிகலன்கள். தன்னுருவைக் கண்டு தானே மகிழ்ந்து கொண்டிருந்தாள். சிலே முடிந்தது, சிற்பியும் அருகிலே அமர்ந்து சிலேயைப் பார்த்தவாறு, "நீ மட்டும் வாய் திறந்து பேசிவிட்டால்.......நான் ஏன் அவளேத் தேடுகின்றேன்......" என்ருன் பின்புறத்தே வந்துநின்ற மலேத்தேன்.... இது என்னங்க........! என்ருள். மலேத் தேன்...என்ருன். உம்! சிலே தான் பேசியதோ என்று மலேத்தேன் என்ருன் மீண்டும் என்ன இது என்ருள். எனது உள்ளத்தில் அழியாமல் இடம் பெற்றுவிட்ட உயிரோவியம் என்ருன். புரியவில்லேயே என்ருள். என் வருங்கால மனேவி என்ருன்...! என்ன இந்தக் கல்லா! என்ருள். குறுநகையை சிந்தி நின்ருள். அன்றுமுதல் நாள்தோறும் இருவரும் சந்தித்தனர். பலநாட்களின் பின் ஓர் நாள்...

'அத்தான்', 'கண்ணே' என்ற அழைப்பும், அழைப்பிற்கு பதிலுமாக சொற்கள் அந்த சோலேயில் கேட்டன. அங்கிருந்த கொடிகள் அவர்கள் பேசும் காதல் மொழிகேட்டு செழித்து வானுர வளர்ந்து நின்றன. இன்று அவள் கழுத்தில் எடுப்பான ஒரு கரும்பவழ சரம்—செந்நிற அங்கி—கருநிற ஆக்கை—பச்சை பாவாடை—நெளிவைத்தக் கூந்தல். அதிலே தேன் கசியும் ஒரே ஒரு 'மகிழும்பு'. முத்தினே தோற்ருேட்டும் வெந்நிற பற்கள்—முல்லேயரும்பிற்கும் அங்கில்லேயே. கிள்ளே மொழி பேசுகின்ருள். அவள் தன் உள்ளத்தை கிளந்தி

டும், கொஞ்சு மொழியாள் அவனை இன் பக்கடல் தள்ளுகின்றாள். திருமணத்தில் ஒதுக்கிவைத்தோர் ஒட்டுறவு இல்லை. என்று வெட்டிப் பேசியோர்...இன்று அவர்கள் நிலைகண்டு உமிழ் குடிக்கின்ற னர். அவனை ஒதுக்கிவைத்தோர் இன்று அவனால் ஒதுக்கிவைக்கப்படுகின்றனர். என்ற நிலைக்கு அந்நாடோடிக் கூட்டத் தைச் சேர்ந்தவளை நாகரிகமுடையவ ளாக்கிவிட்டான். கேலி பேசியோர் இன்று தலைகவிழ்ந்து நடக்கின்றனர்.

நாள்தோறும் இரவில், காதல்மொழி கேட்டுகேட்டு மகிழ்ந்தான். இன்றும் அவ்விரு உள்ளமும் ஒலித்தன. ஒரே ஒரு பாட்டு! முடியாது கண்ணே! அப் படியானால் என் முகத்தைப் பார்க்காதீர் கள். மறுபக்கம் திரும்புகின்றாள்...பாடு கின்றான்.

"சுவை பலக் கண்டேன்யான் என்வாழ்நாளில்
சுவை பலக் கண்டேன் யான்.
மங்கையர்தரும் நல் இன்சுவைமுன்னே
மண்டியிட்டோடும் (சுவைபலக்)
கண்டால் சுவைத்திடும் சுவையோடு
உண்டுபின் சுவைக்கும் சுவை நிகராமோ?
கண்ணே? சுவை நிகராமோ?
பெண்ணின் பெருமையால் பெற்றினையோ நீ?
போற்றிடும் கற்பால் பெற்றனையோ?
இச்சுவை போலொரு சுவையினையான் இனி
வேறெங்கு காண்பது? உலகினிலே கண்ணே
வேறெங்கு காண்பது உலகிலே.

போதுமா அன்பே! புன்முறுவலுக்காக நான் பாடவேண்டியிருக்கிறது. இருவரும் மனையகம் நோக்கி நடக்கின்றனர். மணி இரவு பன்னிரண்டு இருக்கும். அவர் களும் வீடு அடைகின்றனர். மழையும் பொழிய ஆரம்பிக்கின்றது. விளக்கை யணைத்துப்படுக்கின்றனர்.

படுத்த சிறிது நேரத்திற்கெல்லாம், 'அத்தான்' என்ற தேனின் அழுகை குரல் கேட்கின்றது. விளக்கைத்தூண்டி விடுகின்றான். வயிற்றில் குத்தியிருக்கும் கத்தியைக் கையால் இறுகப் பிடித்த வாறே கதறுகின்றான். குத்தினவன் மறைந்துவிட்டான். கொடியவன் மறைந் துவிட்டான். ஏத்துனைக் கொடியவனை இருந்திருந்தாலும் அந்தப் பேரழகியின் முகத்தைமட்டும் பார்த்திருந்தால் அந்த பேரழகியைக் கொல்லத் துணியமாட் டான். அதனால்தான் நள்ளிரவைத் தேர்ந்தான்போலும்.

அன்புக் காதலியை தோளில் தூக்கிக் கொண்டு கொட்டும் மழையில் ஓடினான். பக்கத்தில் ஆறு கல் தொலைவில் பெரிய மருத்துவ மனையுள்ளது. பேரிடி, பெரு மின்னல் கொட்டு மழை இவைகள் அவ னுக்குத் தெரியவில்லை. 'மலைத்தேன் மலைத்தேன்' என்று அழைப்பான்: அவளின் 'ஊம்....ஊம்' என்ற குரல் மட்டும் கேட்கும். காட்டு ஓடைகளில் உருண்டுவரும் வெள்ளத்தைக்கடந்தான். மருதையாறு வழியில். 'அத்தான் நான் பிழைக்கமாட்டேன்' சொல்லாதேக் கண்ணேயப்படி......நாமெல்லாம் வாழப் பிறந்தவர்கள். இதோ இந்த ஆறு ஒன்றுதான்! ஆற்றில் இறங்கி நடக் கின்றான். மலையங்காட்டு நீர் உருண்டு திரண்டு வருகின்றது. செங்கனன் உட லெங்கும் அவளது செங்குருதி. நட்டாற் றில் செல்லுகையில் திடீரென வெள்ளம் கழுத்தளவு வருகின்றது. பக்கத்தில் உள்ள திடலில் ஒரு மரம். அந்த திடலும் மூழ்கிவிட்டது. அண்ணார்ந்து நோக்கி னான். அவளது தலை சாய்ந்தது. வாயி லிருந்து உமிழ்நீர் உதிர்ந்தது. துயரால் 'ஆ' என வாய்திறந்தான். அவள் உமிழ் நீர் அவன் வாயில் விழுந்தது. 'ஐயோ' பெண்ணின் திருவே! பேரழகே!...... என்று புலம்பினான்.

மழையும் பொருட்படுத்தாமல் 'முகிலழ கியும்' அவனைத் தொடர்ந்து நடப்ப வற்றை பார்த்து நின்றாள். நம் வாழ் வுக்கு பகையாக நின்ற நாடோடி மகள் அழிந்தாள். இனி அந்த சிற்பி எனும் கொம்பினைத் தழுவி இன்பம் பெறப் போகும் மலர்க்கொடி 'முகிலழகி' என்று எண்ணினாள். இன்பத்தின் கரைகண்டாள் எழில் நடமும் ஆடினாள். ஆனால் அடுத்து வந்த புது வெள்ளம் மரத்தை சாய்த் தது. சிறகொடிந்த பறவை வேடனுக் கிரையாவதுபோல் சிற்பி மரத்தடியில் அகப்பட்டான். மணலுக்கும் மரத்துக்கு மிடையே சிற்பி, இனி சிற்பி தனக்கில்லை எனக் கண்டாள். அடுத்த கணம் நீரி னுக்குள்ளே யிருந்து மூன்று குமிழிகள் மேலே வந்தன. மரம் அசையவில்லை.

அவள் உடலில் ஊறிய கடைசிச் சொட்டு உமிழ்நீர்கூட அவனுக்கு கிடைத்தது. அந்த சுவையில் அவன் வாழ்வின் உயர் இன்ப நிலையை யடைந்தான். இனி யொறு சொட்டு......! கிடைக்குமா என ஏங்கியிருக்கும் முன்னே அவனுடல் மண்ணுக்கும் மரத்துக்குமிடையே!

மழைநின்றது. நீர் வடிந்தது. ஊரார் தேடிவந்தனர். மரத்தின் கொம்புகளில் சிக்கிச் சீரழிந்து கிடந்த பெண்ணுருவைக் கண்டு அருகே ஓடினார்கள். முகிலமுகியின் உடலெனக் கண்டார்கள். மரத்தின் அடியில் கருமை தெரிந்தது. தோண்டி பார்த்தார்கள். ஆம் காரிருளோ? கருமுகிலோ? புதுவெள்ளம் பரப்பிய மணற் பரப்போ? என்று அவனால் போற்றப் பட்ட அக்கருங்குழல்தான். சிறிது தோண்டினர் ஐயோ! அந்த அழகு முகங்கள் ஒன்றோடொன்று பொருந்தி யிருந்தன. வாழவிட மறுத்த அந்த கொலைகாரர்கள் செத்தவர்கள் முகத்தில் கண்ணீா வடித்தனர். ஒட்டியிருந்த மணல் கண்ணீரால் கழுவப்பட்டது. சிரித்த முகங்கள் செத்தும் சிரித்தன. மற்றவர் அழுதனர். ஆனால் அந்த அழகு முகங்கள் பேசிமகிழ்ந்த அந்த காதல் மொழியினை; மீண்டும் கொஞ்சிப் பேசிட செய்யும் ஆற்றல் அவர்கள் அழுத கண்ணீருக்கில்லையே!

தாய்மொழி மூலம் கல்லூரிப்படிப்பு

by

S. விஸ்வநாதன், P.U.C. (A.)

மனிதன் உலகில் தன் வாழ்வைச் செவ்வனே நடத்த மொழியை ஆக்கினான். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய், மொழியியல் பல வளர்ச்சிகளை அடைந்தது. காலத்தின் வளர்ச்சிக்கேற்ப மொழிகள் பல மாறுதல்களை அடைந்தன. எண்ணற்ற மொழிகள் விண்ணில் தோன்றின. அத்தகு மொழிகளில் சில மொழிகள் ஒலியற்று, வரிவடிவம் பெற்றுள்ளன. சில மொழிகள் வரிவடிவமற்று ஒலி வடிவம்மட்டும் பெற்றுள்ளன. இவ்வாறன்றி, இரண்டும் பெற்ற மொழிகளில் சில இலக்கிய, இலக்கண வளமற்று வழக்கு மொழியாக மட்டும் திகழ்கின்றன. இவ்வாறு உலகெங்கும் கிளைகளென்ன பிரிந்துள்ள மொழிகள் நாட்டுக்கும், காலத்திற்கும் ஏற்றவாறு மாறுபடுகின்றன. உலகில் ஒவ்வொரு இனத்தாலும் பேசப்படும் மொழி அவ்வவ்வினத்தாருக்குத் தாய்மொழி எனப்படும். மொழி மூச்சாகவும், இனம் இருதயமாகவும் இந் நாட்களில் கருதப்பட்டு வருகிறது. இந்நாளில் ஒவ்வொருவரும் மொழிப்பற்றை வளர்த்து, தங்களுடைய மொழியைச் செழிக்கச் செய்யவேண்டுமென பல முறைகளைக் கையாள்கின்றனர். அவ்வாறே நம் நாட்டில் நமது தாய்மொழியாகிய தமிழுக்கு ஏற்றம் செய்யும்வகையில் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. ஆயினும் கல்வித் துறையில், கல்லூரியில் நந்தமிழ் மொழி போதனா மொழியாக ஏற்கப்படவில்லை. அதற்குக் காரணமாகப் பல்கலைக்கழகம் கூறுவது, தமிழில் போதிய கலைச்சொற்கள் இல்லை. நமது கருத்து தமிழில் விஞ்ஞானம் போன்ற துறைகளையும் தமிழில் போதிக்கலாம் என்பதாகும். எவ்வாறு என்பதை இக்கட்டுரையின்கண் காண்போம்:

தமிழ்மொழி தொன்மையான மொழி. காலத்தின் ஏற்றத் தாழ்வுகளில் பங்குகொண்ட மொழி. பலகிளை மொழிகளை ஈன்றெடுத்த மொழி. இத்தகைய தமிழ் மொழியில், என்றும் எழில் நங்கையாகத் திகழும் இன்றமிழில் கல்லூரி பாடங்களைக் கற்பிக்கமுடியாது எனின், இம்மொழி ஆற்றலற்றதெனின் வேறு எம்மொழி ஆற்றலுற்றதோ?

தமிழ் இலக்கிய வளம்பெற்ற மொழி, உயிர் மெய் என உணர்வுதரும் இலக்கணம் கண்ட மொழி. தமிழில் எண்ணற்ற நூல்களில் பல அறிவியலை அறிவிக்கின்றன. சிலவற்றை ஈண்டு காண்போம்.

"செஞ்ஞாயிற்றுச் செலவும்......பொருமுளரே" எனும் புறநானூற்றுப் பாடலொன்றில் வான சாத்திரத்தின் நுண்ணிய உண்மைகள் பொழிந்துள்ளமையைக் காணலாம். இப்பாடல் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் எனும் புலவரால் எழுதப்பட்டது. குறிஞ்சிப்பாட்டில் கபிலர், குறிஞ்சி நிலத்தின்கண் உள்ள செடிகளின் பூக்களைப்பாகுபடுத்தி, ஒரு பாடலின் கண், அவ்வப் பூக்களின் தன்மையை இயம்பியுள்ளார். பழந்தமிழர் உயிரினங்களைத் தொகையாகவும் வகையாகவும் என்றும் வகைப்படுத்தி யிருந்தனர். தொல்காப்பியர் புறக்காழனவே புல்லெனமொழிப அகக் காழனவே மரமென மொழிப" எனத் தாவரதூல்களைப் பாகுபடுத்தியுள்ளார். இவ்வாறு அவனியில் அறிவியல் கதிர்கள் எழுமுன்னே, நந்தமிழ் நாடு நாட்டிற்கு வழிகாட்டிற்று, அப்பொழுதே மக்கள் ஆயகலைகளைத் தாய்மொழியில் கற்றனர்.

திடீரென்று எங்கிருந்தோ மணி ஒலிக்கும் சப்தம் கேட்டேன். உயரே பார்த்தேன் மணிக்கூண்டு பத்து அடித்துக்கொண்டிருந்தது. உயர்ந்து விளங்கிய அக்கட்டிடத்தில் "சென்ட்ரல் ஸ்டேஷன்" என்ற ஆங்கில எழுத்துக்களைப் பார்த்தேன். அக்கட்டிடத்திற்கு எதிரே சாரை சாரையாக மக்கள் வரிசையில் ஆணும் பெண்ணுமாக கலந்து நின்றுகொண்டிருந்தார்கள். உடனே பக்கத்தில் சென்றவரிடம் எதிரே இருக்கும் கட்டிடத்தைப்பற்றி விசாரித்தேன். "ஜெனரல் ஆஸ்பிடல்" என்று சொல்லிக்கொண்டே போய்க்கொண்டிருந்தார். கட்டிடத்தையும், மக்கள் வரிசையையும் மாறிமாறிப் பார்த்தேன். ஒருவேளை சென்னையில் தொத்துநோய் பிடித்துக்கொண்டதோ என்று வியந்து பார்த்தேன். அப்புறம்தான் மக்கள் கூட்டம் வைத்திய விடுதிக்கல்ல "சிட்டி பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டேன். மீண்டும் புகை வண்டி நிலையத்வையும், வைத்திய விடுதியையும் மாறிமாறிப் பார்த்தேன். இப்போது புகை வண்டிகள் இருக்கும் நிலையில் பக்கத்திலேயே வைத்திய விடுதியும் அவசியம்தான் என்பதைத் தெளிவாக்கிக்கொண்டு பக்கத்திலுள்ள சிற்றுண்டி விடுதியிலே மூக்கைப் பிடித்துக்கொண்டு குடலை நிரப்பிக்கொண்டு புறப்பட்டேன். இதுவரை கண்ட காட்சிகளில் மனதை அலையவிட்டவனாய் நடந்துகொண்டே இருந்தேன். நான்கு பாதைகள் சந்திக்கும் இடமொன்று வந்தது. எப்பக்கம் போவது என்ற சிந்தனையிலிருக்கும் போது திடீரென ஒரு "சிட்டி பஸ்" வந்து நின்றது. வயதுப் பெண்கள் பலர் அந்த வண்டியில் இருந்ததால் என்னை அறியாமலேயே அந்த பஸ்ஸில் ஏறி அமர்ந்துவிட்டேன். இது வாலிபர்களுக்கே பழக்கமாகிவிட்டதால் என்னை மன்னித்துக் கொள்வீர்களென்றே கருதுகிறேன். திடீரென கண்டக்டர் டிக்கட் கேட்டார். பஸ் எங்கே போகிறதென்று கேட்டேன். தி. நகர் என்று சொல்ல, வேறுவழி தெரியாததால் சரி என்று ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டேன். பக்கத்திலிருந்தவரை சிநேகம் செய்துகொண்டு ஒவ்வொரு கட்டிடமாக விசாரித்துக்கொண்டே சென்றேன். ஓரிடத்தில் ஏதோ ஒரு "கிளப்" என்றார். விளக்கம் கேட்டேன். "பெரிய மனிதர்கள் சூதாடுமிடம்" என்ற விளக்கம் வந்தது. பொருளாதார பேதத்தால் அவர்களுக்குமட்டும் உரிமையாக்கிவிடப்பட்டிருந்த "சூதாட்டத்தை" வசைபாடிக்கொண்டே சென்றேன் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக்கொண்டே சென்ற என்னை கண்டக்டர் இறங்குமாறு கட்டளையிடவே, வந்து சேரவேண்டிய இடம் வந்துவிட்டதென்று எண்ணிக்கொண்டே இறங்கினேன். பக்கத்திலிருந்த உணவு விடுதியில் உண்டிமுடித்துவிட்டு எங்கோ புறப்பட்டேன். நடுமத்தியான வெய்யிலில்கூட, சூரியன் தன் கதிர்களை அள்ளி வீசிக்கொண்டிருந்த நேரத்தில்கூட குளுமையாக அமைந்திருந்தது. அந்த இடம். இடை இடையே இடம் விட்டுக்கட்டப்பட்ட வீடுகள், வீட்டுக்கு வீடு சுற்றுச் சுவர் போட்டுக் கட்டப்பட்டிருந்த அழகிய மாளிகைகள், என் கண்ணைக் கவர்ந்தன. ஒருவர் வீட்டில் நடப்பது அடுத்த வீட்டிற்குத் தெரியாத அளவில்! கட்டப்பட்டிருந்த வீடுகளை சுகாதார வசதிக்காகக் கட்டப்பட்டனவோ என்ற கேள்விக் குறியோடு பதில் கண்டு பிடிக்காமலேயே விட்டுவிட்டேன். சில

வீடுகளிலே பளபளக்கும் கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன. பாஷைபுரியாத வேற்று மொழிக்காரர்கள் பாதுகாவலர்களாக நிறுத்தப்பட்டிருந்தார்கள். வாயிலிலே கட்டிவைக்கப்பட்டிருந்த நாய்களுக்குப் பக்கத்தில் புத்தம் புதிய "பிஸ்கட்" உடைக்கப்பட்டிருந்தன. எப்பக்கம் நோக்கினாலும் வானொலி இசையை எழுப்பிக் கொண்டிருந்தது. காணப்பட்டவர்களெல்லாம் ஆடை அலங்காரங்களில் சிறந்தவர்களாக, சிவந்த மேனியர்களாகக் காணப்பட்டார்கள். அங்குப் பார்த்த பெண்களெல்லாம் செக்கர் வானத்தைத் தங்கள் கன்னக் கறுப்புகளிலே ஒற்றிக்கொண்டவர்களாக, சிவந்த அதரத்தால் செகத்தையே சவாலுக்கழைப்பவர்களாக, உருளும் கண்களால் மிரளும் மான்களை, நினைப்பூட்டுபவர்களாக, பட்டுப் பீதாம்பரங்களின் மொத்த வியாபாரிகளோ என்று எண்ணத்தகும் அளவில் நகை சுமக்கும் சிலைகளாகக் காட்சி அளித்தார்கள். அவர்கள் உண்டு முடித்து வெளியே எறிந்திருந்த எச்சில் இலைகளிலிருந்துவந்த நெய் வாடை மூக்கைத் துளைத்தது. வீட்டிற்குள்ளேயே அமைக்கப்பட்ட அழகுத் தோட்டங்கள், அதன் நடுவே ஆக்கப்பட்டிருந்த விளையாடுமிடங்கள், சுற்றிலும் காணப்பட்ட கண் கவரும் சிறு மீன் தொட்டிகள் எல்லாம் நான் என்னையே மறந்துவிடும்படிச் செய்தது. நான் படித்தவைகள். நண்பன் எழுதியவைகள் எல்லாம் உண்மையென்று சொல்லிக் கொண்டே யிருந்தது என் உள்ளம். குபேர நாட்டிலே இருப்பதாக எண்ணிய நான் மாலைச் சிற்றுண்டிகூட அருந்த மறந்துவிட்டேன். திடீரென ஒருவர் என் தோள்மேல் கையைப்போட்டு "ஹல்லோ" என்றார். விபரம் அறியாது விழித்த என் முகத்தை உற்றுக் கவனித்துவிட்டு" மன்னித்து விடுங்கள் என்று சொல்லிக்கொண்டே நடந்தார்! அப்போதுதான் நான் ஏதோ ஒரு புதிய இடத்திற்கு வந்துவிட்டதாக உணர்ந்து நேரத்தைப் பார்த்தேன். மாலை 4-30 என்று கடிகாரம் காட்டியது. கண்காட்சிகளால் களிப்படைந்த நான் கடற்கரை செல்லலாமெனப் புறப்பட்டேன். எப்படியோ கடற்கரை வந்த நான், "இது தான் மெரினாபீச்" என்று இன்னொருவர் மற்றவருக்கு அறிமுகம் செய்துவைத்ததைக்கேட்டு ஒருவாறு புரிந்துகொண்டேன். ஆம்! காவியத்திலே கண்ட வர்ணனைகளின் மொத்த உருவோ என எண்ணுமாறு அழகுடன் விளங்கியது மெரினா. மெருகு குலையாத காரிலே மேட்டுக் குடிமக்கள் சென்ற காட்சி கண்ணுக்கு விருந்தாய் அமைந்தது. வாலிபர்களின் உள்ளத்திலே வற்றாத ஆசையைக் கிளறிவிடும் வனிதையர் கூட்டம், கிழவர்களைக்கூட குமரர்கள்போல் எண்ணங்கொள்ளச் செய்யும் எடுப்பான உடையணிந்த மங்கையர்கள், "வயிறு தான் மானத்தைக் காட்டிலும் சிறந்தது" என்று சொல்வதுபோல வயிறு தெரிய ஆடை அணிந்து, உள்ளும் புறமும் ஒன்றே என்ற ஞானிகள் நிலை போலக் காட்சியளித்த கன்னியர், நாய்களின் கன்னத்தோடு தன் கன்னத்தை ஒட்டவைத்துக்கொள்ளும் நாகரீக நாரீமணிகள், வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார்கள் எல்லாம் சென்னை ஒரு குபேர பட்டினம் என்பதை விளக்கிக் கொண்டிருந்தது. பலமொழி பேசுபவர்களும் என்னைக் கடந்துகொண்டே போனார்கள். "மேல்நாட்டுக்காரர்களால் உன் நாட்டு நாகரீகம் அழிந்துகொண்டிருக்கிறது:' என்பதை மட்டும் என் உள்ளுணர்வு கூறிக்கொண்டே இருந்தது. நேரமானதால் கடற்கரை ஓரமாகவே நடந்தேன். சென்னை செழிப்பான ஊர் என்ற எண்ணம் என் இதயத்தை ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருந்தது. நேரம் ஆறு மணி என்று அறிந்தேன். பொழுது போய்விட்டதென்றாலும் கண்ணுக்கினிய காட்சிகள் பல கிடைத்ததால் பார்த்துக்கொண்டே வேகமாக நடை போட்டேன். தூரத்திலே நின்றுகொண்டிருந்த கப்பல்களின் விளக்குகள் என்னைக்கண்டு கண் சிமிட்டி அழைப்பது போலிருந்தது. ஏற்றுமதியின் பிறப்பிடமாக விளங்கிய சென்னை இறக்குமதி செய்கிற நிலைக்கு வந்துவிட்டதென்பதை நின்று கொண்டிருந்த கப்பல்களெல்லாம் சொல்லிக்காட்டின. இக்காட்சி, களிப்போடு வந்த என் உள்ளத்தில் கரும்புள்ளியை ஏற்படுத்தியது. கப்பல் துறை கடந்தேன். அந்த வீதியே

இருண்ட பேய்க்காடுபோலக் காட்சி அளித்தது. விளக்குக் கம்பங்களிலே இருந்த விளக்குகள்கூட ஒளி மங்கியிருந்தது. வீதியின் அருகிலுள்ள சுவர்களிலெல்லாம் கரியால் எழுதப்பட்ட பல வசனங்கள் இருந்தன. யாரோ பைத்தியக்காரன் வேலை என்று எண்ணினேன். எதிரே ஒரு ஆள் தாடிவளர்த்து, கிழிந்து கந்தலாகிவிட்டிருந்த அழுக்கு உடையணிந்து, கையிலே கொளுத்தப்பட்டிருந்த துண்டு பீடியோடு, எலும்பும் தோலுமாய் காட்சியளித்தார். பைத்தியக்காரனே என சந்தேகித்தேன். ஆனால் அந்த ஆளினுடைய நடத்தை அவர் பைத்தியமில்லை என்றதைத் தெளிவுபடுத்தியது. வீதியிலே நாற்றம் சகிக்கவில்லை. நடுப் பாதையிலோ சேறும் சகதியுமாயிருந்தது: நடைபாதையில் செல்லலாமென்றாலோ அங்கே பல குடும்பங்கள் தங்கியிருந்தன. நடைபாதையிலேயே, வானத்தைக் கூரையாகக் கொண்டு வசிக்கும் அவர்களுடைய வாழ்வு என் கண்களிலே நீரை வெளிப்படுத்தியது. உணவு கேட்டு அழுதுகொண்டிருந்த குழந்தையை அடித்துக்கொண்டிருந்தாள் ஒரு தாய். கிடைத்த கொஞ்சம் உணவை பங்கிட்டுச் சாப்பிடுவதிலே கணவன் மனைவிக்குள் சண்டை நடந்துகொண்டிருந்தது. உடையே இல்லாத குழந்தையொன்று வீதியில் இருந்த சாக்கடை நீரில் விளையாடிக் கொண்டிருந்தது. தொத்து நோய் பீடித்த ஒருவன் அழுது புலம்பிக் கொண்டிருந்தான். எப்படியோ சம்பாதித்த பணத்தைப் பங்குபோடுவதிலே இருவருக்கு நடந்த சண்டையைப் பார்த்த நான் பயந்தேபோனேன். எதிரே இருந்த சிறுகடையில் வாழைப்பழம் சாப்பிட்ட ஒருவன் தோலை வீதியிலே எறிந்தான். அதை எடுக்க ஓடிவந்த பல சிறுவர்களிலே ஒருவன் வேகமாக வந்த சைக்கிளிலே அடிபட்டுத் துடிதுடித்துப் போனான். இன்னொரு தாய் அழுதுகொண்டே இருந்தாள். காரணம் கேட்டேன் "நேற்றுத்தான் என் மகன் காலராவால் இறந்துவிட்டான்" என்று சொல்லிக் கண்ணீர் வடித்த அத்தாய் நிலைக்காகக் கண்ணீர் வடித்துக்கொண்டேன். நடைபாதையிலேயே "உலை வைத்துச் சோறு சமைத்துக் கொண்டிருந்த அவர்களுக்குத் தொல்லை தருவது போல் மழைபெய்ய ஆரம்பித்தது. நடைபாதைக் குடும்பத்தினரின் நிலைமை பரிதாபகரமாகிவிட்டது. கிடைத்த பொருளைக்கூட சமைத்து உண்ணவிடாத இயற்கையின் கொடுமையைக் கடிந்துகொண்டேன். காலையிலிருந்து பார்த்த காட்சியையும், அந்த நேர நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டே நின்றுகொண்டிருந்த நான், வறுமையின் கோரப்பிடிப்பால் வாடிவதங்கும் ஏழையர் கூட்டத்தை எண்ணி யெண்ணிக் கண்ணீர்விட்டுக்கொண்டேயிருந்தேன். பொருளாதார பேதம் ஏழையர் முகாமையும், பணக்காரக் கூட்டத்தையும் ஒன்றுசேர்க்கமுடியாத நிலையில் அமைந்துள்ளதை எண்ணி எண்ணி ஏங்கினேன். யாருடைய உழைப்பாலேயோ வாழ்ந்துவிட்ட கூட்டமும், யாருக்காகவோ உழைத்துவிட்டு உலுத்துப்போகும் கூட்டமும் சென்னையிலே இருக்கிறதென்பதை உணர்ந்துகொண்டே நடந்த நான் கொட்டும் மழையைக்கூடக் கவனிக்காமலேயே நடந்தேன்.ஒருசிலர் வாழவும், மிகப் பலர் வாடவுமான நிலை ஏன் உண்டாகின்றது என்ற கேள்விக்கு விடை கண்டுபிடிப்பதிலேயே எண்ணத்தைச் செலுத்திக்கொண்டே நடந்தேன். இவர்கள் வாழ்விலே வறுமை போக அரசாங்கம் என்ன செய்கிறது என்ற சிந்தனை வளர்த்துக்கொண்டே வந்த என் காதுகளில் "இல்லாதாரைப் படைத்தான் என்றொருவன் இருந்தால் அழியட்டுமே" என்ற பாட்டு எங்கிருந்தோ வந்த ஒலியில் கலந்துவந்தது. இதைக் கேட்டதும் சிரித்துக்கொண்டே நடந்த என் எதிரில் இருந்ற கோவிலில் ஆண்டவனுக்கு இராக்கால பூஜை நடந்துகொண்டிருந்தது. வெந்த உள்ளத்தோடு வந்தநான் நொந்துபோகவைக்கும் செயல்களைக் கண்டு வியந்துகொண்டே அறைவந்து சேர்ந்தேன். ஊர்வலம் களைப்பைக் கொடுத்ததென்றாலும் கருத்து நிறைந்ததாக அமைந்திருந்தது என்ற வேதனை உள்ளத்தோடு அறையில் நுழைந்த என்னுடன் அறிவொளி ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார். ஆனால் என் உள்ளமும் உதடும் "இல்லாதானைப் படைத்தான் என்றொருவன் இருந்தால் அழியட்டுமே" என்று பாடிக்கொண்டே இருந்தது.

"அண்ணா இதுதானா தமிழ் நாடு!"

by

P. சாந்தகுமார், P.U.C. (C.)

அண்ணா!

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தன" என்று அன்று நீங்கள் கூறியது இன்றும் எனது செவிகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது; ஆம்! வளமான நாடுதான் நம் நாடு; அகிலமே போற்றும் கருப்பு வைரம் கிடைக்கும் நாடுதான் நம் நாடு; கல் தோன்றா முன் தோன்றிய மூத்த குடி வாழ்ந்த நாடுதான் நம் நாடு; இரும்பா! எண்ணெய் ஊற்றா! இவை களெல்லாம் தன்னகத்தே கொண்ட நாடு! நாகரிகத்தை உலகெங்கும் பரப்பிய நாடு! "தமிழன் என்றோர் இன முண்டு தனியே அவர்க்கொரு குண முண்டு" எனத் தரணி யெங்கணும் முர சொலி கொட்டிய நாடு! அன்பும் அருளும், பண்பும் பல்துறை அறிவும், அறமும், கொடையும் அனைத்தினுமே சீரிய தமிழ்ப்பரம்பரை வாழ்ந்தநாடு; தன்னல மற்ற தமிழ்த் தாயை வணங்கிப் போற்றிய தமிழர் பெருமக்கள் வாழ்ந்த நாடு தான் நம் நாடு! இப்படிப்பட்ட திருவிடத்திற்கு ஏன் அண்ணா 'தமிழ் நாடு' எனப் பெயரிட மறுக்கிறார்கள்? காரணம் என்ன அண்ணா? குற்றம் எங்கே அண்ணா? சென்னை என்றால்தான் அகில இந்தியாவும் அறிந்துகொள்ள முடியுமா? ஏக இந்தியாவைப் 'பாரதம்' எனப் புரிந்து கொண்ட மக்கள் சென்னையை 'தமிழ் நாடு' என்றால் அறிந்துகொள்ள மாட்டார்களா?

"வடவேங்கடம், தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" என எல்லை வகுத்த தமிழ் நாட்டில் இன்றளவு நோக்குங்கால் எஞ்சிய பகுதி முன்னையதில் ஒரு பங்குகூட இராது போலிருக்கிறதே! ஏன் அண்ணா தமிழகத்தின் எல்லையெல்லாம் பறிக்கப்படுகிறது?

திருவிதாங்கூர், கொச்சி பிற மாவட்டங்கள் அடங்கிய நாடு; தலைநகர் வஞ்சியும், துறைமுகம் முசிரியும், தொண்டியும் கொண்ட நாடு; கிரேக்கத்தின் மீது வெற்றிகண்ட நாடு! கனகவியசனைக் கல் சுமக்கச்செய்த வீரத் திருநாடு!

"மழை வளங்கரப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்திற் பெரும் பேர் அச்சம்
குடி புரவுண்டுங் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கு நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுத கவில்"

என அஞ்சி அரசோச்சிய மன்னர்கள் ஆண்ட நாடு; அலட்சியமும், அகந்தையும் கொண்ட முடி மன்னர் வாழா நாடு நம் தமிழ் நாடுதான்; அப்படிப்பட்ட தமிழ்நாடு குடியரசு பெற்றும் ஏன் அண்ணா இந்த நிலையில் இருக்கிறது இன்று?

விழுப்புண் ஏற்றுத் திரும்பும் வீர மன்னர்கள் வாழ்ந்த நாடுதான் நம் தமிழ் நாடு.

"வையங்காவல் பூண்ட நின் நல் யாண்டு
ஐயைந்திரட்டி சென்றதற் பின்னரும்
அறக்கள வேள்வி செய்யாதியாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை"

எனப் போற்றுமளவுக்குப் புரவலர் வாழ்ந்த நாடு நம் நாடு; சமயப் பொது நோக்குகொண்ட நாடு; இதுதான் சேர நாடு. கடல் பிறக்கோட்டிய வேல்கெழு குட்டுவன் ஆண்ட நாடு; இச்சேர நாட்டினுடன் இணைந்த திருவாங்கூர், கொச்சி, மாவட்டங்களைக் கேரளத்துக்கு ஏன் அண்ணா அளித்துவிட்டார்கள்? அது மாத்திரமா! ஐயகோ! சொல்லவே நாக் கூசுகிறதே! நெஞ்சு கொதிக்கிறதே! செங்கோட்டையில் பாதியும், தேவிகுளம், பீர்மேட்டையும் அல்லவா கொடுத்துவிட்டிருக்கிறார்கள்!

வடக்கே சிதம்பரத்திற்கருகில் ஓடும் வடவெள்ளாற்றிற்கும்—தென் வெள்ளாற்றிற்கும் இடைப்பட்ட நாடு; தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டைப் பகுதி

களைக் கொண்ட நாடு; "வான் பொய்ப்பினும் தான் பொய்யா வளமுடைக் காவிரிபாயும்" நாடு நம் நாடு! தலைநகர் உறையூரும், பூம்புகாரும் கொண்ட நாடு; கலையிலும், கலாசாரத்திலும் மேம்பட்ட நாடு! ஈழத்தின் மீது வெற்றிகண்ட நாடு! திருப்பணிகளில் சிறப்புடைய நாடு; கூற்றம், கோட்டம், என வழங்கப்பெறும் வள நாடு; நியாய வாரியம், ஏரி வாரியம், தோட்ட வாரியம், கஞ்ச வாரியம், பொன் வாரியம் எனப்பிரித்த நாடு; சீரிய தேர்தல் முறையை வரையறுத்த நாடு; நில வரி, இறையிலி அளவை, நாணயம், இவையனைத்தினையும் பாங்குற உடன் கூட்டதிகாரிகளுடன் அமைக்கும் அரசியல் தத்துவம் தவழ்ந்த நாடு "இதுதான் சோறுடைய சோழவள நாடு"; கங்கைகொண்ட மன்னன் இராசேந்திரன் ஆண்ட நாடு அப்படிப்பட்ட அரசியல் தவழ்ந்த நம் அருந்தமிழ்நாட்டில் ஏன் அண்ணா இந்த நிலையிருக்கிறது? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே?

தென் வெள்ளாற்றை வடவெல்லையாகவும், உரைசால் குமரியைத் தென் எல்லையாகவும்—விரிகுடாவைக் கீழ் எல்லையாகவும், திருவிதாங்கூரை மேல் எல்லையாகவும் கொண்ட நாடு நம் நாடு! 'நின்னாடு உடைத்து நல்ல தமிழ்' என்று புலவர் போற்றிய நாடு. தமிழுக்கு இலக்கணம் வகுத்த குறு முனி வாழ்ந்த நாடு; சிலப்பதிகாரத்திற்கு ஆக்கம் தந்த நாடு' அமிழ்தேயாயினும் பகுத்து உண்ணும் ஆன்றோர் வாழ்ந்த நாடு! இதுதான் தங்கத் தொட்டில் தயாரித்து, சங்கத்தைக் கூட்டித் தமிழைத் தாலாட்டிய தென் பாண்டி நாடு! இதுதான் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் ஆண்ட நாடு! இவனுடைய நாட்டிலே "வளையாத செங்கோலும் வளைந்தது" ஆனால், "யானே அரசன் யானே கள்வன் மன்பதை காக்கும் தென்புலங்காவல் என் முதற் பிழைத்தது, கெடுக என் ஆயுள்" என மன்னவன் மயங்கி வீழ்ந்து உயிர் நீத்து வளைந்த செங்கோலையும் நிமிர்த்தினான் என்று பெருமித உணர்ச்சி ததும்பக் கூறினீர்களே! அத்தகு தமிழகம் இன்று முறைதவறிய நிலை பெற்றிடக் காரணம் என்ன அண்ணா?

இம் முப்பெரும் மன்னர்கள் ஆண்ட நாடுதான் நம் தமிழ் நாடு; நெறி வழுவா மனுநீதிச் சோழன் ஆண்ட நாடு. அரசியலிலே வாரியங்களாகப் பிரித்து அவற்றிற்கேற்பப் பணிகளை வரையறுத்தநாடு!

தேர்தல் முறைகளைத் தொகுத்த நாடு நம் நாடு; உலகமே போற்றும் இலக்கியங்கள் நிறைந்த நாடு நம் நாடுதான்; படை, குடி கூழ், அமைச்சு, நட்பு, அரண், ஆறும் பெற்ற மன்னர்கள்—அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கும் அணிகலனாகக் கொண்ட மன்னர்கள்—காட்சிக்கு எளியனாய்—கடுஞ்சொன் அல்லனாய்—முறைசெய்ததால் இறையாக எண்ணப்படும் மன்னர்கள் ஆண்ட நாடுதான் நம் தமிழ் நாடு! அப்படிப்பட்ட தமிழ் நாட்டில் இன்றுள்ள முறைகளெல்லாம் பெருத்த முரண்பாட்டில் ஏன் அண்ணா காட்சி அளிக்கின்றன? மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார் வாழ்ந்த தமிழ் நாட்டில் இன்று ஏன் அண்ணா கொள்கை மாறிவிட்டது? நிறைவான விளையுள் தரும் உழவரும், சமன் செய்து சீர்தூக்கும் தக்காரும்—நல் வகையிலே ஈட்டிய பொருளுளாரும் உள்ள நாடு தமிழ்நாடுதான்! உறு பசியும், ஓவாப் பிணியும் காணா நாடு நம் தமிழ் நாடுதான்:

ஆனால் இன்று ஏன் அண்ணா, "சோழ வள நாடு சோறுடைத்து" என்பதுமாறி "சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்—வெறும் சோற்றுக்கோ வந்தது பஞ்சம்" என்கிற நிலை உண்டாகியிருக்கிறது; வேந்தலைக்குங் கொல் குறும்பு இல்லாத நாடு நம் தமிழ் நாடுதான்; கேடறியா வளங்கண்ட நாடு நம் தமிழ் நாடுதான்;

இருபுனலும், வாய்ந்த குன்றும், வருபுனலும், வல்லரணுமாம் நாட்டின் அணிகள் ஐந்தும் பெற்று; பிற நாட்டவரும் பெட்டத்தக்கதான நாடும் நம் தமிழ் நாடு தான். 'வான் பொய்த்திடின் நாடுவாழ் மக்கள் நம் மீது பழி கூறுவரே' யென அஞ்சிய அரசர்கள் ஆண்ட நாடு நம்நாடு:

அக்கால அரசர்களின் இத்தகைய பண்பாடு இன்று பயனளிக்காது போலிருக்கிறதே அண்ணா? சிந்தையிலாயிரம் எண்ணங்களின் எழுச்சிக்குத் துவக்கம் தந்த நாடு; வீரத்திருநாடு; பண்புயர் தமிழ் நாடு 'புவான் சுவாங், தாலமி, பிளெமி

போன்ற மேலை நாட்டவரும் போற்றித் துதித்திடும் நாடு நம் தமிழ் நாடு; தேன் சொரியும் திருக்குறளும், பெண்மையின் உயர்வு கூறும் சிலம்பும், துறவின் மேன்மை பகரும் மணிமேகலையும், எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும் கொண்ட நாடு; "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு; காவிரிக்குமரி பெருக்கெடுத் தோடிய காலத்து, சோற்றுத் திரளால் அணைகட்டிய தமிழ் நாடு; கல்வியில் உயர் கம்பன் பிறந்த தமிழ் நாடு; யாமெங்கும் காணப்பெரும் புலவர் இளங்கோ வாழ்ந்த தமிழ்நாடு; பெண்ணையும் பாலாறும் பெருகியோடும் நாடு நம் தமிழ் நாடு; தமிழ் மணம் வீசும் பொதியம் அமைந்தது நம் தமிழ் நாடு ஆனல்...! 'தமிழ் நாடு' எனப் பெயரிட மறுக்கிறுர்கள்! ஏனே தெரியவில்லை அண்ணு?

தம்பி, எரிமலை இல்லை; நீர் வீழ்ச்சி உண்டு; பாலைவனம் இல்லை; சோலை வளம் எங்கும்; பச்சைப் பசேலென்ற வயலும், பாங்கான பல தருக்களும், இச்சையூட்டத்தக்க வளமும்—எழிலோங்கும் ஆறுகளும்—ஏராளம்—ஏராளம்—தமிழகத்தில்; செந்தமிழ் நாடு சிந்தைக்கினிய நாடுதான்; எல்லா வளங்களும் பொங்கிடும் நாடுதான்—வரலாற்றுச் சுவடியிலே நல்லிடம் பெற்றுள்ள நாடுதான்; பொன் வேண்டுமா? மணிவேண்டுமா? பூசச் சந்தனம் வேண்டுமா? வாசமளிக்கும் பண்டம் பல வேண்டுமா? முத்து வேண்டுமா? மூலப் பொருள் வேண்டுமா? கலம் கட்டத் தேக்குத் தேவையா? கருவிகள் செய்ய இரும்பு வேண்டுமா? அல்லது இரும்பை உருக்க நிலக்கரி வேண்டுமா? எது வேண்டும்? சொல் மகனே என்கிறுள் தமிழ் நாட்டு 'அன்னை'; தருகிறுள் தாராளமாக; சங்க காலத் தமிழ் நாட்டின் சிறப்பினை அறிவுச் செம்மல்கள் எடுத்துச் செப்பிடும் போது கேட்கக் கேட்கத் தித்திக்கிறது; தம்பி, யவன நாட்டுக் கலங்கள் தமிழ் நாட்டுக் கடற்கரையை முத்தமிட்டன; தமிழ்நாட்டு முத்துக்களை, இத்தாலிய நாட்டு எழிலரசிகள் தங்கத்தைக் கொடுத்து வாங்கினர்கள்! தமிழ் நாட்டு மன்னன் ஒருவன் ஈழத்தின்மீது வெற்றி கண்டான்; சேர, சோழ பாண்டியர்களது இலச்சினைகள் பொறிக்கப்பட்டது இமயத்திலே; எட்டுத் திக்கும் வெற்றி முரசு கொட்டினர்கள்; போரும் காதலும், அவர்கள் போற்றிய பொருள்கள்; 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற தமிழன் உள்ளத்திலே வருணுசிரமம் புகுந்தது; வீரத் தமிழனை வீணுக்கி விட்டது வெளியிடத்துக் கலாசாரம்" என்றெல்லாம் தமிழ் நாட்டைப்பற்றி அன்றொரு நாள் ஒட்டுத் திண்ணையில் அமர்ந்த வண்ணம் வெற்றிலை மடித்துப் போட்டுக்கொண்டவாறே கூறினீர்களே அண்ணு! ஆனல் சில சமயங்களில் நான் நீங்கள் கூறுவது உண்மையன்று என்று கூடச் சந்தேகித்து இருக்கிறேன்! ஆனல் அண்ணு! இன்று கல்லூரியில் படிக்கின்ற காலத்துக் கல்லூரிப் பேராசிரியர் எல்லாம் 'தமிழ் நாடு'! தமிழ் நாடு! என்று பன்னிப் பன்னிக் கூறுகிறுர்கள்! எனது கல்லூரித் தோழர்களிடத்திலே சென்று ஆங்கிலத்தில் பேசினல் 'உன்றன் தாய் மொழிக்கு முதலிடம் கொடு; தமிழிலேயே பேசு!' என்று தமிழ் மொழி! தமிழ் மொழி என்று கூறுகிறுர்கள்; தமிழிலேயே அரசியலைப்பற்றி—அமெரிக்காவினைப் பற்றி—ருஷ்யாவைப் பற்றி—சீனவைப்பற்றி பேசினல் முதலில் உன் தாயகத்தினைப்பற்றி — தாழ்ந்துவிட்ட—இல்லை! தாழ்த்தப்பட்டுவிட்ட உன் வளமார் தமிழ் நாட்டைப் பற்றிப் பேசு என்கிறுர்கள்; ஆப்ரகாம் லிங்கனையும்—சாக்ரடீசினையும்—சனயாட்சனையும் பற்றிப் பேசினல் முதலில் உன் நாட்டு அறிஞர்களைப் பற்றிப்பேசு என்று பேராசிரியர் முதல் உடன் தோழர்வரை தமிழ் நாட்டைப் பற்றியும், தமிழ் மொழியைப் பற்றியும்—தமிழகத்து மாந்தர்பற்றியும் கூறிக் கூறி என் காதெல்லாம் புளித்திருக்கிறது அண்ணு! இவர்களெல்லாம் குறுகிய மனப்பான்மையுடையவர்கள் — தன்னலங்கருதுபவர்கள் என்றும் நான் எண்ணியதுண்டு; ஆனல் நன்கு சிந்தித்த பின்னர் இப்பெருந்தகையாளர் யாவரும் தமிழகத்தின் மீதுகொண்ட தணியாக் காதலே என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது; 'தமிழ்' என்றாலே 'இனிமை' எனப் பொருள் கூறினீர்

களே; அந்த இனிமையை இன்று நோக்கும்போது என்னுடைய செவியெல்லாம் புளிப்புமாறிச் செவிக்கினியதோர் விருந்தாக உணருகிறேன் அண்ணா! இப்படியாகத் "தமிழ் நாடு! தமிழ் நாடு! தமிழ் நாடு! என்று தமிழ் நாடு எங்கும் நிறை நாதமாய்—இணையற்ற கீதமாய் விளங்கினாலும் ஏன் அண்ணா 'தமிழ் நாடு' எனப் பெயரிட மறுக்கிறார்கள்? "தங்கம் விளையும் நாட்டில் தரித்திரம் எதனாலே?" "வளம் பல நிறைந்த நாட்டில் வாட்டம் எதனாலே?" என்று சென்ற மூடங் கலிலே வரைந்தீர்களே அண்ணா! "அடுக்கு மொழிதானே என்று புரிந்து கொண்டேனே தவிர அதனுட் பொருந்திய அரசியல் தத்துவம் எனக்கு விளங்கவில்லை; பேராசிரியரைச் சென்று கேட்டேன்; 'தட்டிக் கேட்காததாலே' என்று இரத்தினச் சுருக்கமாக விடை கூறினார்; வளமுடைக் காவிரி பாயும் நாட்டில் ஏன் அண்ணா வறுமை தாண்டவமாடுகிறது? தட்டிக்கேட்காததாலே என்று உணர்ந்தும் நாம் ஏன் அண்ணா தயக்கத்தோடு வாழவேண்டும்? "தட்டிக்கேட்டால், தந் திடுவார் பெருந் தொல்லை" என்கிற அச்சம் நமக்குள் என்றுமே யிருந்ததில்லையே அண்ணா! அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே என்று பண்பாடிய வீரத்தமிழனின் நிலை "நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்தநிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்" என்கிற அளவுக்கு வந்திடக் காரணம் என்ன அண்ணா! அறிவிலே சிறந்தவன் தமிழன்! ஆற்றலிலே மிகுந்தவன் தமிழன்! என எக்காளம் கொட்டிய தமிழன் இன்று அடங்கி, ஒடுங்கி, நடுங்கவேண்டியதின் அடிப்படை என்ன அண்ணா? மீண்டும் அவன் பழைய நிலை எய்திடவே இயலாதா?

சீரும் சிறப்பும் பெற்ற பண்டைத் தமிழகத்தில்தான் நாமும் இன்று வாழ் கிறோம்; வாழ்வும், வசதியும் அளித்தது அன்றையத் தமிழகம்; வசதியும், வாய்ப்பும் பறிக்கிறது. இன்றைத் தமிழகம்; இந்த நிலை ஏன் அண்ணா! "அண்ணா இதுதானா தமிழ்நாடு!" உறுபசியும், ஒவாப்பிணியும்சேராதிருந்ததுஅன்றைய தமிழகம். உழவன் கரத்தே உள்ள ஏரடிக்கும் சிறுகோலே பாராளும் வேந்தனது செங்கோலுக்கு வளர்ச்சி தரும் என்பதை மறந்து உழுதுண்டு வாழ்வோரைப் பின் செல்லுபவராகக் கருதி உழைப்பவனுக்கே நிலம் சொந்தமில்லை என்னும் நிலைமாறியதனால் 'பசி, பசி' எனக் கதறிடும் காட்சியைத் தருகிறது இன்றைய தமிழகம் இந்த நிலை ஏன் அண்ணா? இதுதானா தமிழ்நாடு! உழவன் உள்ளத்திலே புயலடிக்கின்ற வரையிலே நிலத்திலே வளம்காண முடியுமா அண்ணா! அன்றைய தமிழகத்திலே பாலாவி போன்ற ஆடையை நெய்து தீப்பெட்டிக்குள் அடக்கிவைத்தனர். ஆனால் அதே தமிழ்ப்பரம்பரை இன்று பஞ்சையாய், பராரியாய் "கையதுகொண்டு, மெய்யது பொத்தி" உலவுகிறது! பட்டும் முத்தும் ஏற்றிவந்த பண்டைத்தமிழகம் இன்று பாட்டாளி மக்களைக் கூலிகளாக அனுப்பி வருகிறது; அகிலும், தேக்கும், நறுமணப் பொருளும் பெறத் தமிழகத்தின் எல்லையிலே மாற்றாரை மண்டியிடச் செய்த பண்டைத் தமிழகம், இன்று மாற்றானிடத்தில் மண்டியிட்டுக் கிடக்கின்றது; ஆடும் பதுமைகளை ஆட்டிவைக்கும் நல்லாசிரியர்களாக இருந்த நாம் இன்று ஆடும் பதுமைகளாக மாறிவிட்டது. ஏன் அண்ணா? இதுதானா தமிழ் நாடு? இந்த நாட்டுக்கே உரியவர்கள்—இந்த நாட்டு மன்னர்கள்—எழில் எல்லாம் குன்றி, உரமெல்லாம் உருகி, ஊனின்றி உடலிருக்கும் வேறுபாடுள்ள நிலையிலே விலா எலும்பு முறிய மலாயாவிலும் சிங்களத்திலும் காப்பித் தோட்டங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும், அடிமை வாழ்வு நடாத்துகிறான்; இந்த நிலை ஏன் அண்ணா? இந்த நிலை மாறிடும் காலம் என்று அண்ணா? இதுதானா தமிழ்நாடு? குச்சு வீட்டில் வாழ்ந்தாலும் சீரிய பண்புகள் இருந்தன. அன்றைய தமிழகத்தில்; ஆனால் விண்முட்டும் மாடமாளிகைகளில் வாழ்ந்தும், தாழ்ந்த உள்ளங்களைத்தான் காணமுடிகிறது இன்றைய தமிழகத்தில்; வந்தாரை வாழவைத்த பண்டைத் தமிழகம் இன்று சொந்த நாட்டினையே சுரண்டுகிறதே! இதற்குக் காரணம் என்ன அண்ணா? குற்றம் யாருடையது அண்ணா? ஒரு மொழிவைத்து உலகாண்ட தமிழகம்

இன்று அவரோடு மொழிக்குக் கல்லறை கட்டி, சாவுமணியடித்து வேற்று மொழிக்கு வளங்கூறி வாழ்த்துகிறது; இந்த அவல நிலையை நினைக்கும்போது நடுவு சார்ந்த நன்னெஞ்சம் கொதிக்கிறது! "காக்கை வெளிது என்பார் இன்சொலார் தாய்க்கொலை சால்புடைத்து என்பாரும் உண்டு" எனத் தரணிக்கே பேசும் உணர்ச்சி நாகரிகத்தை வாரி வழங்கிய தன்னலமற்ற தமிழ்த்தாய்க் கொலை புரிகின்றனரே! அறிஞர்களே! கலைஞர்களே! நாவலர்களே! பாவலர்களே! பேராசிரியர்களே! பெருவெள்ளமெனத் திரண்டோடி வாருங்கள்! நம் உயிருக்கு நேரான தமிழுக்கு அல்லல் இழைக்க முனைந்துவிட்டார்களே! ஐயகோ என்றனருந் தமிழே! உயர் தமிழகமே! உன்றன் நிலை இதுதானா?" என அறைகூவி அழைத்திடத் தோன்றுகின்றதல்லவா அண்ணா! நீர் வளமும் நிலவளமும் நிறைந்த நாடு நம் தமிழகம்! இப்படிப்பட்ட செல்வ வளங் கொழிக்கும் நாட்டில்தான் தொழில் வளர் குறைக்கப் படுகிறது; மக்கள் தொகையிலும்—பரப்பிலும்—இயற்கை வளங்களிலும்குறைந்த நார்வே வாழ்கிறது--சுவீடன் வாழ்கிறது—மலேயா வாழ்கிறது—இலங்கை வாழ்கிறது. அல்ஜீரியா வாழப் போராட்டம் நடத்துகிறது, அவ்வளவு ஏன் அண்ணா? நமது அண்டை வீடாகிய கேரளம் வாழ்கிறது—ஆந்திரம் வாழ்கிறது—கன்னடம் வாழ்கிறது ஆனால்....! மக்கட் தொகையிலும்—பரப்பிலும் மற்றுமுள்ள இயற்கை வளங்களிலும் நிறைந்த நம் தமிழ் நாடு தான் வாழமுடியாதா அண்ணா? அச்சிறு மண்டலங்கள் எல்லாம் வாழமுடியும் ஆனால்...! நமது வளமார் தமிழ்நாடுதான் வாழமுடியாதா? இந்த நிலை ஏன் அண்ணா? இதுதானா தமிழ்நாடு! இதைக் கேட்கின்ற நேரத்திலேதான் "அரசியல் நாகரிகம் உணராதவர்கள்" அடுக்கு மொழிதானே பேசத் தெரிந்தவர்கள் என்று ஏசுகிறார்கள் நம்மை. ஆனாலும் தளர்ந்துவிடவில்லை நாம்! கட்டுப்பாட்டை நெகிழவிடாமல், கண்ணியத்தோடும் பேசிக் கடமையை ஆற்றுகிறோம் நாம்! மாற்றார் தூற்றலையெல்லாம் தூண்டுகோலாக எண்ணி "போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும் தொடர்ந்து செய்வோம் நம் பணியினை" என நமது ஆக்கவேலையிலேசெயலாற்றுகிறோம்; வெற்றியும் காண்கிறோம்! உள்ளம் பூரிக்கிறது! ஆங்கிலம் இரண்டொரு வார்த்தையாகிலும் பேசத் தெரிந்தால்தான் கற்றவனுக்கு அழகு—அறிவுடைமை என்னும் காலம் மாறி—அரசியல் முதல் அடுக்களை ஈறாக ஆங்கிலம் பேசி வந்த காலம் மாறி "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணேன்! என்று உணர்ந்து "தேனினுமினிய தீந்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று கூறி "செந்தமிழ் நாடெனும் போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்கிற கட்டத்திற்கு வந்திருக்கிறோம்! இது நாம் கண்ட வெற்றியல்லாது வேறென்னவாக இருக்கமுடியும் அண்ணா! இதை உள்ளுந்தோறும் நினைக்குங்கால் உவகைப் பெருக்கெடுத்தோடுகிறதல்லவா! அந்த பேருவகையின் ஓட்டத்திற்கு இடைக்கால நாகரிகத்தால் 'பங்க்ரா நங்கல்' கட்டிவிடாமல்—ஓட்டம் தேக்கமளிக்காமல் தமிழர் கோட்டமெல்லாம் பெருக்கெடுத்தோடி வளம் பல காண முறை பல வகுப்பது நமது கடமையல்லவா! பொறுப்புணர்ச்சியல்லவா! ஆகவேதான், எனது தோழர்களையெல்லாம் அன்போடும் ஆசையோடும் அழைக்கிறேன்! பாசத்தோடும், பரிவோடும், அழைக்கிறேன்! நேசமுடன் உரிமையோடு அழைக்கிறேன் வாராய்! வாராய்! வாராய்! உடனடியாக வாராய்! தவறாமல் வாராய்! ஒத்துழைப்பு தாராய் என்று! இதில் என்ன தவறு இருக்கமுடியும் அண்ணா!!!

அப்படிக்கு அன்புள்ள தம்பி:

'அன்புத் தம்பி'.

SIR THEAGARAYA COLLEGE

MADRAS.

ANNUAL REPORT FOR 1957—'58

I have pleasure in presenting the 8th Annnal Report of the College.

STRENGTH

The College re-opened on the 1st of July 1957. The University authorities were pleased to grant us affiliation in the new 3 Year Degree Course. The introduction of the 3 Year Degree Course is a sequel to the introduction of the Pre-University Course. So the re-organisation of the University courses of studies has been completed in great part. Only post-graduate re-organisation is yet to be done with the abolition of the Honours Courses. It is hoped that in the years to come this College will provide instruction in post-graduate studies as well. *The sanctioned strength of the Pre-University is 400 and that of the First-Year of the Three-Year Degree Course is 160.* While there was a great demand for admission to the Pre-University Courses which could be hardly met, admissions to the Three-Year Degree Courses were disappointingly poor.

The College now offers the following courses :—

P.U.C.

Part I (*a*) English.

Part II (*b*) Tamil, Telugu & Hindi.

Part III Group A : Mathematics, Physical Sciences, Commerce and Psychology/Advanced English.

" " B : Mathematics, Physical Sciences, Commerce and Advanced Tamil or Telugu.

" " C : Mathematics, Physical Sciences, Logic and Advanced Tamil or Telugu.

" " D : Natural Science, Physical Sciences, World History, and Advanced Tamil or Telugu.

" " E : Natural Science, Physical Sciences, World History and Psychology/Advanced English.

B.A. (Two-Year Degree Course)

Part I : English.

Part II : Tamil and Telugu.

Part III Group (i-b) : Mathematics, Statistics and Economics.

" " (iv-a) : History and Commerce.

" " (iv-b) : Economics and History.

B.A. (Three-Year Degree Course)

Part I : English.

Part II : Tamil, Telugu and Hindi.

Part III Branch I : History—Major, Politics (Political Theory) and Outlines of General Philosophy — Ancillary Physics and Chemistry —Minor.

" " IV : Economics—Major, Commerce, Statistics or Political Science Ancillary and Physics and Chemistry—Minor.

B. Sc. (Three-Year Degree Course)

Part I : English.

Part II : Tamil, Telugu and Hindi.

Part III Branch I : Mathematics — Major, Physics—Ancillary and Economics and Commerce—Minor.

" " IV : Zoology—Major, Chemistry—Ancillary and Politics and Psychology —Minor.

The Intermediate Course has been abolished. The Two-Year Degree Course is on the verge of abolition. There will be no admission to the Two-Year Degree Course next year. For the first time in the history of the College, Science Courses at the Degree level were introduced with the approval of the University. But contrary to expectations the Three-Year Degree Course did not attract students. We were able to admit only 60 students to this course, most of them being in the B.Sc. Zoology Course.

WOMEN STUDENTS

For the first time women students were admitted to the Degree Course: The need for a Women's College in North Madras is badly felt and women students have to seek admission in the Colleges in the other distant parts of Madras. To obviate this difficulty and with the approval of the University women students were admitted at the beginning of this year. In accordance with University rules, necessary amenities have been provided for them. A lady member of the staff is also in charge of their welfare.

FINANCES

The College finances have been subjected during the year to a tremendous and unprecedented strain. First the re-organisation of the degree courses has cost us a lakh of rupees. Secondly we have been hit hard by a steep fall in fee income. *The strength of the College in the previous year was 840. It has dropped to 724, the Management losing fee income on account of 116 students having failed to join the College.* The explanation is simple but not heartening from our point of view. The old Intermediate Course with its strength of 560 students in both the classes was a source of considerable revenue to us. The Pre-University Course, a one year course, has only a strength of 400 students. We had hoped that this reduction in student strength would be off set by full admission to the Three-Year Degree Course and to the old Two-Year Degree Course. Though the Two-Year Degree Courses were full and even additional strength was sought for and obtained from the University, admissions to the Three-Year Degree Courses fell far short of expectations. Instead of admitting 160 students, we could admit only 60 students to these new courses. *So the fall in fee income was in the region of Rs. 20,000/- for the year.* It is our earnest prayer that this deficit will not recur next year.

While we were floundering in these difficulties we were hoping that the Union Government and the State Government would come to our rescue by giving us the grant promised by them. So far it has not materialised. Nevertheless it is our fervent prayer that some substantial help would be received before the close of the financial year.

Meantime with the co-operation of the popular cine artiste Mr. M. G. Ramachandran we have conducted a dramatic festival. This seems to be the only means available for raising money from the public. Last year a similar festival was conducted and a sum of Rs. 40,000 net was realised. The festival this year has yielded a sum of Rs. 50,000 net, thanks to the indefatigable efforts of Mr. M. G. Ramachandran. The College is grateful particularly to Sri Manali Ramakrishna Mudaliar who generously donated Rs. 20,000 from the Manali Charities and Srimathi Ponnammal wife of late Sri Mannadha Chettiar for her munificent donation of Rs. 10,000. We acknowledge with profound gratitude the donations from the following which were made in connection with the dramatic festival at the instance of Mr. M. G. Ramachandran :—

		RS.
1.	Mr. M. G. Ramachandran ...	5,000
2.	Central Publicities (A. V. M.)	5,000
3.	,, S. M. Sreeramulu Naidu.	5,000
4.	,, B. Nagi Reddy ...	2,500
5.	M/s. Narayanan & Co. ...	2,500
6.	,, Arasu Pictures ...	1,116
7.	,, Sarody Bros. ...	1,111
8.	,, Kasturi Films ...	1,001
9.	,, Pankaja Productions ...	1,001
10.	,, Bharat Productions ...	1,001
11.	,, Natesa Art Pictures ...	1,001
12.	,, A. L. S. Productions ...	1,001
13.	,, Padmini Pictures ...	1,001
14.	,, Savithri Pictures ...	1,001
15.	,, Kalpana Kala Mandir ...	1,001
16.	,, Vijaya Hind Productions.	1,001
17.	,, Ganesh Movetone ...	1,001
18.	,, Mr. A. C. Pillai ...	1,001
19.	M/s. Swastik Films ...	1,001
20.	,, Everest Movie Corporation.	504
21.	,, Jupitor Pictures ...	501
22.	,, Southern Movies ...	500
23.	,, Rajeswari Films ...	500

			RS.
24.	,,	Jayamaruthi Pictures ...	501
25.	,,	M. R. Productions ...	500
26.	,,	Raghavendra Pictures ...	251
27.	,,	Ravi Productions ..	250
28.	,,	T.K.S. Bros. ...	201
29.	,,	Ambal Talkie Distributors.	100
30.	,,	N. C. Rajagopal & Co. ...	100
31.	Mr.	M. A. Ethirajulu Naidu ...	100
32.	,,	A. Kasilingam ...	100
33.	,,	V. Namasivayam ...	100
34.	,,	A. M. Palaniappa Chettiar.	100
35.	M/s.	Venus Pictures ...	50
36.	Mr.	(Director) Masthan ...	50
37.	,,	Ramadas (Make-up) ...	50
38.	,,	Saravanabhava Unity Pictures ...	101
39.	,,	Bell Pictures ...	100

We take this opportunity to record our deep sense of gratitude to well-wishers of the College like Sri D. Kanniah Nayudu, Sri V. C. Sreeramulu Chetty (Trustees of the College), Messrs. Radharam Bros., Sri Ponneri Sriramulu Chetty & Co, Sri K. W. Subramaniam, Sri K. M. Varadarajan (A. C. Swamy & Co.) and Mr. Abdul Gafoor, (A. G. Stores) who are helping us in times of need.

BUILDINGS

The first floor of the new Science Block was put up to provide accommodation forthe B.Sc. Course in Zoology at a cost of about Rs. 32,000/-. The Government were pleased to sanction a half grant and this amount has been practically disbursed. The University authorities were pleased with all the arrangements made for the starting of the Zoology Major Course and affiliation was granted at the beginning of this year. The new Science Block which houses the P.U.C. and B.Sc. Courses in Zoology is now named after Sri Manali Srinivasa Mudaliar. The Zoology Block was declared open this year by the Hon'ble Sri P. V. Rajamannar, Chief Justice of the High Court of Madras, who was then Acting Governor of Madras, and a portrait of Sri Manali Srinivasa Mudaliar was also unveiled on the occasion by the Hon'ble Sri M. Bhaktavatsalam, Home Minister, Government of Madras.

The old building behind the Pre-University laboratory which contained the stores of the Chemistry and Physics Departments was completly remodelled on the suggestion of the University authorities. Ample storage space for chemicals and equipment is now provided. The first floor has been put up to accommodate the staff of the Chemistry and Mathematics Departments. The re-modelling has cost us about Rs. 11,300/-.

LIBRARY

We are now having 7179 volumes in the library. A sum of Rs. 2811/- was spent on the purchase of books during the year. Books are being added to every month. There were 13071 borrowers and 10,560 consultants during the year. Up-to-date and standard journals and magazines in English and other languages are an attractive feature of the reading room which is located in the library. We should like to express our thanks to the British Council and the U.S.I.S. for liberally helping up with gift books and periodicals from time to time.

HOSTEL

The College Hostel now consists of 3 blocks to accommodate nearly 150 students. During the year improvements were made to one of the buildings to provide additional accommodation for the Hostel strength has been growing in recent years. A sum of Rs. 20,000/- was spent on these improvements. It is proposed to name the newly remodelled block after Srimathi Ponnammal who has donated Rs. 10,000/-. The need for another pucca block still exists. The Management have applied to the Union Government for an interest free loan. If that is sanctioned construction of the new block would be proceeded with.

STAFF

The strength of the present staff is 47. The following new appointments were made during the year :—

Sri V. Loganathan appointed Tutor in English.

,, N. R. Srinivasan appointed on 23—7—57 Demonstrator in Phyisics and relieved on 17—8—57.

,, K. R. Mahadevan appointed Demonstrator in Physics vice Mr. M. R. Sanjeeva Rao granted lien for 6 months to join the Oxygen & Acetaline Co.

,, G. Sambamoorthy appointed Demonstrator in Chemistry vice Mr. C. K. Krishnamurthy resigned.

And the following changes on the staff also occurred :—

Sri C. R. Radhakrishna Sarma Lecturer in Telugu granted lien for one year to join the Sahitya Academy at New Delhi.

Sri G. Madan Mohan Rao, Lecturer in Natural Science promoted Professor.

Sri M. Rajamanickam, Lecturer in Tamil, promoted Professor.

Sri T. Kothandaramaiah, Lecturer inTelugu promoted Professor.

Sri A. Nagaraja Sarma, Demonstrator in Natural Science resigned.

Sri T. Dhanakoty granted lien for two years to take up the Principalship of the Khader Mohideen College, Adiramapattinam.

Srimathi Neela Radhakrishnan, Lecturer in History promoted Acting Professor.

Sri S. Subramaniam, Tutor in History, promoted lecturer in History.

Sri S. N. Balasundaram, Lecturer in History granted lien for one year to join the University as research scholar.

Sri K. B. Sridharan. Tutor in Commerce resigned.

It is with feelings of deep sorrow that we record the demise of Mr. Sambamoorthy, Demonstrator in Chemistry.

TUTORIAL SCHEME

For purposes of intensive supervision, guidance and instruction, students of the College are divided into batches of about 20 each and put in charge of a Professor or a Lecturer or a Tutor or a Demonstrator. Under the scheme the teacher is called a Tutor. It is the duty of the tutor to observe the progress of his wards at College and also visit them in their residences. Thus close contacts are established between parents and guardians on the one hand and teachers on the other hand. With the co-operation of the former many erring students have been reformed and brought back to a sense of rectitude and good behaviour. The discipline of the College depends to a large extent upon the successful working of the tutorial scheme.

SPORTS AND GAMES

The College Athletic Association has maintained its record of activities. To provide more games facilities to the students the College play grounds have been extended by the acquisition of vacant sites to the east of the College campus. The grounds have been levelled and a lay-out has been prepared to include Foot-ball Hockey and Cricket fields, Volley ball, Basket ball and Badminton Courts. A sports pavilion has also been constructed with a grant from the Union Government which will be useful during cricket tournaments. The students of the College went on a sports tour to Coimbatore and to the Kerala State. They played foot ball and cricket matches and won several of them.

N.C.C.

We have a platoon of 48 cadets. The strength was recently increased by the authorities. We have separately an Air Wing, Armoured Squadron and a Naval Wing. The N.C.C. is becoming more and more popular. Second Lieutenant A. D. Govinda Pillai, a member of the English Department, is the Officer Commanding. Two more members of the staff have been trained, Mr. N. Ramanathan to be in charge of the Naval Wing and Mr. Vittal Das to be in charge of the Armoured Squadron.

EXTRA CURRICULAR ACTIVITIES

The College has had its usual spate of extra-curricular activities. The students of the College took part in many Inter-Collegiate competitions and some of them secured the following trophies :—

1 First Circle Congress Committee Freedom Struggle Celebrations Oratorical Contes in Tamil—Minor Moses Class IV (iv-b) —3rd prize.

2. Telugu Oratorical Competition conducted by the Andhra Vithyarthi Vignana Samithi—S. Sriramachandra Sarma, Class IV (ib)—2nd prize.

3. Inter-Collegiate Weight Lifting Championship conducted by the Madras Stanley Medical College—A. M. Varadarajan, Class IV (ib).

4. Essay Competition in Tamil conducted by Law College, Madras—M. Shanmugam, Class IV—2nd prize.

5. One-Act Drama Competition in Tamil conducted by the Law College and the Engineering College—Individual prize won by Solomon Howie.

6. Jeevarathnam Memorial Cup condueted by the College—Won by the College students.

We have conducted as usual an Inter-Collegiate Debate in English for the award of

the Sri D. Kanniah Nayudu Rolling Cup, an Inter-Collegiate Debate in Tamil for the award of the Sir Theagaraya Rolling Cup, an Inter-Collegiate Debate in Telugu for the award of the Sri P. Ramaswamy Chetty Memorial Rolling Cup, and an Inter-Collegiate One-Act Drama Competition for the award of the Sri Jeevarathnam Rolling Cup.

CULTURAL WEEK CELEBRATIONS

The Cultural Week could not be celebrated as programmed during the 3rd week of January. It was shifted to February in view of the postponement of the Dramatic Festival that was to be conducted under the auspices of the Fine Arts Association. As part of the Cultural Week Celebrations One-Act Drama Competitions and also other literary competitions were held.

SOCIAL SERVICE LEAGUE

The league is one of the most active and popular of student organisations in the College. It is running an Adult Education Centre at Swathanthrapuram at Korukkupet which is a colony of depressed class families. A children's night school is also being run there. Milk powder, wheat and edible oils supplied by the Y.M.C.A. under the patronage of His Grace the Archbishop of Madras, are being distributed freely to the residents of these slums and also to the other social service centre run by our College students at Padavattamman Koil Street, Kondithope. Our students participated in a major project work, roadmaking at Amanambakkam. They laid a road about a mile long connecting the interior villages with the trunk road, thus helping to provide the villagers in the remote interior with facilities for improving their agriculture, trade and education. A local camp for boys was also conducted for 12 days under the auspices of the Bharat Sevak Samaj. The Student-Secretary Mr. Kittuswami has been the life force of the League.

COLLEGE CO-OPERATIVE STORES AND CO-OPERATIVE CREDIT SOCIETY

They are functioning efficiently and usefully. Out of the profits of the Co-operative Stores scholarships were awarded to bright and deserving students of the College.

Since its inception the College has been making rapid strides. Thanks to the unremitting and selfless labours of the Managing Committee of the College and the generous co-operation received from the [illegible] the College within the short span of [illegible] years has grown into a first grade institution offering both Humanities and Science [illegible] the Degree level. The College has got to impart instruction in other Science subjects as well viz. Physics and Chemistry. In this connection the authorities of the College have submitted proposals to the Union Government through the University of Madras for expansion of scientific studies which would necessitate the construction of additional buildings for the Physics and Chemistry Departments. The scheme would cost the Managing Committee roughly 8 lakhs and if the Union Government is pleased to give us a substantial grant we would be in a position to upgrade the College in these subjects as well. A full-blown Arts and Science College is an absolute necessity in North Madras. We are particulary interested in turning out efficient and competent graduates to man the industries, factories and other commercial institutions which are rapidly springing up in this part of Madras. The day is not far off when North Madras will become the industrial and commercial hub of the city. It is hoped that our College will be able to turn out the personnel required for these institutions. We earnestly request that those who are connected with the industrial concerns and firms in North Madras to give adequate support to our College in matters of finance and otherwise so that our aims and objectives will be fulfilled to the satisfaction of all concerned. We believe in quality and efficiency and so we are endeavouring unremittingly to fashion young men and women of fine and approved calibre.

In conclusion I wish to thank the Management for giving me their valuable and uniform support in running the College. I am grateful to my fellow teachers on the staff for all the assistance that I am getting from them. I am particularly obliged to the Head Clerk and his assistants in the office for the able and efficient co-operation they are giving me in the discharge of my administrative responsibilities.

I wish to thank on behalf of the Management Governments at the centre and in the state for the financial aid they have been giving us consistently and also to the authorities of the Madras University for the guidance and encouragement that we are receiving from them always.

On an occasion like this it is our sacred duty to remember with gratitude the Founders, the Theagaraya Chetty brothers, Theagaraya Chetty Senior and Sir Pitty Theagaraya Chetty Junior, also their illustrious grandson Sri P. Ramaswamy Chetty who helped to found the College.

[illegible] wish the outgoing students of the College good luck and godspeed.

Edited and Published by M. K. Shanmugam, M.A., L.T., Sir Theagaraya College, Madras-21.
and Printed by G. Bhavanarayana at the Weldun Press, 146, T. H. Road, Madras-21.

DEPARTMENT OF INDUSTRIES & COMMERCE

FOR YOUR REQUIREMENTS OF STANDARD

CONDENSERS

VOLUMETRIC WARES

GROUND GLASS WARES

GRADUATED WARES

HIGH VACUUM APPARATUS

AND ALL TYPES OF

SCIENTIFIC AND LABORATORY

GLASS WARE

and special glass apparatus of your design to serve your specific purposes if standard items are not suitable.

Please Contact:

GOERNMENT SCIENTIFIC GLASS TRAINING CENTRE,
Guindy, Madras - 16.

or

G[illegible]SS TECHNOLOGIST,
[illegible] Madras - 5.
(Tel[illegible]ne No. 84481/24).

35A
8-108

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)	வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)

S.F. 259A-6—1,00,000—30-1-84.